Koviloor Digital Library A.No: 3561
KOVILOOR LIBRARY, KOV[ILOOR] A. No. 3561 3561

உ

சற்குருநாதன்றுணை.



ஸ்ரீ காழிவேந்தாம் வள்ளல் திருஞானசம்பந்த ஸ்வாமிகளின்
மரபில் எழுந்தருளிய
கண்ணுடையவள்ளலி னருட்பெற்றவரும்
சமாதியெனுந் திருக்கோவிலி லெழுந்தருளிய வருமாகிய
மஹான் சாங்குசித்த சிவலிங்க நாயனாரவர்கள்
மீதியற்றிய

குருபாதஸ் துதிமாலையும்

சற்சங்கபோதினியெனு முபன்னியாசத்தின் மற்றோர் பகுதியும்

இஃது
சென்னைமாநகரைச் சார்ந்த ஆல்தோட்டத்தில் ஸ்தாபித்துள்ள
சற்சங்கபூஜித பக்தஜன சபையார்
வேண்டுகோளின்படி
ஷை நாயனாரின் சிஷியன் "நிரதிசயானந்தா"
அவர்களாலியற்றப்பட்டு
ஷைசபையாரின் நன்முயற்சியாலும்,
கையொப்பக்காரரின் பேருதவியாலும்,

சென்னை, இராயப்பேட்டை உட்ஸ் ரோட்
எம். ஸி. எஃப். அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டு
நாயனாரவர்களின் 11-வது குருபூஜா காலத்தில்
அரங்கேற்றஞ்செய்து விநியோகிக்கப்பட்டது.
1910ஹு ஜூன்மீ 21உ] [சாதாரண ஹு ஆனிமீ 8உ.

Koviloor Digital Library

Koviloor Digital Library

உ

ஸ்ரீ சற்குருநாதன் றாளிணைவாழ்க.

குருபாதஸ் துதிமாலை.

வினாயகஸ் துதி.

வெண்பா.

அளவின் முப்பத்தா றங்குலத்தை நாளும்
பிளவில் பிரணவத்தால் பேசி—உளவகல
குருபாதஸ் துதிமாலை கூர்வேன் குறிப்போர்வார்
விரையத் திலேநீங் கிட.

சந்தானாசாரியர் சமயாசாரியர் ஸ்துதி.

அறுசீர்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

ஆதித்த னருளாலே அகிலமது வேயோங்க
வருளிச் செய்த
வேதத்தி னுட்பொருளை யுணரவொணார் விழுமமது
மேவ வேண்டி
நாதத்தி னாயகனே பல்வடிவா யுலகடைந்து
நாதாந் தத்தை
சாதித்துத் தமிழ்செய்த சந்தானர் சமையர்பதந்
தலைமேற் கொள்வாம்.

மாஹான்கள் ஸ்துதி.

கலிவிருத்தம்.

சொல்லுணர்ந்து முடியுமுணர்ந்துமேல்
நல்லவினை கடுநிலைநிற்பவர்
வல்லவரவ ரியாவரேயாயினும்
தொல்லைத்தீர்பதந் தூற்றியுளங்கொள்வாம்.

பரமேஸ்வர ஸ்துதி.

எண்சீரடி ஆசிரிய விருத்தம்.

மோனமுமாய் மூன்றெழுத்தாய் முடிந்தான் றன்னை
மூன்றெழுத்தின் மூச்சுடராய் மூளைத்தான் றன்னை
தானமதா லைந்தெழுத்தாயத் தழைத்தான் றன்னை
தன்னுருவே சகலமுமாய்க் கரித்தான் றன்னை

Koviloor Digital Library

தீனர்களாய் நிற்பவர்க்கா தினன் றன்னை
திகழ்சுகமா முமைக்கெட்டாச் செல்வன் றன்னை
ஈனமற்றார் மனக்கோயி லிருப்பானை றன்னை
ஏற்றாத நாளெல்லா மிழிவாம் நாளே.

குருபாதஸ் துதிமாலா பதிகபஞ்சகம்.

நூல்.

உள்ளநாள் மட்டிலுழன் றோடித் திரிந்துநான்
உலகநெறி தனைபற்றி மேல்
உண்மையீ திதுவென்று பலவேறு மார்க்கத்தும்
ஒன்றைவிட் டொன்று கொண்டும்
கள்ளமிகு றைந்திட்ட மனதால் வெதும்பவும்
காணுமவர் களை மயங்க
கதியான நிததியா னந்தமுறை பவனன்ன
கடையனுன் பகழ வேட
வெள்ளத்தி லேமுழ்கி யாழ்ந்துக் கிடந்தவிவ்
வேழையைக் கண் விளித்தும்
வேதாந்த மேமுதல வருவகையி னந்தத்தின்
மெய்ப்பொரு ளளித்திருந் தும
சௌளச சிறூர்போன்று கைகழுக விட்டதனை
சிற்றினஞ் சேர்ந்து கெட்டேன்
சிறுமைதீர்த் தெனையுமோர் பொருளாக்கு மையனே
சிவலிங்க தேவ தேவே. (1)

அருட்டிறந் தன்னையோர் மொழியாக்கி தீக்கையாய்
அனுக்கிரக மேபுரிந் தும்
அப்யாச முறைமையும் ஆதனக் கிரமமும்
அடைவேவ மொழிந்திருந் தும்
மருட்டிறந் தன்னிலே மூழ்கியா னிறையுணர
வகைபற்று மிக மெலிந்து
மாயாத மாயாவை தன்னிலே கட்டுண்டு
வாடினே னனாதை யனே
இருட்டிறம தேகவும் ஞானவனு பூதியெனு
மின்பமதி லடைவி டாது
என்குருந மிவ்வடிமை யெய்தநீ கண்ணோக்கி
னேசமோ உனையி வகிலம்.

Koviloor Digital Library 9-1

திருட்டியின் கடையொன்றை கைகொண்ட வள்ளலே
தீனஜன நிஜபந் துவே
திருவடிப் புணையேற்றி நாயெனையு மாளுமெய்
சிவலிங்க தேவ தேவே (2)

கண்ணேக்க முடையபே ரறிஞர்கள் மெய்கொண்டு
கதிகாண நனி முயன்று
கண்டனர்க ளொளியென்று மின்னமும் பலவென்றுங்
கடையதாய் நாதமென் றுங்
கொண்ணேக்க மிதுதானும் நிஜமதனை யடையவே
கொண்டுசெலு மார்க்க மன்றி
கூடாது பொருளிதென வென்றதனை நீக்கியே
குரியிலாக் குரியை யருளி
உண்ணேக்க மதனின் நிலைத்துமே லேறவும்
உள்ளப் பதைப்பு கெடவும்
உளவோடு யூகமது பலவகைச் செப்பியும்
உற்றுணர வகை யற்றுமே
திண்ணேக்க மதுவாகி பகிர்முகப் பட்டலையுந்
தீயனேன் கதிசேரவே
திவ்வியதிரு வடிமலர் தீக்கைதந் தெனையாளுஞ்
சிவலிங்க தேவ தேவே. (3)

ஓங்கார மதனையே சமஸ்தமும் விவஸ்தமாய்
உள்ளுறையு மூர்த்திக ளுடன்
உபாசனை செய்திடில் உருவநா மங்காண
உதித்தெங்கும் உலவு கின்ற
ஆங்கார மதுவும் துலைந்துமேல் துடரற்று
ஆனவன் நெறியது தனுல்
அலையாமல் மனதுதான் கட்டுண்டு நின்றுமே
ஆனநற் சாந்தி யதனில்
நீங்காச் சுகப்பேற்றை மாறுமென வெண்ணியது
நிலையன் றெனக்க டிந்து
நிஜபதம தாயுள்ள பிரணவம தன்னிலே
நிலையான மோன வடிவை

Koviloor Digital Library

திங்கார கற்றவே போதித்துங் கைவிட்ட
தீயன்மேல் கருணை கூர்ந்து
திருவருள் சுரந்தெனையு மாண்டருளு மையனே
சிவலிங்க தேவ தேவே. (4)

பூமிதனில் மானிடப் பிறவிதனை பெற்றுமே
பொய்கொண்டு நின்றதன்றி
புகலிடம தாய்மெய்யை யோர்கண மதாயினும்
போற்றியறி யேன்புந்தி யில்
தாமதம் நிறைவதாய் கொண்டதல் லால்மற்றும்
சங்கையது தீரும் வண்ணம்
சாதுசங் கப்பழக் கஞ்செய்த தால்பெறுஉம்
சன்மார்க்க நெறிநின் றிடேன்
நேமமெனு மிருவகைத் தூய்மையொரு நாளெனினும்
நின்றுயான் கொண்டது மிலை
நித்தமாம் சொரூபசித் தாந்தமது பெற்றிடவே
நீடாசை தன்னி லுழலும்
தீமையது ஒழியவும் கோரினதை யடையவும்
செப்பினு யதுவும் விட்டேன்
சிறுமதிய னுயினே னுயிடினு மாண்டருள்
சிவலிங்க தேவ தேவே. (5)

போற்றி விருத்தம்.

அருளுருவா யாதியே யானாய் போற்றி
அதிலடங்கி யப்பாலு மானாய் போற்றி
உருவமோ டருவமுமா யுதித்தாய் போற்றி
ஊகமுளோர்க் குடலுறவாய் உதிப்பாய் போற்றி
நிருமலமாய் நின்றருளு நிறைவே போற்றி
நிர்க்குணமுங் கடந்தப்பால் நின்றாய் போற்றி
திருவுருவாய் மூலமதிற் றிகழ்வாய் போற்றி
சிவலிங்க தேசிகற்கே செய்தேன் போற்றி

வாழி விருத்தம்.

பவமதுகழித்தேயிங்கப் பாருளோர்மிகவேவாழி
அவமுராக்கன்மபக்தி யடைந்துளோர்மிகவேவாழி
தவமெனுமுனைமைகண்டோர் தாளிணைமிகவேவாழி
சிவலிங்கதேசிகோத்மன் திருவடிவாழிவாழி.

Koviloor Digital Library

சத்சங்க போதினி.

[முன்தொடர்ச்சி]

உ

சத்சங்கத்தை ஆஸ்ரயித்த எமது நண்பர்களே சர்வசாந்தியை யடைவதற்குற்ற அமனஸ்கத்தின் இலக்ஷணத்தை யடைவதற்கு யோக்கியதையான இராஜ யோகத்தையும் அதின் அப்பியாச முறைமைகளையும் சொல்லிக் கொண்டுவந்ததில் உங்களில் அநேகர்களுக்கு பலத்தசங்கை உண்டாயிருக்கக் கூடுமென்று நினைக்கின்றேன். அதற்கிணங்க உங்களின் உசாவுதல்களும் அவ்வண்ணமே இருக்கின்றனவாதலால் அதற்கேற்ற சமாதானங்களை குறிப்பிடுகின்றேன். அநேக மஹான்னியர்களும், அநேக சாஸ்திரங்களும், பஞ்சாட்சரமே முதல் சிவோகமிறுதியாக, உபாசனைக்கும் ஞானத்திற்கும் உரியதாகவிதித்துச் சொல்லியிருக்க இங்கே அதுகளை யெல்லாம் நிக்ரஹித்து சொல்லியிருப்பதோடு சாதனுக்கிரமங்களையும் வேறேவிதமாகவே சொல்லியிருக்கின்றது, என்பதே உங்களின் சங்கையாயிருக்கின்றது. இதற்கிணங்கவே சாஸ்திரங்களில்

"சிந்தனைபுறஞ் செலாச் சிவோகம் பாவனை
சந்ததமுஞற்றிடின் சமாதிவந்துறும்
அந்தநற்சமாதியா லறிவுமேலிடும்
இந்தநன்னிலைவிலே யிருக்கற்பாலையே".

என ஆன்றோர்கள் பணித்திருப்பதில் சிவோகம் பாவனையானது அவசியமென்றும், அப்படி பாவனை செய்வதினுல் பாவாதீதத்தை அடைதல் கூடுமென்று கட்டாயப்படுத்தி சொல்லியிருக்க, சிவோகமானது பாவாதீதத்தை யடைவதற்கு உரிபதல்லவென சொல்லுதல்கூடுமோ எனில் அப்படிச் சொல்லுதலே உசிதமானது. எப்படியெனில் மேலேகுறிப்பிட்ட திருப்பதிகத்தின் அபிப்பிராயமானது உங்களால் கருதியவண்ணம் சிவோகம் பாவனையே இடைவிடாது சிந்தனையானது செய்துக்கொண்டுவரின் அறிவின் பிரகாசம் எற்படுமென்றும் அதனுல் சமாதியடையப்படுமென்றும், கொண்டுள்ள அபிப்பிராயமானது வெளிப்படையாக இவ்விதமே காணப்படினும் உங்களின் விவேகத்திறத்தால் ஊன்றி கவனிக்கின் இதின் அபிப்பிராயம் இப்படியல்ல வென்பதும், வேறேயுளதென்பதும் விளங்காமல் போகாது. "சிந்தனை புறஞ்செலாது" எனும் வாக்கியப்பிரயோகத்தின் விவேகத்தையாழ்ந்துயோசிக்கின் சிவோகம்பாவனையில் சிந்தனைபற்றியிருக்க வேண்டியது அவசியமா? அல்லவா, என்பதை உணரக்கூடும் இங்கே "புறம் என்பதனைவெளியில் காணும்படியாகிய உலகதோற்றத்தில் சென்று உலவும் எண்ணத்தைத்தடுத்து சிவோகம்" என்னும்வாக்கியத்தினிடத்தில் எண்ணத்தைநிலைத்துநிற்கச்செய்தலை "சிந்தனைபுறஞ்செலா" திருத்தலென நீங்கள் நினைத்தல் கூடும். அப்படி நினைத்தல் இந்தப் பிரயோகத்தின் மீதுள்ள

Koviloor Digital Library

பூரணவிவேகத்தின் இலக்ஷணமானது தெரியாமல் மருக்ஷியடையச் செய்வதால் நீங்கள் இவ்விதம் அபிப்பிராயப்படுவது தவரன்றெனினும், உண்மையுணர்ந்த சாதுக்கள் உங்களை சாமான்ய திருஷ்டிகளாகமதித்தல் நிக்ஷயம். எப்படியெனில் ஒவ்வொருபொருளுக்கும், ஆதி, மத்யம், அந்தமென மூவகைஸ்தான விளக்கங்களுள்ளன வென்பது மறுத்தற்கு முடியாத விஷயம். இதில் மத்யத்தை யெடுத்துக்கொள்ளும்போது ஆதி, அந்தம், எனுமிரண்டும் இந்தமத்தியத்தின் இரண்டு முனைகளே ஆகின்றன. ஓர் முனையை ஆதியாகக் கொள்ளின்மற்றோர் முனை அந்தமென்பதும் அந்தமாயுள்ள அந்த முனையை யாதியாகக் கொள்ளின் துவக்கத்தில் ஆதியெனக் கொண்ட இந்த முனையானது அந்தமாக முடிவதும் பிரசித்தமான விஷயமன்றியில் மத்தியம்மாத்திரம் என்றும்மாருத ஒரேலக்ஷணத்தோடு விளங்குமென்பதும் மறுத்தற்குரியதன்றும். இதைப்போன்றும் இங்கே ஜெகம், ஜீவம், பரம். என்னும் மூன்றுலக்ஷணங்களில் ஆதியாயுள்ளது ஜெகமாகின்றது. இதனையே, பரம், ஜீவம், ஜெகம், என்னுமிடத்து, பரம் ஆதியாயிருக்கின்றது இதில் என்றும் மத்யமாயுள்ளது ஜீவபதமே இந்த ஜீவபதத்தை மனதென்று சொல்லப்படுகின்றது. இந்தமனதின் சங்கல்பசக்தியையே எண்ணமென்றுவது, சிந்தனையென்றுவது சொல்லப்படும். இந்த சிந்தனையெனுஞ் சங்கல்பமானது, தானெழுவதற்கு ஆதாரவாயுள்ள ஜீவபதத்தினுல் சொல்லியமனதினிடத்திலொன்றுவதுதான் கிரமமாகிய சாதனையேயொழிய, அது சிவத்தினிடத்தில் பொன்றினுலும்சரி, அல்லது ஜெகத்தினிடத்தில் பொன்றினுலும்சரி, அப்படி பொன்றுதலானது சிந்தனைபுறஞ்சென்றதாக சொல்லப்படுமேயன்றி வேருகச்சொல்லப்பட மாட்டாது. சிந்தனைபுறஞ் செலாது இருத்தலென்பது சிந்தனையாயுள்ள தான் பிறப்பதற்கு ஆதாரவாயுள்ள மனதினிடத்தில் அசைவின்றி நிற்குமாயின் சிந்தனை புறஞ்செலாது நின்றதாகும், அதையொழித்து, வேறே எதனிடத்து சிந்தனையானது பற்றி யிருப்பினும் சரியே. ஊன்றிக் கிடப்பினும் சரியே. சமாதி லக்ஷணத்தை யொருவன் அடைத லென்பது கூடாத காரியம். ஆகினும் சிவோஹம் சாதகம் செய்யும் ஒருவன் இந்த சாதகமாகிய தியான காலத்தில் உஷ்ண மிகுதியால் தியானித்துக் கொண்டிருந்த எண்ணமானது தனது கன சொருபத்திலிருந்து அநேக சிறு பகுதிகளாக பிளவுபட்டு நிற்பதினுல் அந்த அவசரத்தில் எண்ணமானது தொழிற்படுவதற்கு எற்ற சக்தியானது குறைவுபட்டு நிற்பதால் ஒருவகை அசதியும் நித்ரையின் ஓர் பகுதி மயக்கமும் எற்படும். இந்த நிலைமையை மனதின் தொழிலற்ற நிலையென்றும் சமாதியின் லக்ஷணமென்றும் இந்த சாதகன் நினைக்கின்றதானது சுத்த தவருதலுடையதாகின்றதேயல்லது வேறல்ல. இப்படிநாம்சொல்வதினுல் உங்களில்அநேகர் ஆக்ஷேபிக்கக்கூடும். ஆயினும் ஜுரம் என்னும் வியாதியினுல் பீடிக்கப்பட்ட நோயாளியின் நிரேகத்தின் மீது எறியுள்ள உஷ்ண மிகுதியால்

Koviloor Digital Library

தேக தத்துவத்தின் அந்தர்பாகத்தின் தொழிற் கருவியின் சக்திகள் குறைவுபட்டு எண்ணமானது அசைவற்று நின்றுவிடும் அனுபோகமானது உங்களில் இந்நோயினால் பிடிக்கப்பட்டு குணத்தை யடைந்த அநேகர்களுக்கு தெரிந்திருக்கக்கூடும். இதன்றியும், நெருப்பின் சமீபத்தில் நின்றுக்கொண்டு வேலை செய்யும் போதும், மிகுந்த உஷ்ணமான காலத்தில் நடுப்பகல் நேரத்தில் குளிர்ந்த காற்று சகாய மில்லாமலும், தலையின் மேற்புரமாகிய கபாலத்தின் மேல்வளையானது நேரே சூரிய உஷ்ணத்தினால் தாக்கப்படும் பொழுதும் எண்ணமானது பல பகுதிகளாக பிளவுபடுவதும், அசதியோடு நித்திரையின் மயக்கத்தைப்போன்ற ஓர் வகை மயக்கத்திற்குச்செல்ல எண்ணமானது ஆயத்தப்படுவதை சற்றே கவனிக்கில் நாம் ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ளக்கூடும். ஆனதினால் முன்னே நியான காலத்தில் ஏற்பட்ட இந்த உஷ்ண மிகுதியின் நிலைமையை சமாதி யென்று கருதிய அந்த நிலைமைக்கும், இந்த நிலைமைக்கும் உள்ள தாரதம்மியம் என்ன வென்பதை விவேகிகளே உய்த்துணர்ந்து கொள்ளவும்.

இதன்றியில் சில சாதகர்கள் மேலே குறித்த "சிவோஹம்" அல்லது நான் சிவமாகின்றேனென்னும் பாவனையை குறிப்பிடும் உபாசனு சுலோகத்தையே மஹா மந்திரமென்றும், ஓர் மொழியென்றும், மௌன மென்றும், இதனையே ஸ்ரீ கைலாஸபதியே தக்ஷிணாமூர்த்தி யெனும் குரு மூர்த்தியா யெழுந்தருளி வந்து ஜனகாதி நால்வர்களுக்கு சொல்லாமற் சொல்லிய சின்முத்திரை லக்ஷணமென்றும் சொல்லுகின்றார்கள். அப்படி பரமேஸ்வரன் சொல்லாமற் சொன்னது எனின் இந்த சிவோஹம் எனும் மஹா மந்திரமானது ஜெபஞ்செய்வதற்கு உரியதாய் இருக்கக்கூடாது. இது அப்படிக்கில்லாமல் நான்கு எழுத்துகளின் பந்திப்புக்களாலாகிய இரண்டு பதங்களாகவும் சாமான்யமாக சிறுவர்கள் முதல் யாவர்களாலும் ஜெபம் செய்வதற்கு கூடுமானதாய் உள்ளதினாலும் எந்த மந்திரமானது நாவினால் உச்சரிப்பதற்கு வசப்படுகின்றதோ அவை யாவும் எச்சிலின் சம்பந்தத்தோடு சேர்ந்துள்ளது ஆனதினால் இதுகளை மந்திரமென்னும் பெயரினாலழைக்கப் பட்டாலும் இந்த மந்திரங்களானது இனிமையென்று சொல்லும் சுகப்பே ராகிய சைதன்னிய லக்ஷணத்தை யடைவதற்கு ஏற்றதாகாமல் போய்விடு கின்றபடியால் இதனையே ஜெனகாதிகளுக்கு சாக்ஷாத் பரமசிவம் அருளிச் செய்தனர் என்று சொல்லுவது பொருத்தமில்லாமல் போய் விடுகின்றது. அப்படியல்ல இதனையே குறிப்பிட்டுச்சொல்லினரெனில், இந்த மந்திர மானது யாவராலும் சொல்லுவதற்கு கூடுமானதாகையால் பரமேஸ்வரன் சொல்லாமற் சொல்லினரெனும் வார்த்தை உறுதியற்றதாய் போய்விடு மென்பது திண்ணம். ஆகையினால் சாக்ஷாத் பரமேஸ்வரன் ஜனகாதி களுக்கு போதித்தலானது சிவோஹமல்ல வென்பதும், இதைவிட வேறாகிய மஹா மந்திரமானதும் பிரணவமென்று சொல்லும் ஓங்காரத்தின் மூன்று

Koviloor Digital Library

அக்ஷரங்களில் எந்த அக்ஷரத்தை மூகாக்ஷரமென்றும், மௌனாக்ஷர மென்றும், ஒரு மொழியென்றும், சொல்லப்படுமோ அந்த எழுத்தையே வாக்கினால் உச்சரித்துச்சொல்லக்கூடாமையால், குறிப்பினால் உணர்த்தி யிருக்கின்ற சின்முத்திரையின் இலக்ஷணத்தை நீங்கள் ஒவ்வொருவரும் ஊன்றி கவனித்து தெரிந்துக்கொள்ளவும்.

"ஏதட் யோவாக்ஷரம் கார்கி, விதித்வாஸ்மால்
லோகான்ப்ரைதி சக்கிருபணு."

என வும்

"ஓமென்ற அக்ஷரந்தானுமுண்டு வதி
லூமையெழுத்து மிருக்குதடி
ஆமிந்த எழுத்தைத்தானறிந்தே விளை
யாடிக் கும்மியடியுங்கடி."

எனவும், சுருதிகளும் ஆன்றோர்களும், விவரித்திருப்பதினால், பரமேஸ்வரன் ஜெனகாதிகளுக்கு விவரித்துள்ள மஹா வாக்கியத்தின் கிரமமானது ஓங்காரத்தின் அரைமாத்திரை, அமாத்திரை யெனும் அரஸ்வம், பூரணுஸ்வம் என்று சொல்லும் மௌனாக்ஷர கிரமத்தையும், இந்த மௌனாக்ஷரமானது தெரிந்துக்கொள்ளும் அநுஷ்டான கிரமமாகிய நாதாநு சந்தானத்தையும் போதித்தனர் என்பதில் சம்சயமே கிடையாது. இதில் அக்ஷரம் ஈதென உணர்த்துவான் வேண்டி பெரிய விரலோடு ஆள்காட்டிவிரலையும் சேர்த்து ஓர் விருத்த வடிவமாக்கி குறிப்பினால் உணர்த்தியதோடு நில்லாமல் நாதலக்ஷணம் விளங்குவதற்காக வேண்டி பிராண வாயுவை உறத்து சப்தித்தலென்னும் நெட்டுயிர்ப்பைக்கொண்டு விளக்கியும் இருக்கின்ற இலக்ஷணமானது, மனிதர்முதல், தேவர் கடையாயுள்ள யாவத் பிராணி சமூகங்களும் அறிந்து, அநுஷ்டித்து உஜ்ஜீவித்தற்குரியதாம். இதன்றியில் குண்டலாகாரமாக உள்ள பெருவிரலில் தொங்க விட்டுள்ள மணிவடமாகிய ஜெபமாலையின் குறிப்பினால் விளங்கும் இலக்ஷணமானது முன் சொன்னதில் மிகுதியும் கவனிக்கத்தக்கதாம். இப்படிக்கு குண்டலாகாரமாக சேர்ந்த இரண்டு விரல்களை நீங்க மற்ற மூன்று விரல்களையும் மேலே நீட்டிக் காட்டியிருக்கும் குறிப்பினால் உணர வேண்டிய லக்ஷணமானது முன் சொன்னவற்றிலும் சிரேஷ்டமாக கவனிக்க வேண்டியதாகின்றது. இடது அஸ்தத்தை கீழேகுறித்து காண்பித்திருக்கும் அபயாஸ்தமென்று சொல்லும் அஸ்தக்குறிப்பினால் நாம் உணரவேண்டிய லக்ஷணமானது யாவற்றிலும் முக்கியமாக கவனிக்க வேண்டியதாகின்றது. இந்தக் குறிப்பின் இலக்ஷணங்களை ஓர்ந்து நாமும் அதன்பிரகாரம் அநுஷ்டித்தால் சாக்ஷாத் கார்த்தையடைவோ மென்ப

Koviloor Digital Library

தில் ஓர்த்ரணமும் ஆக்ஷேபனையே கிடையாது. இந்தச் சின்முத்திரையின் குறிப்பில் முதல் இரண்டுவிரல்களுளே ஏற்படும் விருத்தத்தினல் வடமொழியில் பூரணானுஸ்வமென்று சொல்லும் தென்மொழியின் மகாரவொற்றின் அக்ஷரலக்ஷணத்தையே விளக்கிக் காட்டினரென்பது சாமான்யதிருஷ்டியுடையவர்களால் இதனது கிரமலக்ஷணம் யூகித்து உணர்தற்கு கூடாமையாயுள்ளதால் அன்னவர்களால் மறுத்தற்குரியதாயினும் யூகித்து உணரும் புத்தி தீக்ஷண்யத்தின் விசேஷத்திரமைப் பெற்றவர்களாலும் அநுஷ்ட்டான லக்ஷணந்தெரிந்த சத்ஜனர்களாலும் எந்தவிதத்தாலும் மறுத்தற்குறியதன்றாகின்றது.

வலது அஸ்தத்தின் கட்டை விரலில் தொங்கவிட்டிருக்கும் தாழ்வடத்தின் குறிப்பானது பிராணனென்று சொல்லும் சுவாசத்தின் (அதோமுகம் ஊர்த்வமுகம்) என்று சொல்லும் கீழ்நோக்கி செல்லுதலையும், மேல் நோக்கி செல்லுதலையும், ஆகிய இந்த விவரங்களை யுணர்த்துகின்றது. இதன்றியில் மேலே நீட்டி காண்பித்திருக்கும் மூன்று விரல்களினல் இந்த கிரமத்தை ஆஸ்ரயித்து அதன் வழி ஒருவன் அப்பியாசிப்பனேல் அவனல் அடையப் பெறும் சச்சிதானந்தமெனும் மூவகை இலக்கணங்களையும் குறிப்பால் உணர்த்தியதாகின்றது. மற்றும், அபயாஸ்த மெனும் இடது அஸ்தத்தால் குறித்துக்காட்டிய இடமாயுள்ள சாக்ஷாத் சங்கரமூர்த்தியின் இரண்டு பாதங்களையும் பற்ற வேண்டுமென்றும் அப்படி பற்றினேர்களுக்கே பயமாயுள்ள ம்ருதமானது நீங்கி அபயமாயுள்ள அம்ருதத்தை அடையப் பெறுகின்றானதினல் இந்தக் குறிப்பை பற்றியே இதனைச் சுட்டிக் காட்டிய அஸ்தத்தை அபயாஸ்த மெனும் பெயரா லழைக்கப்படுகின்றது, ஆனலும் இந்த அபயாஸ்தத்தினல் குறிப்பிட்டுள்ள லக்ஷணத்தை யுணரச் சக்தியில்லாதவர்கள் எப்ரபோ, ஏமாதேவா, ஏசர்வேஸ்ரா, சங்கரா ஸயம்போ, எம்மை நமது திருவடிகளில் சேர்பித்து இரக்ஷிக்க வேண்டுமென்று இறைஞ்சுதலை நாம் இன்றும், என்றும்காணக்கூடும். இதின் கிரமமுணர்ந்தோர் சாக்ஷாத் ஸ்வயம்புவின் ஸ்ரீபாதமென்னும் கால்கள் இரண்டும் சூரியகலை, சந்திரகலை யென்று சொல்லும் பிராண உதானவாயுக்களேயென்று உணர்ந்து இதனது லக்ஷணம் தெரியாவிடில் பிராணயாமமாதிய கர்மயோக அப்பியாசமாவது மந்தரயோகமுதலிய ஞானயோக அநுஷ்ட்டானமாவது செய்வதற்கு முடியாதானதினல் இதின் லக்ஷணங்களையும் மற்றும் யாவற்றுக் கிரமங்களையும் முறையே யுணர்ந்து சர்வசாந்தியைப் பெற்றுக் கொள்ளுகிறார்கள். இதுவே, ஸ்ரீ தக்ஷிணாமூர்த்திகள் ஜனகாதிகளுக்குக் குறிப்பினல் உணர்த்திய சின்முத்திரையின் லக்ஷணமே யொழிய வேறே கிடையாது. ஜனகாதிகள் மகா தீக்ஷண்யமானபுத்தியின் விசால தர்மத்தை யடைந்துள்ள உத்தமோத்தமர்களானதால் இத்தக் குறிப்பினின்றே தாங்கள் மேல் அநுஷ்டிடித்துக் கொள்ளவேண்டிய சகலத்தையும் உணரப்

Koviloor Digital Library

பெற்று அதன்பிரகாரமே அப்பியாசித்துக் க்ருதார்த்தர்களாயினார்கள். ஆன தால்நாம் ஒவ்வொருவரும் பெரிதும் முயன்றுவது அவ்வண்ணம் அநுஷ்ட்டித்துவரின் அப்பேற்றினையடைதலென்பது திண்ணம். ஆனால் ஜன காதிகள் அநுஷ்டித்த கிரமங்களெதுவோ என்பதனை நாம் இங்கே விளக்கிச் சொல்லவில்லை யென்று ஒருவரும் சந்தேகிக்க வேண்டாம். இந்த அநுஷ்ட்டான கிரமத்தையே மந்தரயோக முதல் அமனஸ்க யோகம்வரையில் ஐந்து பகுதியாகவும் விகல்பச மாதிமுதல் சகஜசமாதி வரையில், ஐந்து வகையான சமாதிகளாகவும், பூரணமாக விளக்கி முன்னமேயே விவரித்திருக்கின்றேன் அதனால், இங்கே அந்த அப்பியாசலக்ஷணங்களை விவரிக்காமல் விடுகின்றேன். ஆனாலும், சிலர் சின்முத்திரையின் சேர்க்கையின் அடையாளங்களை தேகப்பகுதியில் நாக்கின் அடியண்ணத்தோடு உண்ணுவானது சேரும் இலக்ஷணமென்று, சொல்லுகின்றார்கள் இந்த ஸ்தானமானது நாதானு சந்தானம் தெரிந்துகொள்ள வேண்டிய ஒருவனுக்கு நாதாக்ஷரங்களை தெரிந்துக் கொள்ளவேண்டிய தேகத்தின் முதல் ஸ்தானமே யொழிய சின்முத்திரையில் குறிப்பிதுள்ள வட்டாகாரத்தில் விளங்கும் இலக்ஷண மல்ல வென்பதை நீங்களே யூகித்து உணர்ந்து கொள்ளவும்.

இதன்றியில் சிவோஹம் என்னும் மகாமந்திரத்தை ஜெபிக்காமல் ஜெபித்து நிற்பின் மனமானது ஏகாக்ர தன்மையடைந்து சித்விலாசத்தின் இலக்ஷணத்தை யுணர்ந்து தான் அப்படியே யாகின்றதென்று சிலர் சொல்லுகின்றார்கள். இதுவும் சுத்தத்தவறுதலுடையதே யாகின்றது. எப்படியெனில், ஜெபிக்காமல் ஜெபித்தலென்றால் எண்ணத்தில் ஏதாவது ஓர் மந்திரத்தை தியானபரமாக நிருத்தி அப்படி நிருத்திய தியான நாட்டத்தை இலக்ஷியமாக்கி அந்த இலக்ஷியத்தின் மீதுமனதைபொருத்தி வாக்கினால் ஜெபிக்காமல் நிற்பதாகிய செய்கையையுடையதாகின்றது. இப்படி நிற்பின். (ஏகாக்ரம்) ஒன்றை மாத்திரம் கிரகித்து நிற்றலென்னும் செய்கையை எண்ணமானது அடையப்படுகின்றது உண்மைதானாயினும், இதற்கு இந்த சிவோஹம் ஒன்றுமாத்திரமல்ல உலகத்தில் பலபேத ரூபமாக காணப்படும் வஸ்துக்களின் எந்த நாமத்தையாவது முன் சொன்ன பிரகாரம் இலக்ஷியப்படுத்திநிற்பின் இதே இலக்ஷணத்தை யொருவனடையக்கூடும். திருஷ்ட்டாந்தமாக ஆங்கிலதேசத்தில் லார்ட்டென்னிஸன் என்னும் மகாகவியொருவர்தனது நாமமாகிப் டென்னிஸன் என்பதையே நாமோச்சரணம், செய்து மேலே குறிப்பித்த நிலைமையை யடைந்து அங்கிருந்தும் எத்தனைத் தெரிந்துச் சொள்ள வேண்டியதோ அதனை தெரிந்து, அதின் சகாயத்தால், அப்பியாசலக்ஷணத்தையடையப் பெற்றவராகி தமது அநுபவ விலாசத்தை, விளக்கியுள்ள தத்வத்தின் நியாயப்பாங்குடைய சொரூப சித்தாந்தத்தின், இலக்ஷணத்தை விளக்கிக்காட்டும் அவருடைய கவித்துவங்களை மொழிபெயர்ப்பின் சாக்ஷாத்பகவன் கிருஷ்ண பரமாத்மாவின் அபிப்பிராயமும் இவரின்

Koviloor Digital Library

அபிப்பிராயமும் ஒன்றேயென்பது செவ்வனே புலப்படும். இக்கவிகளானது நிரம்பிய ஆங்கிலப் பயிற்சியுள்ளவர்களாயும் தத்துவசாஸ்திர ஆராய்ச்சி செய்துள்ளவர்களாயுள்ள நம்மவர்களுக்கு இதனுடைய கிரமம்விளங்கும். இப்படி சொல்வதினால் முன்னே நாம் நாமஸ்மரணம் உபாசனைமுதலியவைகளை நிந்தித்தது, இப்பொழுது அதனையே ஒப்புக்கொண்டதாகநினைத்து ஏமாந்துபோகவேண்டாம். இதின் சாராம்ஸம் உண்மையுணர்ந்தார்கள் ஒவ்வொருவருக்கும் தெரியுமானதினால் அப்படிப்பட்ட மஹனீயர்களை நாம் அடுத்து விசாரம் செய்துள்ள சூட்சும இலக்ஷணங்களை உங்களுக்கு சொல்லுகின்றேன். அதாவது, முன்குறிப்பித்த கிரமப்படியே ஜெபியாமல் ஜெபித்தவென்னும் நாட்டத்தில் ஒருவனின் எண்ணமானது நிலைத்துநிற்குமவசரம் (Hypnotic sleep) ஔஷதப் பிரயோகங்களினால் உண்டாகும் நித்திரையைப்போன்று ஓர்வகை லாகிரியோடுங் கூடிய நித்திரா சோக்கமானது உண்டாகும். இந்த இலக்ஷணத்தை சாதகன் தூங்காமல் தூங்குதலென்னும் நிலைமையை தான் அடைந்து விட்டதாக நினைத்து ஏமாந்து போய்விடுகின்றான் இப்படியேமாற்றத்தையடையும் அநேகரில் சிற்சில விவேகிகள் மாத்திரம் இது தூங்காமல் தூங்குதலென்னும் நிலைமையல்லவென்றும், இதுவே அந்தநிலைமையாயின் சொரூபவிளக்கமும் ஆனந்தபிராப்தமும் உண்டாகவேண்டுமல்லவா? அப்படிக்கில்லாமல் ஓர் க்ஷணமும் தெளிவென்பதில்லாமல் மறுபடியும் ஜாக்கிரதத்திற்கு வந்தவுடன் தினமானம் சென்றடையும் சுழுப்பத்தியைப்போன்ற அந்தகாரமே இருந்தது என்னும் ஸ்மிருதியானது அஞ்ஞானவிளக்கமேயென்றுங் கருதி இவ்வகையான மயக்கத்திற்கு எண்ணமானது செல்லாமலிருப்பதற்காக மிகுந்த பிரயாசைப்பட்டு தடுத்துக்கொண்டேவரின், அநேக நாட்களுடைய பழக்கங்களுக்குப் பின்னர் கொஞ்சம் மயக்கமும், தெளிவுங்கலந்த ஓர் வகைநிலைமையை அடைதல் கூடும். இந்த இலக்ஷணத்தை சமாதி இலக்ஷணமென்று சிலர் கருதி ஏமாந்து போய்விடுகின்றார்கள். இதனிலும், ஏமாராது நிலைத்து நிற்கும் சிலருக்கு ஓர் வகையான ஒலியானது கேழ்க்கப்படும். அப்படி கேழ்க்கப்படும் சப்தத்தை ஈதென்னமோ வென்று அசட்டைசெய்து விட்டுவிடாமல் அதைப்பற்றின், இந்த நாதமானது சங்கு சமுத்திர இறைச்சல் போன்ற பலவிதமான நாதங்களாக விளங்கிக் கொண்டே வந்து முடிவில் பிராணனின் ஸ்வய நாதமானது விளங்கும். அப்படி விளங்கும் இந்த நிலைமைதான் சாக்ஷாத் காரத்தை யடைந்து கொள்ளுவதற் குரியதான முதல் படியானதால் இந்தசாதகன் இன்னமும் இதின் இலக்ஷணம் இன்னதென்பதை தானேயூகித்து தன்னிலேயுணர்ந்துக் கொள்ளுதல் கூடும். அல்லது இந்தக் கிரமம் தெரிந்துள்ள பெரியோர்களையடுத்து விசாரித்து அதன்படி யநுஷ்டித்து தனதுயதார்த்த நிலைமையை பெற்றுக்கொள்ளவுங் கூடும். அப்படிக்கில்லாமல் இந்த நாதத்தோடு சர்வமும் முடிந்து விட்டதாக கருதுபவன் தன்னையடைய முடியாதென்பதையும், அப்படி முடியு

Koviloor Digital Library

மென்று நினைக்கின் அவனென்னவாவானென்பதையும் நீங்களே யூகித்துணர்ந்துக் கொள்ளவும். இதினால் நாமஸ்மரணம், உபாசனை முதலானதுகளை நாம் ஒப்புக்கொணடோமாவென்பதும், இல்லையாவென்பதும் நன்றாக விளங்குகின்றதல்லவா? எந்த வகையான நாமங்களும் இல்லாதபடிக்கே யேதேனும் ஓர் வஸ்துவை ஊன்றிப் பார்ப்பதிலிருந்தே ஜெபியாமல் ஜெபிப்பதெனும் நாட்டத்தின் இலக்ஷியத்தை யொருவன் பெற்றுக் கொள்ளக் கூடுமென்பதை சற்று ஆழ்ந்து யோசிக்கின் உங்களில் ஒவ்வொருவருக்கும் விளங்குமென்பது உறுதிப்பாடு.

இதன்றியில் "சிவோஹம்" எனும் இம்மகாமந்திரமானது மகா பெரியோர்களாலும் பல சாஸ்திரங்களாலும் ஒப்புக்கொண்டிருப்பதாயினுஞ் சரியே, பாவனுபரத்திலாவது சிரேஷ்டத்தையுடையதென்று சொல்லலாமெனில் இதனினுஞ் சிலாக்கியமான "சர்வம் ப்ரஹ்மம்" என்னும் மந்திரமானது மேலேயுள்ளதால் அதனபிப்பிராயத்தை நோக்கின் அதனிலும் சிவோஹம்" தாழ்ந்தபடியில் உள்ளனவாகின்றது. இங்கே "சிவோஹம்" அல்லது "சோஹம்" என்னும் பதங்களிடத்தில் ஓங்காரமானது முழுதும் கலந்திருப்பதால் இதுவே சர்வசிலாக்கியத்தையுடைய தென்று சிலர் ஆக்ஷேபிக்கக்கூடும். ஆனாலும் ஓங்காரத்தின் பதம் முழுவதும் கலந்துள்ளதென்பதில் ஆக்ஷேபனையேகிடையாது. இதின் அர்த்தமானது இதை சிந்திப்பவனை தன்னைமாத்திரம் சிவம் அல்லது ஆனந்தமெனுங் கருத்தைதழுவி காண்பிக்கின்றது. இங்கே ஒருவன்தன்னை ஆனந்தியென்றால் அயலையென்னவென்று சொன்னதாகும் துக்கியென்று சொன்னதாகுமல்லவா? இவ்வகையான அர்த்தத்திற்கும் இது இடந்தருகின்றபடியால் இதனால் பேதக்ஞானம் பிறந்துத்வேஷமானது வளர்ந்து வருமென்பது நிக்ஷயம். சர்வம் பிரஹ்மம் என்னில் இந்தவாக்கிய உச்சரணம் செய்ததன்னையும் அயலாயுள்ளயாவற்றையும் ஒக்க அணைத்துக்கொள்ளுகின்றபடியாலும் யாவத்ரூபங்களும் பிரமமேயென்று கொள்ளும் புத்தியின் திடத்தாலும், நாம்காணும்படியான ஒன்றின்மீதுள்ள உயர்வும், மற்றொன்றின் மீதுள்ள தாழ்வும் நீங்கி எண்ணமானது சமத்வலக்ஷணத்தை யடையப்பெற்று எத்தனையோ வகையானகுற்றங்களிலிருந்து விலகிக்கொள்வதோடு த்வேஷத்தையுங் கெடுப்பதற்கு இதனிடத்து யோக்கியதையிருக்கின்றபடியால் சிவோஹம்பாவனையை விட சர்வம்ப்ரஹ்மம் என்னும் பாவனையானது எத்தனையோ ஆயிரம் பங்கு மேன்மையுடைய தாகின்றது. ஆனாலும் நான் ஜீவன், நான் ஜீவனென்று, அநேக காலபரியந்தம் நம்பிக்கொண்டிருந்த பழக்கத்தின் வாசனையானது கழிவதற்காகவேண்டி சிவோஹம் பாவனையை பெரியோர்களும் சாஸ்திரங்களும், விதித்ததேயன்றி வேறல்ல வென்பது கவனித்தற்குரியதாம். ஆனாலும் இதனில்ஓங்காரத்தின் இலக்ஷணம் நிரம்பியுள்ளதானதால் இதுவேசர்வசிலாக்கியமான மாகமந்திரமென்று சிலர் ஆக்ஷேபிக்கக்கூடும். "ஸோஹம்" எனும் இந்தப்பதத்தில் பிரவிருத்தியின் சம்பந்தமாயுள்ள சகார, அகாரங்

Koviloor Digital Library

கனேச்சேர்த்து, ஒருவன்ஜெபித்துக்கொண்டு வருவானாயின் அவனெப்படி வர்த்தியைபெருதல் கூடும் இவன் க்ரமேணமாக உச்சரித்துக்கொண்டு வரின் இதிலுள்ளசகார அகாரங்கள், அழிவுற்று சர்வசிலாக்கியத்தையுடைய பிரணவமென்று சொல்லும் ஓங்காரதியானம் சித்திக்கின்றதென்று சொல்ல லாமெனில், இந்தபிரணவமான ஓங்காரத்தை சமஸ்தப்பிரணவம், விவஸ் தப்பிரணவம், என்னும் இரண்டு பகுதிகளாக பிரித்து சமஸ்தப்பிரணவமா கிய ஓங்காரத்தின் முழுஅம்ஸத்தை பிரம்மமாகவும், அகாரமாதிய இந்த ஓங் காரத்தின் அம்ஸங்களை வைஸ்வானராதி மூர்த்திகளாகவாவது, ப்ரத் யும்னமுதலிய மூர்த்திகளாக்வாவது தியானிக்கவேண்டுமென்று, உபநிஷத் துக்கள்விதித்திருப்பதால், ஸோஹம் பாவதியானத்தை விட ஓங்காரபாவ தியானமே சிரேஷ்டமுடையதல்லாமல், உபாசித்தற்கு மிகுந்த சுலபமாயி ருப்பதோடு, உபாசகனுக்கும், ஸோஹம் பாவமானது தரும்பலப்பிராப்தத் தைவிட எத்தனையோர் பங்கு அதிகமான பலப்பிராப்தத்தை ஓங்காரதியா னம்தருவதால் அதனிலும் இதுவே சர்வ சிலாக்கியத்தையுடையதாகின்றது இந்த சிவோஹத்தையே அம்ஸம் அல்லது அம்ஸோ என்னும் பதமாக மாற்றி வாக்கினுல் ஜெபிக்காமல் நாசியின்வழியேயோடும் உஸ்வாஸநிஸ்வா ஸத்தினுலேயே ஜெபம் செய்யும் சிலகிரமங்களுமிருக்கின்றது. இந்த லக்ஷணமானது பிராணுபாமத்தை மேல்கொண்டு வாய்வுதாரணையைபலப் படுத்தும் யோகிகளுக்குரியதானதால், நாம் பிராணுயாமத்தைப்பற்றிச்சொல் லும் அவஸரத்தில், அம்ஸம் அல்லது அம்ஸோ என்னும் மந்திரங்களானது முன்னுல் நாம் சொல்லியுள்ள வங், சிங், அங், என்பவைகளைப்போன்றே இவைகளும். முக்கியமல்லவென்பதும் இதனது இலக்ஷணங்களும், சலிப்பு களும், குற்றங்களும், விளக்கிச்சொல்வதோடு பிராணுயாமத்தின் பூரகமா தியமுத்தொழிலை நடத்துவதற்கு பிரணவமாகிய ஓங்காரத்தின் பாதரூபங் களாயும் மாத்ராரூபங்களாயுமுள்ள, அகாராதி மூன்று தனியெழுத்து களுமே உரியதாம் என்பதை விஸ்தாரவிளக்கத்தோடு சொல்லவேண்டி நேரிடுமானதால் இங்கே அதனைச் சொல்லாமல் விடுகின்றேன். அன்றியில் சிந்தனையாவதுதான் பிறப்பதற்கு ஆதாரவாயுள்ள மனதினிடத்தில் அடங்கி யிருப்பதையே சிந்தனை புறம்போகாதிருத்தலென்று முன்னே நாம் சொன் னதில்சிந்தனை சென்று ஒடுங்கும் இடமானது சிவமேயென்று செய்துள்ள விசாரத்தின் திடத்தினுல் சிந்தனை மனதினிடத்து சென்று ஒடுங்க வேண்டுமென்று சொன்னதில் உங்களில் அநேகருக்கு சங்கையுண்டா யிருக்கக்கூடும். மனதின் மாசுகளானது ஒழிந்தபொழுது மனது சிவமாய் நிற்கின்றதே யொழிய வேறில்லை. நாம் இப்படிச் சொல்வதினுல் அநேக சாஸ்திரிகள் மனதே ஆத்மாவென கொண்டுள்ளபகுதியாரின் அபிப் பிராயத்தில் கலந்ததேயென இதனையும் நிக்ரகிக்க கூடுமாயினும் "சித்தமல மறுவித்து சிவமாக்கி யெனையாண்ட" என அருளிய மணிவாசகப் பெருமானும் "யாது மனம் நினையுமந்த, நினைவுக்கும் நினைவாகி"

Koviloor Digital Library

என்றருளிய தாயுமானூரும், இம்மதத்தவர்களே யானதால் மற்றை யோர்களால் செய்யும் சங்கையானது நில்லாதொழியு மென்பதனை விவேகி கள்யூகித்துக்கொள்ளவும். இதன்றியில் சிவோஹம் என்பதனை சர்வசிலாக் கியமானமகாமந்திரமாக எல்லாப்பெரியோரும் ஒப்புக்கொள்வதினால், நாமும் இதை அநுஷ்ட்டித்தே தீரவேண்டுமென்று சிலர் சங்கிக்கக்கூடும். ஆனால் வேதோபநிஷத்துக்களில், அம்சப்தத்தினாலும் கம் சப்தத்தினாலும் சொல்லப்படுபவன் பரமாத்மாவென்பதனையே இங்கே "சிவோஹம்" என் பதிலுள்ள அம்சப்தத்தினால் சொல்லப்படுபவன் ஆனந்தரூபனாயுள்ளபரமாத் மாவென்னும் அர்த்தத்தையே தருகின்றதானாலும், இந்த அர்த்தம், வாச்சி யார்த்தத்தோடு நின்றுபோகின்றதே யல்லாமல் இலக்ஷியார்த்தமாகின்ற தில்லை. அப்படி இலக்ஷியார்த்தம் வேண்டுபவன் சிவோஹம் என்னும் இந்த பதத்தை சாதாரண தியானபரமாக ஜெபித்தலோடு நின்றுவிடாமல், இதில் அம் என்னும் பதத்தையும், அதின்அர்த்தத்தையும், அதின் இருப்பையும், நல்லாசிரியனையடுத்து கிரமமாக விசாரித்து அறிந்த அவ்வண்ணமே நிலைத்து நிற்கப்பழகுவானாகில், முடிவில் ஆனந்தலக்ஷணமாகிய சிவபதத்தை யடைகின்றான். அப்படி அந்த நிலைமையை அவன் தெரிந்துகொண்ட பின் னர், அவன் சிவோஹமென்று சொல்லிக்கொண்டிருக்க வேண்டிய அவசிய மில்லை. எப்படியெனில், ஓர்கோட்டீஸ்வரனாயுள்ள பிரபுவானவன் தன்னை கோட்டீஸ்வரன், கோட்டீஸ் வரனென்று சொல்லிக் கொண்டிருக்கவாவது, நினைத்துக் கொண்டிருக்கவாவது எப்படி அவசியமில்லையோ, அதைப் போன்று பூரணமானதனதுயதார்த்த சொரூபத்தையுணர்ந்தவன் சிவோஹ மென்று சொல்லிக் கொண்டிருக்கவேண்டிய அவசியமில்லை.

ஏதேனும்ஒரு தொழிலைச்செய்து அன்றாடாகஜீவனம் செய்யவேண் டியிருக்கின்ற எழையொருவன், தன்னைகோடீஸ்வரனென்று சொல்லிக் கொள்ளுதல் எப்படி அசங்கதமானதாயும், நியாயமில்லாததாயுமிருக்குமோ அதைப்போன்று தனதுயதார்த்த சொரூபந்தெரிந்துக்கொள்ளாத ஒரு வனும் "சிவோஹம் சிவோஹம்" என்றுசொல்லிக்கொண்டிருத்தல் நியாய மில்லாததாகவே முடிகின்றது. இப்படி தன்னையுணர்ந்தார், உணராதா ரென்னும் இருபாலவர்களும் இந்த "சிவோஹம்" என்பதனைச்சொல்ல வேண்டிய அவசியமில்லை யெனின் இந்த மகா மந்திரத்தை மஹரீயர்கள் வெளியிடவேண்டிய அவசியமென்னவென்றும், அப்படி வெளியிட்டது நிஷ்பிரயோஜனமே யாகின்றதல்லவா வென்றும் சிலர் சங்கிக்கக்கூடும். முத்தோஹம் புத்தோஹம், ஞானைகம், ப்ரஹ்மோஹம் என்னும் பதங் களினால், அம்சப்பத்தின் மீதுள்ள பலவகையிலக்ஷணங்களைக்குறிப்பிட்டது போன்று "சிவோஹ" மென்னும் பதத்திலும், அம்சதத்தின் மீதுள்ள ஆனந்த இலக்ஷணத்தை குறிப்பிடுவதற்கு இணைக்கப்பட்ட வாக்கியமாதலால் வியர்த்தமாக வெளியிட்டிருக்கவில்லையென்பதனை யூகித்துணர்ந்து கொள்ள வும், ஆனாலும்,

Koviloor Digital Library

"நல்லவனே கேளுலகுபகாரம் ஞானிகள்விவகாரம்,
அல்லதுமற்றோர்பெறுபேறுமில்லை அதனால்பிணியுமில்லை"

என்று சொல்லியுள்ள முன்னோரின் அபிப்பிராயத்திற்கிணங்க அறிஞர்களாயுள்ளோர் விதிவிலக்குகளில் கட்டுப்பட்டிருப்பினும், விடுபட்டிருப்பினும்,

"யானைமதப்பட்டா லூழகாகு மன்றிநாய்
தானுமதப்பட்டால் சரியாமோ."

என்பதற்கிணங்க அதிவர்ணாஸ்ரமிகளாயுள்ளவர்கள் "சிவோஹமென்று ஜெபித்துக்கொண்டிருப்பினும், எந்த குற்றமுமாகின்றதில்லை. இதனையே, முத்தி இலக்ஷணம் கைவல்லியமானவர்களை, சாங்குசித்தன், சமரஸன் சர்வத்தியாகியெனும் மூவகையினராகப்பிரித்து உலகியலில், அவர்கள் நிற்க வேண்டிய கிரமத்தைப்பற்றி ஜனகாதிகளுக்கு ஸ்ரீ பரமேஸ்வரனால் போதித்துள்ள பஞ்சபத மஹாவாக்கியமெனும் கிரந்தத்தினிடத்தில் விளக்கியுள்ளதை நீங்கள்பார்த்துக்கொள்ளவும். இந்த லக்ஷணமுணராதவர்கள் "சிவோஹம்" முதலாகிய மற்றையதியானங்களை செய்துகொண்டு காலங்கழிப்பதிலும், அம்சப்தத்தைப்பற்றி விவகரித்து அதனால் பெறப்படும் இலக்ஷியத்தையுணர்ந்து, ஆத்மானுசந்தானம் செய்து சர்வபந்தங்களினின்றும் விடுபடுவதை யூகித்துணருமாறு சற்சங்கத்தையாஸ்ரயித்த எமது கண்மணிகளே உங்களுக்கு நான் மிகவும் கட்டாயப்படுத்தி சொல்லுகின்றேன்.

இதைப்போன்று சைவமந்திரமென்று சொல்லும் ந. ம. சி. வ. ய. எனும் பஞ்சாக்ஷரத்தை நாம் ஏதோ குறைவு படுத்திச்சொல்லிவிட்டதாக உங்களில் சிலருக்கு சங்கை யிருக்கக்கூடும். ந. ம. சி. வ. ய. வென்பது பஞ்சாக்ஷரமாகாதென்பதை முன்னமே விளக்கியிருக்கின்றேன். சர்வேஸ்வரன் எல்லாமதங்களுக்கும் பொதுவாயுள்ளவனானதினால், ஒரு பகுதியாரால் மட்டும் ஒப்புக்கொள்ளப்பட்ட இந்த ந. ம. சி. வ. ய. வெனும் பஞ்சாக்ஷரத்தை, மற்ற எல்லாமதஸ்தர்களும் ஒப்புக்கொள்ளாதது பிரசித்தமல்லவா? அப்படி யிது சர்வசிலாக்கியமுடையதாயிருக்கின் இதை காரணபஞ்சாக்ஷரமாக்கி ஜெபிக்கும்போது இரண்டெழுத்துகளை தள்ளுவானேன். இந்த ந. ம. வெனுமிரண்டெழுத்துகளும் ஆணவமும், மாயையுங், கலந்துள்ளதால் இந்த இரண்டையும் நீக்கி ஜெபித்தலே முறைமையெனின், சுத்த சொரூபமான ஒன்றினை மலம், மாயை யென்பதின் சம்பந்தமுள்ள அக்ஷரங்களை கூட்டி பஞ்சாக்ஷர சொரூபன் பரமேஸ்வரனென்று சொல்வது எவ்வளவுதூரம் நியாயத்திற்கு பொருத்தமாயிருக்கின்றதென்பது விளங்கவில்லை. அன்றியில் பிறிதொன்றினுடைய சகாயமில்லாமல் இந்தப் பஞ்சாக்ஷரத்தை யெல்லாமாக முடித்து காண்பிக்கவேண்டுமெல்லவா? அப்படி முடித்துக்காட்டவேண்டுமெனின் மற்றொன்று மவசியமாக விருக்கின்

Koviloor Digital Library

றது. அப்படி யவசியமாயுள்ள ஓங்காரத்தின் சகாயத்தை விட்ட பொழுது ந. ம. சி. வ. ய. வென்பது பொருளாக முடியாமல் போய்விடு மென்பது திண்ணம். இப்படிச் சொல்வதினால், பஞ்சாக்ஷர மென்பதே கிடையாதா? அல்லது உண்டா வென்கின்ற சங்கையுண்டாகக் கூடும். எமது அன்பர்களே சத்தியமாக பஞ்சாக்ஷரமுண்டு. அதானது இந்த ந. ம. சி. வ. ய. வென்பதைப் போன்று ஒருசார்பினருக்கு மாத்திரம் உரியதாகாமல் எல்லாமதஸ்தர் களுக்கும் உரியதாகியும் யாவற்றிற்கும் பொதுவாகியும், ஜெகஜீவபரமான பஞ்சகிருத்தியஙகளுக்கு ஆதரவாகியும் வேதத்தின் முடிமேலுள்ள தாகியு மிருக்கின்றது. அதனை,

"ஓதருமகாரமுகாரமேமாகார முத்திடும்பிரணவம்விந்து, நாத
மோடுதிக்கும் வியத்த தாரகத தி னல்லாகாயத்திரிமூன்று,
பேதமாமபதத்தாற்பிரக்குமிக்காயத் திரியிருபேதமாம்பேதம
யாமிதனிற்சமட்டிவியட்டியென்றிரண்டுமேதுவாமவேட்டவைக்காம்"

எனு,

சாக்ஷாத்பரமபதியானவர் வேதத்துக்கு பொருளருளிச் செய்தகாலத்தில் தாமே விளக்கியுள்ள அதனை கவனிக்கினெது பஞ்சாக்ஷரமென்பது நன்ருகத் தெரிந்துக்கொள்ளல் கூடும். எதனை காயத்திரிமுதலிய லக்ஷணங்களாக வகுத்துச் சொல்லப் பட்டதோ, அந்தப் பிரணவத்தையும், இந்த அக்ஷரரூப மான பிரணவமானது எந்த நாதத்தினல் விளங்குகின்றதோ அந்த நாதத் தையும், அந்த நாதமானது எந்த விந்துவினிடத்திலிருந்துண்டானதோ, அந்த விந்துவையுமே கிரமமான பஞ்சாக்ஷரமென்று சொல்லப்படுமே யொழி ய, மற்றவைகளெந்த விதத்தினுலும் பஞ்சாக்ஷரமென்று சொல்லப்படுவ தில்லை. பஞ்சாக்ஷரமானது இந்த இலக்ஷணத்தோடிருப்பதினுலும், இந்த லக்ஷணத்தை விட்டு எந்தமதங்களும் நிலைத்து நிற்க முடியாதானதினுலும், பஞ்சாக்ஷர முணர்ந்தோர் பாரமார்த்திக முணர்ந்தோராகின்ருரென்றும், அப்படி யுணர்ந்ததோடு நின்றுவிடாமல் அதின் அநுஷ்டானக் கிரமத்தையும் பெற்று, அநுஷ்டித்து, கைவந்தவர்கள் முத்தர்களாகின்ருர்களென்றும் அவர்களே எல்லா வேதங்களையு மோதினவர்களென்றும், சகல வேதத் தினுட் பொருள்களையும் உணர்ந்தவராகின்ருர்க ளென்றும்,

"பஞ்சாக்ஷரமாய் விளங்கும்
பரமார்த்த சொரூபத்தை, பாராமல் பார்த்து,
துஞ்சாமற் றூங்கிக் கிடந்தேன்"

எனவும்,

Koviloor Digital Library

" ஓமென்னும் பதமதனில் வேதமாதி
யுற்பவிக்கு மாலவித்தி னுதிக்குமாயோ
லோமென்னும் பதமதனை யுரைத்தார்தாமே.
யோதினர்கள் வேதாதி யுரைகளெல்லா
மோமென்னும் பதப்பொருளை யுணர்ந்தார்தாமே
யுணர்ந்தாரும் வேதாதி யொருமைகூர
வோமென்னும் பதமொழித்தஞ்செழுத்து மாதர்க்.
கொழுங்குடைய சூத்திரர்க்கு முரைக்கலாமே."

எனவும், ஆன்றோர்களும், ஆகமாதிகளும், குறிப்பித்துள்ளவைகளை கவனித்து, பஞ்சாக்ஷரத்தின் உண்மை தெரிந்துகொள்ளுதலே யுசிதமாகின்றது. இந்தப் பஞ்சாக்ஷரத்தை விட்டு வேரே எந்தமதங்களும் இருக்க முடியாதென்று நாம் சொன்னதில் உங்களுக்குச் சங்கையிருக்கக் கூடும். தயவுசெய்து ஏதேனும் ஒரு கிருஸ்தவ ஆலயத்தில் சென்று கவனிப்பீர்களாயின், அவர்களின் ஜெபத்தின் முடிவில், ஆமன் என்று முடிப்பதை நீங்கள் தெரிந்துக் கொள்ளக் கூடும். இந்த ஆமனெனும் பதமானது, ஆங்கிலத்தில் (Aum) என்னும் உச்சரிப்பின் கிரமமானது அகார உகாரமகாரமாயுள்ள ஓங்காரமாகிய பிரணவத்தின் இலக்ஷணத்தையே குறிப்பிடுகிறதென்பதனை நீங்கள் சந்தேகமில்லாமலுணர்ந்துக் கொள்ளுதல் கூடும். இப்படியே ஒவ்வொரு மதங்களிடத்திலுமுள்ள அதனை நீங்கள் விசாரித்துணர்ந்துக்கொள்ளுதல் சுலபமாதலால் இதனை யிங்கே சொல்லாமல் விடுகின்றேன். இந்த அபிப்பிராயத்தையே,

" எல்லாமதிலொடுங்கும் எல்லாவற்றுள்ளும்
சொல்லாயது வொடுங்கும். "

எனவும்,

" அண்டபகிரண்டமு மடங்கவொருநிறைவாகி
யானந்தமானபரமே "

எனவும், ஆன்றோர்கள் கூறியுள்ளார்களானதினால் பஞ்சாக்ஷரமென்பதின் கிரமமும், அதின் சிறப்பும் இலக்ஷணமும், இத்தன்மையதாக இருப்பினும் அதனை, நமசிவய மெனும் பதமாக்கி யிந்த ஐந்தெழுத்துக்களுக்கும் முறையே ப்ரதிவியாதி பஞ்சபூதங்களும், பிரமனாதி பஞ்சகர்த்தாக்களையும், மற்றும் விவரங்களையும், இதுகளின்மீது ஏற்றிச்சொல்லியிருப்பது, பிராமணாதிய நான்கு வருணத்தினற்கும் ஏற்படுத்தியிருக்கும் இடக்குறிப்பு மறியாதைப்போன்றதேயொழிய வேறல்ல. ஆனாலும், இந்த "நமசிவய" என்னும் பஞ்சாக்ஷரமானது நாமஸ்மரணத்திற்கேற்றமந்திரங்களிலொன்றாகியும், நமஸ்காரலக்ஷணத்தையடக்கிக்காட்டும் நமஸ்கார சுலோகவகை

Koviloor Digital Library

களில் மகாசிரேஷ்டமானதாகியும் இருக்கின்றதென்பது, எந்தவிதத்தாலும் தவருடையதாகாது. இதனை நமஸ்காரஸ்லோகமென்று சொல்வதில் உங்களுக்குச்சங்கையுண்டாகக்கூடும். இந்த ஐந்தெழுத்துக்களும், கிரமமான மூன்றுபதங்களாக பிரிவுபடுகின்றது. அதாவது "நம. சிவ. ய." என்பதே. யாதொன்று, ஆனந்தமெனும் சிவமானதோ. அதனை நமஸ்கரிக்கின்றேன் என இதனது பொருள்விளக்குவதினாலும், இந்த நமஸ்காரம் ஒன்றினாலேயே தனதுயதார்த்தத்தை யுணர்ந்து கொள்ளுதல் எந்த வகையாலும் கூடாத காரியமானதினால், இந்த நமஸ்காரலக்ஷணத்தை குறிப்பிடும் மந்திரத்தையே மனிதயாக்கையையடைந்ததின்பயனாகிய, வீடென்னும் சர்வசாந்தியையடைதற்கேற்றதும் அந்த சர்வசாந்தியையடைவதற்கு சாதனமாயுள்ள ஞானத்தையடைவதற்கு ஏற்ற நேர்ச்சாதனமாயுள்ளதும், இந்தமகாமந்திரமேயென்றுகருதி இதனை ஜெபமாதியாக அப்பியாசித்துக்கொண்டு வருபவன் எவ்வளவு விசாரபரனென்பதும் எவ்வளவு யூகம் நிரம்பியவனென்பதையும் எவ்வளவுக்கு சாதனம் கைவந்தவனென்பதையும், எமது தோழர்களே நீங்களே யோசிக்கின் உங்களுக்கே பூரணமாகவிளங்கும். இப்படியே ஒவ்வொரு மதங்களையும் வேண்டுமானால் ஆராய்ச்சி செய்துக்கொள்ளவும்.

சத்சங்கத்தை விரும்பிய எமது நண்பர்களே, பெரியோர்கள் சித்தாந்தத்தையே மேற்கொண்டு சொல்லியிருக்க, அதுகளை நிக்ரயித்து நாம் சொல்லுவதாக உங்களில் சிலருக்கு சங்கையிருக்கிறதல்லவா? இங்கே வேதாந்த பக்ஷமென்றும், சித்தாந்தபக்ஷமென்றும், அநேக வித்தியார்த்திகள் நினைத்து ஒன்றுக்கொன்று ஒவ்வாமல் இருக்கின்றதென்று வியர்த்தமான சங்கையை மேற்கொண்டு வேதாந்தமே பெரிதென்றும், சித்தாந்தமே பெரிதென்றும், கலங்குபவர்களில் நீங்களும் ஒருவர்களாக இருக்கவேண்டாம். உங்களின் யதார்த்த இலக்ஷணமாகிய ஈஸ்வரனென்றுசொல்லும் வாக்கியத்தின் நிஜசொரூபத்தையுணரப் பெறுவீர்களேல், வேதாந்தம், சித்தாந்தம், யோகாந்தம், கலாந்தம், நாதாந்தம், போதாந்தம், எனும் அறுவகையான முடிவுகளினாலும், விளக்கிச்சொல்லியிருப்பது ஒரே இலக்ஷணத்தை விளக்கிச்சொல்லியிருக்கின்றதென்பதும், வார்த்தைமாத்திரத்தினால் பேதமுடையனபோல காணுகின்றதே யொழிய வேறில்லையென்பதும் உங்களுக்கே ஸ்பஷ்டமாக விளங்குமென்பதில் தடைகிடையாது. ஆனதினால், நீங்கள் வேதாந்தம், சித்தாந்தம், என்று மலைவுகொண்டு நிற்பீர்களேல், உங்களுக்கு நீங்களே, கெடுதி செய்துக் கொண்டவர்களாகின்றீர்களே யொழிய வேறில்லை. வேதம்முதல் நங்குபாட்டுகள், சிந்துபாட்டுகள் வரையிலும் அநேகபகுதிகளாகபிரித்துள்ள பலவகையானபுஸ்தகங்களையும், நீங்களாழ்ந்து கவனிக்கின் ஞான இலக்ஷணத்தைப்பற்றி சிலஅம்சங்கள் வரையப்பட்டிருக்கின்றனவென்பது விளங்கும். சக்கிலி சிங்காரப்பாட்டின் முதலில் குழிப்பாகவுடைய "நானு, நன்னானே" என்னும் சொற்றொடரினிடத்து அடங்கியுள்ள

Koviloor Digital Library

அர்த்தத்தை கவனிக்கின் இந்த அர்த்தத்தினின்று எந்த உண்மையானது விளங்குமோ, அந்த வுண்மைதான் வேதாகமங்களின் முடிவில் உள்ளது என்பதில் சம்சயமேகிடையாது. ஆனதினால், வேதாந்தபரமாயாவது, சித்தாந்தபர மாயாவது, நீங்கள்காணும் எந்த சாஸ்திரத்தையாவது எடுத்துக் கொண்டு நல்லாசிரியனையடுத்து விசாரித்து அதிலுள்ள சூட்சமங்களைகிரகித்து அவ்வண்ணம் நடந்துவருவீர்களேல் யாவர்களும் உண்மையுணர்ந்துக் கொள்ளக்கூடுமென்பதில் தடைகிடையாது.

> "படித்தபடிநடக்க படிக்காலோபிகள்மோக்ஷ
> பதங்கெட்டு போனாலும் போகட்டும்."

எனவும்,

> "படித்தப்படி நடவார் பந்தம்போமோஉடலை
> இடிக்கநமன்பின்னே இருப்பான் பராபரமே."

எனவும், ஆன்றோர்கள் கூறியிருப்பது இங்கே கவனிக்கத்தக்கதாகும்.

எமது நண்பர்களே, சிலர் புருவமத்திய திருஷ்டியும், அதினால் ஏற்படும் ஜோதிய தரிசனையுமே முடிவிடமென்றும், வேறு சிலர் மார்பினிடத்தில் இருதயஸ்தானமென்று சொல்லும், இரத்தாஸயஸ்தானமே அங்குஷ்டபிரமாணமாயுள்ள பரமாத்மனின் வாசஸ்தானமென்றும் அங்கே கருத்தை நிருத்தினால், ஜோதிஸ்வரூபமான பரமாத்ம இலக்ஷணம் காணப்படுகின்றபடியால் இதுவே முடிவிடமென்றும், மற்றும் சிலர், நாபியென்று சொல்லும் கொப்பூழினிடத்திலிருந்தே சங்கல்பமானது உதிக்கின்றபடியால் இந்தஸ்தானத்தில் நாட்டத்தை வைப்பின் குளிர்ச்சியும், ஆனந்த இலக்ஷணமும் விளங்குகின்றபடியால், இதுவே முடிவிடமென்றும் மற்றும் சிலர் விவகாரத்திற்கு எழுந்த ஒரு சங்கல்பத்திற்கும் அதையடுத்து எழும்மறு சங்கல்பத்திற்கும் இடையேயுள்ள சூட்சமமான வெளியையுணர்ந்து நிற்பது முடிவிடமென்றும், மற்றும் சிலர் திரிவிழியமாயுள்ள நேத்திரத்தை மூடினால் அங்கே காணப்படும் அந்தகாரத்தையுற்று கவனிக்கின் ஒருவெளிச்சமுண்டாகும். அந்த வெளிச்சத்தை கவனித்து நிற்பதே முடிவிடமென்றும், மற்றும் சிலர் இந்த வெளிச்சமானது பஞ்சவர்ணமாக, மாறி, மாறி காண்பிப்பதன்றியில் அதையே யின்னுமுற்று நோக்க, நமது கண்ணின் கருவிழியினிடத்து விளங்கும் பாப்பாவைப் போன்று ஒரு சிறிய மனுஷிய உருவமானது காணப்படுவதனையே பரமாத்மதரிசனம் செய்து விட்டதாகவும், இதுவே முடிவிடமென்றும், மற்றும் சிலர் எண்ணத்தை புருவமத்தியத்தில் நிருத்தி, அகார, உகாரமென்னும், அக்ஷரத்தை மூக்குமுனையின் இரண்டு பக்கங்களிலும் கண்களினால் எழுதி வெளியே விடும் சுவாசத்தை கவனித்துக் கொண்டேவரின் இரண்டுகண்களிலிருந்தும் நக்ஷத்திரங்களைப்போன்ற இரண்டு ஜோதிகள் காணப்படுவதனையே முடிவிடமென்றும், மற்றும் அநேகர்கள் அநேக

Koviloor Digital Library

விதமான இலக்ஷணங்களை முடிவாகக் கருதியிருக்கின்றார்கள். இதற்ிணங்க, சிற்சில சாஸ்திரங்களிருப்பதையும் நாம் காணக்கூடும். இப்படிச் சொல்லி வந்த இந்த இலக்ஷணங்களை யுணர்ந்தவர்களை, தன்னை யுணர்ந்தவர்களாகச் சொல்லக்கூடாதோ வெனில், இவர்கள் கோரிக்கைமாத்திரம் தன்னை யடைய வேண்டியது, அல்லது நீங்காச் சுகப்பேற்றினை பெறவேண்டியது என்னும் அபிப்பிராயமாகிய சுக்ஞானமென்று சொல்லும், பரமஞானத்தை யே, விரும்பியதாயிருந்தபோதிலும் அதற்காக இவர்கள் செய்த பழக்கமானது அதற்குரிய தாகாமலிருப்பதினால் இப்படிப்பட்டவர்களை தன்னை யுணராதாராக சொல்லுதலானது எந்தவகையினாலும் குற்றத்தையுடையதாகாது. எப்படி கணித சாஸ்திரத்தில் வல்லவனாக வேண்டுமென்று நினைத்த வொருவன் அதையொழித்து இலக்கண, இலக்கியமாதிய மற்றைய எல்லாப் பகுதிகளிலும் பூரணபாண்டித்யத்தையடைந்தானெனினும், அவன் கணித சாஸ்திரியாகின்றதில்லையோ, அதைப்போன்றே, தன்னையடைய ஆஸ்ரயித்த ஒருவனும், அதற்குவேண்டிய நியமங்களை மேற்கொள்ளாமல் தன்னைப் பெறுதல் கூடாமையான காரியம்.

"தன்னிழப்பை என்னகற்று சாதிப்பான்"

எனவும்,

"கண்டனவெல்லாம் கரையுமெனத் தள்ளி
விண்டதே வெருவெளியின் வேடிக்கை."

எனவும், குறிப்பித்துள்ள ஆன்றோரின் வாக்கியமானது இங்கே மிகுதியும் கவனித்தற் குரியதாகின்றது. இங்கே சொல்லிக்கொண்டுவந்த நிலைமைகளை சாதித்து வருங்காலத்தில், இந்தச்சாதகனுடைய மனதானது ஒற்றுமை யடையுமென்பதில் தடைகிடையாது. ஆயினும் இதுதான் முடிவிடமென்று சொல்வதில்மாத்திரம் விவேகிகள் குறைகூறுதல்கூடும். அப்படி யவர்கள் குறைகூறும் முகாந்தரங்களில் இரண்டொன்றை மாத்திரம் தெரிந்த அளவில் சொல்லுகின்றேன். நாபி ஸ்தானத்தை, சங்கல்பமெழுவதற்கு ஏற்ற ஸ்தானமென்று சிலர் நினைக்கின்றார்கள். சிலர் இருதயஸ்தானத்தை சங்கல்ப மெழுவதற்கு ஸ்தானமென்று நினைக்கின்றார்கள். அப்படி நினைப்பதானது தவறுடையதாகின்றது. நாபி பிரதேசத்திலிருந்து ஆந்தரவேஷ்ணி யென்னும் ஓர்நாடியும், இருதய ஸ்தானத்திலிருந்து புரிதத்தி யென்னும் ஓர் நாடியும், ஆகிய இந்த இரண்டு சிறு நாடிகளும் தேகத்தின் மேல் நோக்கிச்சென்று இந்திரிய உணர்ச்சி நாடிகளின்சகிதமாய் சுழுமுனை நாடியிற் கலந்து மூளையின் வழியே சென்று உயிரின்ஸ்தானத்தை யடைகின்றது இந்த உயிரின்ஸ்தானமே மனதினிருப்பிட மாகையாலும், அவ்விடமே சங்கல்ப முதிப்பதற்கு ஸ்தானமாயிருப்பதினாலும் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு மின்சார சங்கதியைக் கொண்டு செல்லும் நம்

Koviloor Digital Library

பிகளைப்போன்று உயிரின் ஸ்தானத்திலெழுந்த சங்கல்பமானது அவ்விடத்தில் கலந்துள்ள ஆர்தரவேஷ்ணி, புரிதத்தி யென்னும் நாடிகளின் சகாயத்தால் நாபி பிரதேசத்திலும், இருதயஸ்தானத்திலும் முறையே சேர்ப்பிக்கின்றது. மிகுகியும் ஆழ்ந்து யோசித்தாலல்லது இதனது கிரமம் விளங்காது. அப்படி யாழ்ந்துயோசிக்கும் திறனில்லாத எத்தனையோ பேர்வழிகளை நாபிஸ்தானமும், இருதயஸ்தானமும் ஆகிய இவையிரண்டுமே சங்கல்ப மெழுவதற்கு ஆதரவானஸ்தான மென்று மருக்ஷிபடையச் செய்து ஏமாற்றத்தில் நுழைத்து வைத்திருக்கின்றதே யொழியே, வேறில்லை. இதைப்போன்றே, புருவமத்திய இலக்ஷணமும், சிலது விவரிக்கின்றேன், இதையப்பியாசிக்கும் சிலர் திருஸ்யமாயுள்ள நேத்திரத்தை மேல்கவாக்ஷத்தின் (இரப்பை) புறம் இருக்கவேண்டியவிதமாய் சற்றே மேல்நோக்கிய பார்வையாய் திருஷ்டியை நிருத்திக்கொண்டு, எண்ணத்தை இரண்டு புருவத்திற்கும் மத்தியஸ்தானத்திற்கு, அரை அங்குலம் மேலாக நாட்டம்வைத்துக்கொண்டு, ஏதேனும் ஒரு மந்திரத்தை, ஜெபம் செய்துக்கொண்டாவது, ஜெபம் செய்யாமலாவது, கவனிப்பதுண்டு. அப்படி கவனித்துக் கொண்டு வருங்காலத்தில் அக்னி பூதசம்மந்தத்தின் அம்சத்தைபெற்றிருப்பது கண் ஆதலால், அதனிடத்தில் ஓர் வகையான மின்சாரத்தின் ஒளியான துண்டாகின்றது. இந்தப் பிரகாசத்தையே மேலும் மேலும் கவனித்துவரின், புருவத்திற்கும், கன்னத்திற்கும் மத்தியஸ்தானத்தில் மேல்கவாக்ஷத்திகு சற்றே மேல் புறத்தில் இரண்டு கண்களின்மேல் பக்கங்களிலும் ஓர்வகை யெலும்புகளாலாக்கப்பட்ட கூடுகளாயுள்ள இரண்டு சிறு அறைகளிருக்கின்றன. அந்த அறைகள் நிறம்ப முழுவதும் சில கலப்பு வாயுக்களிருக்கின்றன. அதில் மிகுதியாயுள்ளது வியானவாயுவின் அம்சமும், தனஞ்செயனெனும் வாயுவின் அம்சமும் கலந்துள்ள தாகையால், கண்ணினூடே எழுந்த மின்சாரத்தி னொளியானது சிறுகச்சிறுக அங்கேயுள்ள வாயுவை நெருங்குகின்றபடியால் முறையே அந்த வாயுவும் ஜோதிலக்ஷணத்தை யடைகின்றது. இந்த இலக்ஷணத்தை புருவமையத்தினிடத்து எண்ணத்தை நாட்டஞ்செய்திருந்த சாதகன் சிலநாட்களில் முறையே தெரிந்துகொள்ளுகின்றான். இப்படி தெரிந்துக்கொண்ட பிறகு, இரண்டு பாரிசங்களிலுமுள்ள ஜோதியின் சம்பந்தமானது இவன் நாடியிருந்த புருவ மையத்தின் சற்று மேலிடத்தில் கலப்புற்று மின்மினியின் இலக்ஷணமுதல் அநேக கோடி சூர்யபிரகாசத்திற் கிடையேயுள்ள தாரதம்மியங்களைப் போன்று. காணப்பட்டு, க்ரமேணமாக அப்பியசித்துவருங்கால், முடிவில் அந்தப் பெருஞ்ஜோதியின் தரிசனையானது கிடைக்கப் பெறுவன், இதனோடு தங்கள் பிரயாணம் முடிந்து விட்டதென்றும், சர்வசாந்திஸ்தல மென்றும் கருதி ஏமார்ந்து நின்று விட்ட எமது சகோதரர்களாயுள்ள அநேக பேர்வழிகளிருக்கின்றார்கள், எந்த ஸ்தானத்தில் தனஞ் செயனென்னும் தனிவாயுவினோடாவது வியானவாயுவினுடன் சம்பந்தப்பட்ட தனஞ்செயனென்னும் கலப்பு

வாயுவுடனாவது உஷ்ணம், பிராணவாய்வு என்னும் இதுகளிரண்டில்
ஒன்றின் சம்பந்தம் நேரிட்டால் ஜோதியான துண்டாகு மென்பதின் க்ரம
லக்ஷணம் தெரிந்தவர்களாக இருந்தால் அவர்கள் ஏமாற்றத்தை யடைய
நியாயமில்லை, அப்படித் தெரியாதவர்கள் எத்தன்மையரேனும் மயங்கி நிற்க
வேண்டியதே யாகின்றது, அன்றியில் இந்தப் புருவ மத்திய லக்ஷணத்தை
மற்றொரு வகையாக அநுஷ்டிப்பவர்களு முண்டு, அதாவது முகம்பார்க்கும்
கண்ணாடியை கையில் வைத்து பார்க்கும் போது, நமது முகத்தின் பிரதி
பலனமானது அந்தக்கண்ணாடியில்தோற்றப் படும், அந்தப் பிரதிபலனத்தில்
காணப்படு நேத்திரங்களின் கருமணியை இலக்ஷியமாக்கி பார்த்துக்கொண்டு
வரின், அந்தக்கருமணியின் மத்தியிலுள்ள பாப்பாவின் சிறியவுருவங்களா
னது காணப்படும், இன்னும் அதனையே கவனித்துப் பார்த்துக் கொண்டு
வரின் நக்ஷத்திரத்தைப் போன்ற இரண்டு சிறு வெண்மையான ஜோதியா
னதுகாணப்படும், அதனையே இன்னும் திருஷ்டித்துக்கொண்டு வரின் அந்த
ஜோதியானது தங்கியிருந்த கருவிழியின் மத்திய பாகத்திலுள்ள சிறு
பிரதிமைகளுக்கு இடமாயிருந்தஸ் தானமானது துவாரமுள்ளதைப் போல்
காணப்படுகின்றது' இந்தத் துவாரத்தை யேதிருஷ்டித்து நோக்கின் பின்புற
மாக சிறிது தூரம் உருவிச் சென்று முன்புருவமத்தியில் ஜோதி விளங்கிய
ஸ்தானத்தை விடசற்றே மேல்பாகத்தில்,மூளையின் அடிப்பிரதேசத்திலுள்ள
ஜோதிஷ் அம்சத்தோடு கலப்பையடைகின்றது, இதுவே ஜீவாத்ம பரமாத்ம
அயிக்கிய மென்று கருதியும் புருவமத்திய நாட்டத்தின் இலக்ஷியமான
இடமென்று கருதியும் தயங்கி நிற்பவர்களு முண்டு, இப்படி சாதிக்
கப் பட்டவர்களுக்கு சிலகாலம் வரையில் கண்ணாடியின் சகாயமிருக்க
வேண்டியது. அதன்மேல் கண்ணாடி அவசிய மில்லாமலே பார்த்துக் கொள்
ளலாம். இப்படி சாதகம் செய்கிறவர்கள் சாதககாலத்தில் இமைக்காமல்
பார்க்க வேண்டியது அவசிய மாயிருத்தலைப்பற்றி இந்தச்சாதனைக்கு அநேக
நாட்களுக்கு முன்னாலேயே சாயாபுருஷ தரிசனம் செய்துக்கொண்டு வரின்
நாளடைவில் நேத்திரமானது இமைக்காமலிருக்கும் பழக்கத்தை யடைய
முடியுமானதினால் இவர்களுக்கு சாயாதரிசனம் செய்ய வேண்டு மென்பது
கட்டாயப் படுத்தி சொல்லியிருக்கின்றது, இமைக்காமல் அஞ்சனம் முதலி
யவைகளை பார்ப்பவர்களைப் போன்று, கூர்ந்து பார்க்கும் சக்தியுடையவர்
களுக்கு சாயா புருஷதரிசன சாதன மில்லாமலே இதனை பார்த்துக் கொள்
ளுதல் கூடும், நாமிப்படிச்சொல் வதினால் கண்ணின் மத்தியிலும் அப்படிப்
பட்ட துவாரம் உண்டாயிருக்கின்றதோ வென்னும் சங்கையுண்டாகக்
கூடும் அப்படி கண்ணின் மத்தியில் துவாரம் கிடையாதென்பது தான்
உண்மை, ஆனாலும் இந்த சாதகத்தை நாமே சாதிக்கிற தாயிருந்த போதி
லும் துவாரமிருக்கிற தாகவே காணப்படுகிறது, அதின் முகாந்
தரம் என்னவெனில், வைடூரியம், வைரம் முதலிய உயர்ந்த ஜாதி
இரத்தினங்களில், அதிலுள்ள நீரோட்டமானது மத்தியில் நீலக்கோடு

Koviloor Digital Library A NO: 3561

இழுத்ததைப்போன்றும், குற்றமில்லாத வெண்மைக்கோடுபோன்றும் அதி லுள்ள நீரின் சகாயத்தால், ஓர்வகையான பளபளப்பும், ஜொலிப்பும் காணுகின்றதல்லவா? அதைப்போன்று இந்தக் கண்ணும் ஓர் மணியைப் போன்றதால் கருமேந்திரிய பஞ்சகத்தோடு, ஞானேந்திரிய பஞ்சகமு மமைந்து தொழிற்படும் அவசரத்தில், பஞ்சபூத அம்ஸங்களில் தேயுவின் அம்ஸமானது தேகத்தின் மற்றப் பகுதிகளில் தொழிற் படுவதைவிட இந்த நேத்திரஸ்தானத்தில் அதிகமாயும், விசேஷ வெளிப்படையாயும் தொழிற் படவேண்டியிருப்பதினால், முக்கிய பிராணத்தின் வாசஸ்தனத்திலிருந் தெழுந்த உஸ்வாஸ நிஸ்வாஸமென்னும் பிராண கெதிகளினால் உண்டாகும் சாக்குதலிலிருந்தெழுந்த அக்னி பூதத்திலிருந்துண்டாகிய மின்சாரமென் னும், சுய அம்ஸமாகிய சக்தியானது முதலில் மூளையையடைந்து, அங்கே யுள்ள தனஞ்செயனென்னும் வாயுவோடு சம்பந்தப்பட்டு, இன்னுமதிக பிரகாசத்தையுடையதாய் அங்கிருந்தும் உணர்ச்சி நரம்பின் வழியாய் நமது கண்களின் பின்புறத்திலிருந்து முன்புறத்திற்கு ஊடுருவி முன்புறத்திற்கு வந்து வெளியிலுள்ள ரூபங்களை கிரகித்து நிற்கின்றது. இப்படி இந்தவொளி யானது வெளிவருவதற்கு இயைந்த கருவிழியின் மத்தியபாகமானது பூத தத்வத்தில் அப்புவின் அம்ஸமானது மிகுதியாயுள்ள பாகமாயிருப்பதினால் இரத்தினங்களிலுள்ள நீரோட்டத்தைப் போன்று, நமது கண்களிலும் ஓர் வகையான நீரோட்டமிருக்கின்றது.தெளிந்த ஜலத்தில் சூரியதேஜஸ் முதலா யுள்ள ஜோதிகள்,அநேகதூரம் ஊடுருவிச்செல்லுதலை நாம்வெளிப்படையாக பார்க்கின்றோமல்லவா? அதைப்போன்று இங்கேயும் கண்ணிலுள்ள அந்த தெளிந்த நீரினூடே பிரகாச பூதியமானது ஊடுருவி வருவதால் அதைவி டாது நோக்கும் அவசரத்தில் துவாரமிருக்கின்றது போல் காணப்படுகின் றதேயொழிய, வாஸ்தவத்திலங்கேதுவாரம் ஒன்றுங்கிடையாது. நாம்சொல் வதில் யாவருக்கேனும் சங்கையுள்ளதாயின் இரத்தின பரிக்ஷையுள்ளவர் கள் இரத்தினத்திலுள்ள நீரோட்டத்தையே யுற்றுகவனிக்கின் அந்த நீ ரோட்டத்தில் துவாரமிருப்பதாகவே காணப்படும், தெளிந்த ஜலத்தினூடே ஊடுருவிச்செல்லும் பிரகாச இலக்ஷணத்தை இமைக்காது பார்த்துக்கொண் டேவரின் இர்தப்பிரகாசம் ஊடுருவிச் செல்லும் இலக்ஷணத்தினால் அங்கே ஒன்றும் ஜலம் முதலிய தடையில்லாததைப் போன்றும் ஓர்துவாரத்தினூடே பிரகாசமானது ஊடுருவிச் செல்வதைப் போன்றுங் காணப்படும். ஆனால், வாஸ்தவத்தில் அவ்விடத்தில் யாதொரு துவாரமில்லை யென்பது உண்மை. இதனை (Ex Rays or Rotigen Rays) என்று ஆங்கிலத்தில் சொல்லுகின்ற தேகதத்துவத்தின் உள்விளக்க வொளியென்று சொல்லப்படும். இந்தக்கிர மம் தெரிந்தவர்கள் இதனை மிகுந்த சுலபமாக அப்பியாசித்தல் கூடும். இந்த நிலைமையை ஆபோஹ்ஜோதி யென்றும், நீர்மேல் நெருப்பென்றும், க்ஷீர ஸாஹர சயனனாகிய இலக்ஷ்மி நாராயண தரிசனமென்றும், இதனோடு தாங்களுடைய வேண்டும் சர்வத்தையுமடைந்தாயிற்றென்றும், எனது உயிர்

Koviloor Digital Library

போன்ற சகோதரர்களே, உங்களில் அநேகர் நினைத்திருக்கிறீர்கள். அந்தோ இந்த நிலைமையானது காக்ஷிகளிலொன்றாயுள்ளதே தவிர, உங்கள் பிரயாணத்தின் முடிவிடமென்று நீங்கள் நினைப்பது தவறென்பதைப்பற்றி நான் கட்டாயப்படுத்தி சொல்லவேண்டியதாயிருப்பதினால் நம்மீது ஆயாசப்படும் அவசரபுத்தியை சற்றே விலக்கி, ஆழ்ந்து யோசிப்பீர்களாயின் இங்கே நாம் சொன்ன வொவ்வொன்றும் நியாயமென்பதாகவும், உண்மையென்பதாகவும் கண்டுபிடித்து, உங்கள் முடிவிடத்தைப்பற்றி ஆராய்வதில் ஓர் திரணமும் சலிப்பையடையமாட்டீர்களென்பதே யுண்மையென்று நீங்கள் ஒவ்வொருவரும் சந்தேகமில்லாமல் உணருதல் கூடும்.

"கண்ணாடிகாண கருத்தறியாமாந்தரெல்லாம்
விண்மூடத்தேடும் விபரமென்ன அம்மானே,
விண்மூடத்தேடும விபரமறிவாராயின்
கண்ணாடியிற்றெரியுங் கதியாமோவம்மானே,
கதியாகும்நாதக் கணக்கறியிலம்மானே."

என, ஆன்றோர்கள் குறிப்பித்துள்ளதை யிங்கேகவனித்தல் மிகுதியும் நலத்தை தருவதாகின்றது. காசியின் அரசனாயிருந்த அஜாத சத்ருவென்பானிடம் கார்கிய கோத்திரோற்பவராகிய பலாகியென்னும் மஹர்ஷியொருவர் அஜாதசத்ருவென்னும் அரசனிடஞ்சென்று, ஏ அரசனே உமக்கு நான் பிரமவித்தையை போதிக்கின்றேன் என்றனர், அதைக்கேட்ட அரசன் ஒப்புக்கொள்ளுதலும் அப்படி யொப்புக்கொண்ட அரசனுக்கு உபாஸனாபரத்தின் சம்பந்தமாகிய உபதேசக்கிரமங்களையும், அதின் இலக்ஷியங்களையும் அதினால் அடையும் பலன்களையும், முறையே சொல்லிக்கொண்டு வந்ததில் இந்த அக்ஷி மண்டலமத்திய புருஷ இலக்ஷணமும் ஒன்றாகின்றது. இந்த அரசன் தமக்கு உபதேசம் செய்வேனென்று வந்த முனிவரினும் மிகுதியும் சிரேஷ்டத்தையுடையவராய், எந்த அம்சப்தத்தின் பூரண இலக்ஷணங்களையும்க்ரமமாகத் தெரிந்து அநுஷ்டித்துக் கொண்டுவரின் எந்த ஏக ஐக்கியதத்துவமென்னும் நிஜ இலக்ஷணத்தையடைந்து உய்தல் கூடுமோ அந்தக்ரமத்தையும் அநுஷ்டான விபரங்களையும், பூரணமாக தெரிந்துள்ள மஹாசிரேஷ்டமான பெரியோரானதினால், இந்த உபாசனா இலக்ஷணத்தைச்சொன்ன கார்க்கிய கோத்திரரை நோக்கி, ஏ முனிவரே உம்மால் சொல்லப்பட்ட அக்ஷிமண்டலமத்திய புருஷனை நான் அறிவேன்; அதின் அப்பியாச க்ரமமாகிய கண்ணாடியின் பிரதி பிம்பத்திலிருந்தும் எந்த இலக்ஷியத்தை தெரிந்துக்கொள்ளவேண்டுமோ, அதையும் நான் அறிந்துள்ளேன், அன்றியும் நான் உம்மால் சொல்லிக்கொண்டுவந்த எல்லாவிதமான உபாசனாக்ரமங்களையும் அறிவேன்; அதுகளை நீர் பிரஹ்மம் என்று உபாசிக்கச் சொன்னதையும் அதின் முறைமையும் முடிவும் அறிவேன்; இதுகளைத்

Koviloor Digital Library

தெரிந்துக் கொண்டதினாலேயே அப்படித் தெரிந்துக்கொண்ட அவன் பிரமமாகவாவது ஆகின்றதில்லை, பிரமத்தையடைந்தவனாகவும் ஆகின்றதில்லை. பிரமத்தையடைவதற்கு அநேகபடிகள் இருக்கின்றன. ஆனதினால், இப்பொழுது நீர் சொல்லிக்கொண்டு வந்த இதனிலும் சிரேஷ்டமான இலக்ஷணம் தெரிந்திருந்தால் சொல்லுமென்று கேழ்க்கமேலே சொல்ல சக்தியற்றவராய் முனிவர் நின்றுவிட்டதோடு அந்த அஜாத சத்ருவென்னும் அரசனையே தமக்கு குருவாகக்கொண்டு பூரணமாக பிரமவித்தையை யடைந்து சென்றனர் என்பதை ப்ரஹதாரண்ணியகோபநிஷத்தை பார்க்கின் நீங்கள் ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ளுதல் கூடும். இதன்றியில் எந்த பிரமத்தை, சுத்தம், அசுத்தம் என்னும் இரண்டிற்கும் அப்பால்பட்டதாக பிரமவேத்தாக்களால் சொல்லப் படுகின்றதோ எதனை, எந்தக் கிரியைகளாலும் பெருதல் கூடாமையென உபநிஷத்துக்களில் கட்டாயப் படுத்தியிருக்கின்றதோ, எந்த வகையான அக்ஷரபதிப்புகளாயுள்ள மந்திரங்களென்று சொல்லும் ஏழுகோடிகளாயுள்ள பிரிவுகளினாலும் அதை யநுஷ்டிப்பதற்கு அமைந்துள்ள ஒரு லக்ஷத்திற்கு மேல்பட்ட அநுஷ்டான பேதகங்களினாலும் அம்சப்ததத்தின் இலக்ஷணத்தை யுணருதல் கூடாமையெனவும், அப்படி இதனையுணரக்கூடாமல் போய் விட்டபடியால், அமனஸ்கம் அல்லது அஸ்பரிஸமென்று சொல்லும் அபிமானமென்பது ஓர் திரணமும் நில்லாது ஒழிந்த மனதின் பற்றற்றநிலையமென்னும், சர்வசாந்தியை யடைதல் எந்தக்காலத்திலும் கூடாதகாரியமென்று சற்சங்கத்தை ஆஸ்ரயித்த எமது நண்பர்களே, உங்கள் மத்தியிலும், சாமான்ய ஜனங்கள் மத்தியிலுமல்லாமல், திரளான யோகியர் கூட்டங்களின் மத்தியிலும் நின்று சொல்லவேண்டியது அத்தியாவசியமாயுள்ளதென்பதனை நீங்கள் ஒவ்வொருவரும் அறிந்துகொள்ளுதல் கூடும்.

யாதொன்றை பிரஹ்மம், பரமாத்மா, கடவுள் சிவம், விஷ்ணும் புத்தெள், அல்லா, பராபரன் என்று பலமார்க்கத் தவர்களாலும் சொல்லப்பட்ட, சயம்புவாஞ்சைதன்னியமென்னும் உயிரானது ஒன்றே யாதலால் அதையடைதற்கேற்ற வழியும் ஒன்றே யல்லது பலவன்றென்பதனை மறுத்தற்குரியதன்றும், நாம் இப்படிச்சொல்வதில் நின்றும் உங்களுக்கு பலத்தசங்கையுண்டாதல் கூடும். ஆனல், ”

“ வேறுபடுஞ்சமயமெல்லாம் புகுந்துபார்க்கின்
விளங்குபரம்பொருளே நின்விளையாட்டல்லால்
மாறுபடுங்கருத்தில்லை முடிவின்மோன
வாரிதியினதித்திரள்போல்,வயங்கிற்றம்மா. ”

எனவும்,

Koviloor Digital Library

" ஈன்றளித்தழிக்குஞ் செய்கைக்
கேதுவா மயனுய் மாலாய்,
ஆன்றவீ சனுமாய்த்தானே
அனந்த மூர்த்தியுமாய் நிற்கும். "

எனவும்,

" ஒரு நாமம் ஒருருவம் ஒன்று மில்லார்காயிரந்
திருநாமம்பாடிநாந் தெள்ளேணங்கொட்டாமோ."

எனவுங் கூறியுள்ள ஆன்றோர்களின் கருத்தை இப்பொழுது நீங்கள் கொண்டுள்ள மதாபிமானமென்னும் புத்தியின் (தடி) கன சொரூபமென்னுஞ் ஸ்தூலத்தினின்றும் அதனைவிலக்கி சூக்ஷ்ம இலக்ஷணத்தோடு சற்றே ஆழ்ந்துயோசிக்கின் சொரூபம் ஒன்றே யென்பதும் அதையடைதற்கேற்ற மார்க்கம்ஒன்றே யென்பதும், சந்தேகமில்லாமல் நீங்களே யுணர்ந்துக்கொள்ளலாம். அந்த அம்ருதமான சொரூபம் ஒன்றே ம்ருதமாயுள்ள பல மூர்த்தங்களாகவும் தனது சங்கல்பத்தாலேயே மாறியுள்ளதானதினுல், அப்படி மாறிய மூர்த்திஸ்தானங்களையே, (அம்ருதம்) ம்ரிதியூவென்றுசொல்லும் பயமற்றஸ்தானமென்று கருதுபவர்கள், (சுடியந்திரம்) ஏற்ற மரத்திலிருப்பவர்களைப்போன்றே, மேலும் கீழும் அலைபவேண்டிய வர்களாயிருக்கின்றார்களே தவிர எந்த வகையினுலும் மிருத்யூவை ஜெயங்கொண்டவர்கள் என்பதாக சொல்லுதல் பொருந்தாது, மூர்த்தங்கள் பொருளல்லவென்பதையும் அதையடைத்தோர் (அந்தகாரம்) புனராவர்த்தம் என்பதனையே பலமாக அடைவார்களென்பதுவும் விவேகிகளால் எவ்வகையினுலும் மறுத்தற்குரியதன்று. சர்வசம்மார சக்தியினுல் எல்லாவகையான மூர்த்திகளும் அழிக்கப் பட்டுபோய்விடும் ; ஆகவே (அஜம்) அழிவில்லாதது என்பதனையேமேலோர்களே யுணர்ந்தார்கள் என்பதனையும்விளக்கி ஸ்ரீ சக்ரவர்த்தியின் திருக்குமாரரான ஸ்ரீ ராமருக்கு வசிஷ்டர் உபதேசித்ததில் வைராக்கிய பிரகரணத்தினிடத்தும் அதே அமலராமாயணத்தில் தேவபூஜைகதையினிடத்தும் நிருபித்துள்ளதை நீங்களே தெரிந்துக்கொள்ளுதல் கூடும்.

" வானம் போல வடிவிலதாயெங்கும்
ஆனதாகத்தியானம்பண்ணுதவன்
கானந்தன்னில் உலண்டெனக்கட்டுப்பட்
டீனமானபிறப் பிறப்பெய்துமே. "

என, சாக்ஷாத் பரமபதியானவர் ஸ்ரீ உமாதேவியாருக்கு அருளியுள்ளதை கவனிக்கில் விளங்கும். அன்றியில் உலகத்தில் எல்லாமதங்களாலும் சரிதாதி மார்க்கங்களினுல் சொல்லப்பட்ட,

Koviloor Digital Library

" அறிவினிலைத்தவமடக்கம் புண்ணியந்தியானங்குணங்கள்
நெறியுடைய பக்திநெறி, நெறியுபாயன்னினைக்கின்
மறுகும்வளி அனையமன மடங்குவதொன்றியாததுவே.
அறிவுடையோரிவையனைத்து மாமென்றே யறைகுவரால்."

எனவும்,

" அலையுமனத்தை யகத்தடக்கு
மவனேசரிதை கடந்தோனும்
அலையுமனத்தை யகத்தடக்கு
மவனேகிரியை முடிந்தோனும்
அலையுமனத்தை யகத்தடக்கு
மவனே யோக கற்பரனும்
அலையுமனத்தை யகத்தடக்கு
மவனே ஞானி யதி சூரன்."

எனவும், சாக்ஷாத் சங்கரபரமாத்மாவே தேவியாருக்கு அருளியுள்ளதான திலும், இதை ஒவ்வொருவரும் கவனித்தல் நலத்தை தருவதாகின்றது.

இதன்றியில், பேதவாதிகளாகவும், அபேதவாதிகளாகவுமுள்ள, சகலருக்கும் இதத்தைத்தருவதாயுள்ளது ஓரே வாக்கியமே தவிர, இரண்டு வாக்கியங்கள்ல்ல, அந்த வாக்கியமானது,

" ஈசாவாஸ்யமிதஞ்சர்வம்."

என்னும் வாக்கியமே ஆகின்றது. இங்கே இதனை ஈஸ்வரவாக்கியமாயுள்ளது வேதாகமங்களென்று ஒவ்வொருவரும் ஒப்புக்கொள்ளுதல் கூடும். இதுதான் இந்த வாக்கியத்தின்கிரமமான அர்த்தத்தை தெரிந்துக்கொள்ள இயலாமல் மருக்ஷிக்கிடமாயுள்ள தவருதலான அபிப்பிராயமென்பதனை, நம்மில் ஒருவரும் மறந்து விடுதல் கூடாது. ஏனென்றால், இந்த வேதாகமங்கள் கர்ம, உபாசனு, ஞான எனும் மூன்று அங்கங்களையுடையதாய், பூர்வம், உத்தரமென்று சொல்லும் இரண்டு பகுதிகளாக பிரிக்கப்பட்டு இதில் பூர்வபாகத்தை நிஷேதித்து, உத்ரபாகத்தை நிரூபிக்கும் அவசரத்தில், (தத்வமசி) அதுநீயாகுராய். (தொந்தத்தசி) நீ அதுவாகுராய் எனும் அர்த்தத்தைத் தந்து (பாஹ்ரய) வெளிநோக்கலக்ஷியத்தோடு நின்றுபோகின்றமையாலும், உள்நாட்டலக்ஷியம் இல்லாமல் போய்விடுகின்றபடியாலும், இந்த வேதாகமங்களை. ஈசாவாஸ்யம் என்று சொல்வதைவிட இந்த வேதமானது பிறக்கிறதற்கு ஆதாரவாயிருக்கும் பிராப்பிய சொரூபமான ஓங்காரத்தை ஈசாவாஸ்யமென்று சொல்லுதல் எந்த வகையினுலும் குற்றமுடையதாகாது.

Koviloor Digital Library

இந்த வாக்கியத்தையும், இதின் கிரமத்தையும் அறிந்தவர்களை அக்னிவித்தை யென்று சொல்லும் ஞானவித்தையை யுணர்ந்தவர்களென்றும், திரிநாசிகேதர்களென்றும் உபநிஷத்துக்கள் ஸ்துதி பண்ணுகின்றன. இப்படிச் சொல்வதினால் நாம் வேதாகமங்களையே பழித்துச்சொன்னதாக உங்களில் அநேகர்கள் ஆசுயைக்கொள்ளக்கூடும். கவுடபாதர், வியாஸாசாரியர், சங்கராசாரியர், ஆனந்தகிரி ஆசாரியர், இரங்க இராமாநுஜாசாரியர், மாத்வாசாரியர், நீலகண்டாசாரியர், புஷ்பகிரிஆசிரியர் இன்னும் வேதோபநிஷத்துக்களுக்கு வியாக்கியானம், அநுவியாக்கியானம் முதலியவை செய்துள்ள, மஹர்ஷிகளும், முனிவர்களுமாயிருந்த அநேகருடைய அபிப்பிராயங்களும் இதுவேயென்பதனை சூத்ரபாஷியத்தினால் விளக்கியுள்ளதை நீங்களே கவனிக்கின் செவ்வனே விளங்கும். இந்த அபிப்பிராயங்களோடு கூடியுள்ள பாஷிய, உபபாஷியங்கள் கிடைப்பது அருமையாயிருப்பின், வித்தியாரண்ய சரஸ்வதி, சாதுநிச்சலதாஸ்ஜீ இவர்களது க்ரந்தங்களும் பன்னிரு திருமுறையென்று சொல்லும் சைவசமயாசாரிகளாலும், மற்றவர்களாலும் சொல்லியுள்ள அதனையும் ஆழ்வாராதிகள் சொல்லியுள்ள பிரபந்தத்தையும் மற்றும் புத்தா, மஹம்மது, கிறிஸ்து முதலிய ஆசிரியர்களால் சொல்லியுள்ள திரிபிடகம், குரான், பைபில் என்று சொல்லும் க்ரந்தங்களை நீங்கள் சீர் தூக்கி நோக்கின் பேதஇலக்ஷணத்தை விளக்கும் பூர்வபாகத்தினையும், அபேத இலக்ஷணத்தை விளக்கும் உத்தரபாகத்தையும், விவரித்துச்சொல்லியிருக்கின்ற இலக்ஷணங்களை நீங்களே நிதரிசனங்களாக காணுதல் கூடும்.

"வேதமுடனாகம புராணமிதிகாசமுதல்
வேறுமுள கலைகளெல்லா
மிக்காகவத்துவித துவிதமார்க்கத்தையே
விரிவா வெடுத்துரைக்கும்
ஓதரிய துவிதமே யத்துவித ஞானத்தை
யுண்டுபணு ஞானமாகும்
பூகமனு பவவசன மூன்றுக்கு மொவ்வுமீ
துபயவாதிகள்சம்மதம்."

எனக்குறிப்பித்துள்ள, ஆன்றோர்களின் அபிப்பிராயத்தை நாம் மிகுதியுங் கவனிக்கின் நலத்தைத்தருவதாகும். இப்படிச்சொல்வதினால், நாம் அபேதவாதத்தைத் தழுவியதாகவும், பேதவாதத்தை தழுவியதாகவும், நீங்கள் மயக்கத்தை யடையவேண்டாம். அபேதவாதிகளாகவும், பேதவாதிகளாகவுமுள்ள ஆண், பெண் முதலிய எப்பாலவர்களாலும் அடைந்து உஜ்ஜீவித்தற்கு இலக்காயுள்ள சர்வ சாந்தியையும், அதை அடைவதற்கு ஏற்றதாயுள்ள அப்பியாசக் கிரமங்களையும் சொல்லியிருப்பதைத்தவிர வேறு இல்லை யென்

Koviloor Digital Library

பதனை நீங்கள் ஆழ்ந்து கவனிக்கின் விளங்காமல் போகாது. மறையாதிகளில் மிகுந்த சூட்சமாக குறிப்பிட்டும், சாதாரணத்தில் வெளிப்படையாக தெரிந்துக்கொள்ளுவதற்கு கூடாமையுமாயுள்ள இலக்ஷணங்களையே, க்ரம இலக்ஷணத்தோடு விளக்கியிருக்கின்றதே தவிர வேறில்லை. மறையாதிகளுக்கு அப்பாற்பட்டும் அபிப்பிராயங்கள் உள்ளனவோவென்று சிலருக்கு சந்தேகம் உண்டாகக்கூடும்.

"அகம் ப்ரமாஸ்மி."

என்னும் வாக்கியத்தின் அர்த்தத்தினுல் பெறப்படும் இலக்ஷணமானது மறைகளுக்கு அப்பாற்பட்டதேயென்பதை குறிப்பிட்டுள்ள,

"ஐவகையெனும் பூதமாதியை வகுத்ததனு
ளசரசர பேதமான
யாவையும் வகுத்துநல்லறிவையும் வகுத்துமறை
யாதிநூலையும்வகுத்துச்
சைவமுதலாமளவில் சமயமும் வகுத்துமேற்
சமயங் கடந்தமோன
சமரசம் வகுத்த நீ."

எனவும் குறிப்பித்துள்ள ஆன்றோர்களின் அபிப்பிராயத்தை கவனித்தல் நலம். இந்த சமரசமாயுள்ள மோனமானது ஈதெனயாம் பலவாற்ருனும் விளக்கியிருக்கின்ரோம். இவையிப்படியிருப்பினும், சில விவேகிகள் பிரமத்தையடைவதற்குற்ற அநேக மார்க்கங்களில், இதுவோர் போக்கையுடையதென்று சொல்லக்கூடுமாயினும், ஆழ்ந்து யோசித்து க்ரமத்தோடு அப்பியாசித்துவரின் ப்ரமத்தை யடைவதற்கு ஒரேவழிதான் உள்ளதா, அநேக வழிகள் உள்ளதாவென்பதை யெமது ஆப்தர்களே நீங்கள் தெரிந்துக்கொள்ளுதல் கூடும். நாம் இப்படிச்சொல்வதினுல், ஏன் அப்படி அநேக வழிகள் இருக்ககூடாதென்பதாக உங்களில் சிலருக்கு சந்தேகமிருக்கக் கூடும். அப்படி சந்தேகப்படுவதற்கு அநுகூலமாக சாஸ்திரங்களும் காணப்படுகின்றன. ஆயினும் வாக்கியபிரயோகத்தின் விவேகத்தை யூகித்துஉணரும் திறம் நம்மில் பூரணமாக இல்லாதபோது பலமார்க்கங்களிருப்பதாக நம்மை சாஸ்திரங்களானது மருக்ஷியடையச்செய்யும் என்பது திண்ணமே. அந்தத் திறம் நம்மில் ஏற்பட்டு விட்டால் நம்முன்னோர்களினுல் கூறியுள்ள வாக்கியங்களின் விசேஷ இலக்ஷணங்களை யறிந்துக்கொள்ளுதல் கூடும்.

"எப்பொருள் யார்யார் வாய்கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு."

Koviloor Digital Library

எனக்கூறியுள்ள ஆன்றோர்களின் வாக்கியமானது கவனித்தற்குரியதாகிறது. ஆழ்ந்தகல்விகேள்வி யில்லாத சாமனியர்களுக்கு சாஸ்திரங்களில் முன்னோர்களால் கூறியுள்ள அபிப்பிராயங்களை கிரகிக்க சக்தியில்லாமல் போகலாமேயன்றி போதிய கல்வியின் ஆராய்ச்சியுள்ளவர்களுக்கு அவ்விதபேதமுள்ளதாக காணப்பட ஏதுவில்லை ஆனதினாலும், அப்படி முன்னோர்கள் கூறியுள்ள சாஸ்திரங்களில் அநேகமார்க்கமிருப்பதாகவே கற்றறிவுடையோராலும் ஒப்புக்கொள்ளப்படுகின்றபடியால், மார்க்கம் ஒன்றென்பது மிகுந்த சந்தேகத்திற்கிடமாயிருக்கின்றதென்றே அநேகர்கள் நினைக்கக்கூடும். அப்படி நினைப்பது தவறுதலுடையதென்பதனை விவரிக்கின்றேன். உலகத்தில் எந்தப்புருஷனால் சூரியனையடைய சக்கியமில்லையோ அவன் சமுசாரபந்தத்திலிருந்தும் விலகமாட்டானென்று ஸ்ரீசங்கராசாரிய சுவாமிகள் தமது வியாக்கியானத்தில் அருளிச்செய்திருக்கின்றார். உலகத்தில் எந்தப்புருஷன் சூரியனையடைகின்றானோ அவன் முறையே சந்திரனையும் அங்கே இருந்தும் வித்யுத் என்னுந் தேவதையையும் அதனால் அமானவனென்னும் புருஷனையும் அடையப்பெற்று அந்த அமானவனால் உபாசகன் பரமபதத்தை அடையப்பெறுகின்றான் என்று இராமாநுஜாசாரியரும் ஆகிய இந்த இரண்டு பேர்களும் ஒரு சுருதியின் மீதே வியாக்கியானஞ் செய்திருக்கின்றார்கள். இப்படிச்செய்துள்ளதை வேதோபநிஷத்துகளை யோதியுணர்ந்து பாஷியங்களோடு பார்க்கும் திறமையைப்பெற்றவர்கள், கல்வி திறமையை அடைந்த தகுதி யுடையாரேயன்றி சமான்யமானவர்களல்லவே? உலகத்தில் இந்த இலக்ஷணம் தெரிந்தவர்கள் அநேகர் இருக்கின்றார்கள்? அப்படித்தெரிந்துள்ளவர்கள் இதனையுபாசனுபாமாகக்கருதி விஷ்ணுகாயத்திரி, உருத்திரகாயத்திரி தேவிகாயத்திரி முதலான பேதங்களோடு, ப்ராத, மத்தியான, (சந்தியாஸ) சாயங்காலங்களில் இந்த அபிப்பிராயத்தை அவரவர்கள் மேற்கொண்டுள்ள மதச்சார்புகளுக்கிணங்க, காயத்திரிபேதத்தினால் ஜெபித்து, சூரியன் முன்னின்று, கைகளில் ஜலத்தை அள்ளி அர்க்கியம் செய்வதை நாம் இன்றும் காணுகின்றோம். இவர்களையடுத்து இப்படிச்செய்வதின் பிரயோசனமென்னவென்று நாம் விசாரிக்கின் உலகத்தில் இருக்கும்போது ஓர் புருடன் இவ்விதம்செய்துக் கொண்டுவரின் அவன் மரணமடைந்தபிறகு அவன் ஆத்மாவை தேவதைகள் சூரியமண்டலத்தையடையச்செய்கின்றன. அதன்பின் சூரியமண்டலமத்திய புருஷனால் இந்த உபாசகனுடைய உயிரை மோக்ஷத்தில் அடைவிக்கின்றானென்று சொல்லுகிறார்கள். இப்படிச்சொல்லப்பட்ட இவர்கள் கற்றோர்களே யன்றிவேறல்ல, ஆனாலும் மோக்ஷமென்பது ஒருவன் உலகசஞ்சாரத்தில் இருக்கும்போதே எண்ணத்தினிடத்தில் எந்தவிதமான பந்தங்களுக்கும், இடமின்றியும் எண்ணமானது எதினிடத்தும் பற்றின்றியும் இருக்கும் இலக்ஷணத்தையே சர்வசாந்தியென்றும் அதுவே முத்தியென்றும் கூறியுள்ளதால் தேகநீக்கத்தின் பிறகு முத்தியடைகின்றானென்று சொல்வது எவ்வளவு உசிதமான அபிப்பிராயமென்பதனை,

Koviloor Digital Library

" கருத்தடங்கின்முத்தியது கையலிற்கட்டாகும்
விரித்தபொருளிதுவென்ன அறிவுடையமேதக்கோர்
திருத்தகுனல்லறிவாலே சித்தத்தைதிறம்பாமல்
அருத்தியுடன்நிலைநிருத்து மதுஅறிவின்பயனுமால். "

எனக்கூறியுள்ள சாக்ஷாத் கைலாசபதியின் வாக்கியத்தைக்கவனிக்கின் நன்கு விளங்கும். ஆகவே முத்தியென்பது திரேகயாத்திரைக்கு பின்னல்லவென்பதும், தேகம் நழுகாதமுன்னரே என்பதும் அதனிலும் அதற்கு ஏற்ற தேகமானது மானிட தேகமேயென்பதும் தெளிவாக விளங்குகின்றதல்லவா?

" தேகமேநழுவி நானுமோநழுவின்
பின்னையுய்யும்வகை யுள்ளதோ. "

எனவும் ஆன்றோர்கள் குறிப்பித்துள்ளதால் உலகத்தில் வேதோபநிஷத்துக்களின் அபிப்பிராயத்தை யறிந்து நன்மையையடைய முடியாத ஜனசமூகமானது நன்மையையடைந்துய்யுமாறு உபகாரார்தத்தின் பொருட்டு வேதோபநிஷத்துக்களுக்கு நமது பூர்வாசாரியர்கள் வியாக்கியானம் செய்துள்ளதில் சூரியனையடையமுடியாதவனின் பந்தமானது விடுபடாதென்று சொன்ன அவர்களின் கிரமமான அபிப்பிராயத்தை தெரிந்துக்கொள்ள சக்தியில்லாதவர்களாய் பல்வேறுவிதமாக உபாசிப்பவர்கள் எல்லாம் கற்றவர்களேயன்றி வேறல்ல. இதனல் அந்த ஆசிரிய சிரேஷ்டர்கள் உண்மையையே சொல்லியிருந்தும், ஒரேமார்க்கத்தையே போதித்திருந்தும், அதையுணரச்சக்தியற்றவர்களால் பல மார்க்கமாக பிளவுபட்டு போய்விட்டதேயொழிய வாஸ்தவ்வியத்தில் அது ஒரேஅபிப்பிராயத்தையேயுடையதாகும். எப்படியெனில் சூரியனையடையாதவனுக்கு சமுசாரபந்தம் நீங்குகிறதில்லையென்றனர் ஸ்ரீ சங்கராசாரியர். இதில் எந்த பிராணகலையை சூரியகலையென்னும் பேரால் சொல்லப்படுகின்றதோ அதனைமுதலில் உணர்ந்து அதின் வழியாய் முக்கியப்பிராணனென்று சொல்லும் பரமாத்மனுடைய நிஜ இலக்ஷணத்தை தெரிந்துக்கொள்ள சக்தியில்லாதவனின் பந்தமானது விடுபடாதென்பதனை பூரணமாகவிளக்கினர். ஒருவன் முதலில் சூரியனென்று சொல்லும் பிராணகலையின் வழியும், சந்திரனென்று சொல்லும் உதான கலையின் வழியும், வித்யுத் தேவதையென்று சொல்லும் குருநாடியின் வழியும், அமானவனென்று சொல்லும் புருடநாடியின் வழியும், முறையேசென்று முடிவில் பரமபதமென்றுசொல்லும் பரமாத்மனின் ஸ்தானமாகிய முக்கிய பிராணனின் வாசஸ்தானத்தை யடைகின்றனென்பதை ஸ்ரீ இராமாநுஜாசாரியரும் கிரமமாக சொல்லியிருக்கின்றார்கள். தேகதத்வ இலக்ஷணத்தில் எல்லாப்பிராணிகளின் திரேகங்களினிடத்தும் இந்த இலக்ஷணமே பொருந்தியிருக்கின்ற

Koviloor Digital Library

தென்பதில் சந்தேகமே கிடையாது. ஆகவே மார்க்கத்தில் பேதமா, அந்த முன்னோர்களின் அபிப்பிராயத்தை யுணரச்சக்தியற்றவர்களால் உண்டாகிய பேதமா என்பதனை இங்கே விளக்கியுள்ள திருஷ்டாந்தத்தினால் நீங்களே பாகுபாடு படுத்தித்தெரிந்துக் கொள்வீர்களாயின் உண்மையானது ஒன்றே என்பதும், அதைபடையும் மார்க்கம் ஒன்றே என்பதையும் ஆக்ஷேபிக்க முடியாமல் ஒப்புக்கொள்ளவேண்டியவராவீர்கள் என்பது நிஷயம்.

இந்த உண்மையும் அதை யடைவதற்கு உரியதாயுள்ள அப்பியாசக் கிரமங்களையும், உங்களுக்கு முன்னமே விவரித்திருக்கின்றேன்.

"வானந்தமண்ணினந்தம் வைத்துவைத்துப்பார்க்கவெனக்
கானந்தந்த வரசே பராபரமே."

என கூறினர் பெரியோர். இப்படிக்கூறிய இவரது முக்கிய அபிப்பிராய மானது எது வானின் அந்தமாயுள்ளதோ அந்த சத்தத்தை மண்ணின் அந்த மாயுள்ள கிராணேந்திரியத்தினிடத்தில் சேர்ப்பித்து, ஊன்றி கவனித்தே வரின் ஆனந்தத்தை யடைவிக்கச்செய்யும் என்பதேயாகின்றது. இதனோடு மற்றும் பெரியோர்களின் அபிப்பிராயங்களையும் ஆழ்ந்து கவனிக்கின் உண்மை புலப்படும். இந்த உண்மையின் முக்கிய இலக்ஷணமீது கர்மயோகி, பக்தியோகி ஞானயோகி என்று சொல்லும் மூவகை யோகிகளுக்கும் சுழிமுனையை திறக்க வேண்டுமென்கின்ற ஒரே அபிப்பிராயத்தை யுடையதேயாகின்றது. இந்த அபிப்பிராயத்தைப் போன்று மூன்றுவகையான யோகியர்களும் சுழிமுனையை, திறந்துக் கொள்ளுகிறார்களென்பது உண்மைதான். ஆனாலும், ஞானயோகி யொருவனாலேயே இந்த சுழிமுனையை திறப்பதின் முக்கிய பிரயோசன மானது அடையப்படுகின்றது. கர்மயோகியாலாவது, பக்தியோகியாலாவது திறக்கப்பட்ட சுழிமுனையினால் எந்த முக்கிய பிரயோசனத்தை யடைய வேண்டியதோ அதை யடைதல் கூடாமையாகின்றது. இப்படிச்சொல்வதி னால், நம்மில் அநேகர் கோபித்துக்கொள்ளவும் ஆக்ஷேபிக்கவுங்கூடும். எமது நண்பர்களே, உங்களிலும் சிலருக்கு இங்கே சங்கையுண்டாகக் கூடும். எப்படியெனில் இந்த சுழிமுனையானதை திறந்துக்கொள்ளுதல் மிகுந்த பிரயாசத்தையுடையது அவ்வளவு கஷ்டத்தோடுங்கூடி சுழிமுனையை திறந்துக்கொண்டவொருவன் அதன் பிரயோசனத்தை யடையமாட்டா னென்பது ஆச்சரியமல்லவா? இங்கே இந்தச் சுழிமுனையானது எதன் நிமித்தியம் எந்தக்காலத்தில் திறக்க வேண்டியது அவசியமோ, அந்த இலக்கானது தவருதலில்லாமல் திறந்துக்கொண்டு அதனாலாகிய பயனையடைந்துக் கொள்ளுந்திறம் ஞானயோகியர்களுக்கே யுள்ளதென்பதனையும், மற்ற யோகியர்களுக்கு திறக்கும் சக்தி யிருந்தும், அதின் முக்கியபிரயோசனத்தை யடைய முடியாதென்பதனையும், நீங்கள் மிகுதியும் கவனித்து, உங்கள்

Koviloor Digital Library

முடிவுஸ்தானத்தை யடையும் பரியந்தமும் எந்தவிதத்திலும் மறந்துவிடுதல் கூடாது. இதற்கு திருஷ்டாந்தமாக, இதற்கு முன்னுள்ள சில விஷயங்களை எடுத்துச்சொல்லுதல் வியர்த்தமாகாதென்று நினைக்கின்றேன். இந்தச் சுழிமுனையானது வெளியண்டப்பகுதியின் பிராணவாயுவானது ஒவ்வொரு உருவத்திலும் ஒலிக்கருவியும், சுவைக்கருவியும், வாசனைக்கருவியும் எந்த இடத்தில் சம்பந்திக்கின்றதோ அந்த இடத்தில் வெளியிலிருந்து உட்செல்லும் பிராணவாயுவின் ஓர் அம்சத்தைக்ரகித்துக் கொண்டு இதனோடு காதின்வழியும், கண்ணின்வழியும், உட்புகும் பிராணவாயுவையுமேற்று, இருதயத்தினின்றும், நாபியினின்றும் எழுந்துவரும்படியாகிய, புரிதத்தி, ஆந்தரவேஷ்ணியென்னும் இரண்டு முக்கியநாடிகள் சகிதமும், இந்திரிய உணர்ச்சிகளைக்கொண்டு செல்லும், நரம்புகளையும் சேர்த்துக்கொண்டு, உதானகலையின் சகாயத்தினால் போஷிக்கப்பட்டு, கண்டஸ்தானத்திலிருந்தும் மேல்நோக்கி செல்லுகின்றதென்பது மூவகை யோகிகளில் ஒவ்வொருவருக்கும் நன்றாகத்தெரிந்திருக்கின்றது. இப்படித்தெரிந்திருந்தும் ஞானயோகிகளை யொழித்துமற்றையர்களை முக்கிய பிரயோசனத்தை யடையச்செய்கிறதில்லை யென்றும் அதற்குரிய திருஷ்டாந்தத்தை சொல்லுகின்றோமென்றும் சொன்னோமல்லவா? அது யாதெனில் இருதயஸ்தானத்தில் சேர்க்கப்பட்டுள்ள தேகத்தின் முக்கியமான அநேகநாடிகளில் மிகவும் முக்கியமான இருபத்துநாலு நாடிகளால் பின்னல் போன்று இணைக்கப்பட்ட ஒரு முடியானது நாபிஸ்தானத்தின் மூன்று அங்குலத்தின் கீழுள்ளது. அதின் மத்தியஸ்தானத்திலேயே சந்திரகலையானது நேரே இருதயஸ்தானத்திலிருந்தும் கீழ்நோக்கியவண்ணம் ஊடுருவிச்சென்று மூலத்தையடைகின்றது. இந்த சந்திரகலையான உதானகலையானது தாராளமாய்போக்குவரவு செய்வதற்காக இந்த நாடிகளின் முடியை சற்றே தளரசெய்வதினால், தக்க வசதி ஏற்படும். ஆனதினால் பொதுவாக யோகியர்கள் யாவர்களுக்கும் அதை தளர்த்துவதில் ஓரே அபிப்பிராயமேயுடையது. இந்த நாடிகளின் சந்தியாயுள்ள முடியை, சேஷசயனமென்றும், பாம்பின்படமென்றும், குண்டலி சக்தியென்றும் பொதுவாகச்சொல்லப்படுகின்றது. பக்தியோகி, கர்மயோகியாகிய இருவரும் இதனை குண்டலி சக்தியாக ஒப்புக்கொண்டார்கள். ஞானயோகிமாத்திரம் இதனை குண்டலியென்று ஒப்புக்கொள்வதில்லை. அவர்கள் ஏன் ஒப்புக்கொள்வதில்லை யெனில் இங்கே சம்பந்தப்பட்டுள்ள நாடிகளில் சிலது மேல் நோக்கியும், சிலது கீழ் நோக்கியும் செல்லுகின்றன. சிலது இரண்டு பாரிசங்களிலும் செல்லுகின்றன. இதுகளில் கீழ்நோக்கிச் செல்லும் பத்து நாடிகளும், மேல்நோக்கிச் செல்லும் நாடிகளைப்போன்று வேறு வேறாகி கிளைத்துக்கொண்டு போவதைப் போன்று போகாமல் ஒரே நாடியைப்போன்றும் தங்களின் மத்தியில் சந்திரகலையென்று சொல்லும் உதானகலையின் வசதிக்கு சற்றுங் குறைவுநேரிடாமல் காத்துக்கொண்டு, பீஜவணியின் சற்று மேல்பாகத்தில் மூன்று கூட்டு எலும்புகளின்மேலுள்ள

Koviloor Digital Library

வபையென்னும் மாம்சப்பகுதியின் மேல் பாரிசத்தையடுத்து அந்த மாமிசத்தின் கீழுள்ள மூலஸ்தானத்தையே யடைகின்றன. அப்படியடையும் அவசரம் ஏதேனும் ஒரு கயிற்றை மடிப்பதைப்போன்று மூன்று மடிப்புள்ளவைகளாகின்றது. எதனை குண்டலியென்று சொல்லப்பட்டதோ அதற்காக வேண்டிய சர்வசக்திகளும் இவ்விடத்திலேயேயுள்ளது. ஆனதினால், இதனை குண்டலிசக்தியென்று சொல்லப்படுமே தவிர இந்த நாடிகளின் முடிச்சுஸ்தானத்தை குண்டலி சக்தியென்றுசொல்வது தவறு என்பதனை நன்றாயுணர்ந்தவர்கள் யாவர்களோ அவர்கள் ஞானயோகியாகின்றார்கள். இந்த முடியைத்தளர்த்தினதும் மூலத்தைச்சென்று அடைந்ததிலும் எல்லாயோகிகளும் ஒரே இலக்ஷணத்தையுடையவர்களாக இருந்தபோதிலும், இங்கே இருந்துதான் ஞானயோகியை யொழித்த மற்றையர்கள் வேறாகிப்பிரிந்து போகின்றார்கள். அது எப்படியெனில், எல்லாயோகிகளும் இதுவரையிலும் செய்தது (அதோமுகம்) கீழ்நோக்கிய பிரயாணமாகின்றது. இதனைக் காசியாத்திரையென்று சொல்வதும் உண்டு. இனி இவர்கள் செய்யவேண்டியது (ஊர்துவமுகம்) மேல்நோக்கிய பிரயாணமாகின்றது. இந்த பிரயாணமானது குருநாடியின் வழியேசெல்லவேண்டியதென்றும், அந்த நாடியானது முதுகின்வழியே ஊடுருவிச்செல்லுகின்றதென்பதும் தெரிந்தவன் ஞானயோகியாகின்றான். இந்தமேல்நோக்கிய பிரயாணத்தை எந்த நாடியினூடே கீழ்நோக்கிச் சென்றானோ அந்த நாடியின் வழியே மேல்வந்து சுழிமுனையை திறந்துக்கொண்டு கபால வரையை சென்று அணுகுவதுதான் ஊர்துவமுக பிரயாணமென்று ஞானயோகியை யொழித்த மற்றயோகியர்கள் கருதுகின்றார்கள். இந்த மூலஸ்தானத்தில் இவர்கள் தங்குங்கால் நிகழும் அனுபவங்கள் சிலது இருக்கின்றது. அதனை சொல்லும் ஆற்றலை பூரணமாக பெற்றிலாதவனாயினும், ஸ்ரீ குருமூர்த்தியின் கிருபையையும், சத்துக்களின் பாததூளியினையும் ஆதரவாகக் கொண்டு சொல்லக்கூடுமான சில நுட்பங்களை ஒருவாறு விளக்குதல் நன்மையைத்தரக்கூடுமானதென்று நினைக்கின்றேன். இயற்கையாயுள்ள பிராணநடையில் கவனத்தை மாத்திரஞ்செலுத்தி அதனில்விளங்கும் நாதம், அக்ஷரம், எனுமிரண்டனையும் உணர்ந்து எண்ணமாகிய தனக்கு ஏதொரு தொழிலுமின்றி, சாக்ஷி பூதமாய் நின்று பிராணவாயுவானது செல்லும் வழியாகவே மூலஸ்தானத்தைச் சென்று அடைகின்ற இலக்ஷணமுடையவன் ஞானயோகி. இவனுடைய எண்ணமானது சாக்ஷிபூதமாயிருப்பதைத் தவிர அபிமானித்தல் கிடையாது. நாதத்தினூடே விளங்கும் அக்ஷரமானது நாதமே அக்ஷரசொரூபமாயும், இந்த அக்ஷரமே நாதம். முழுமையுமாயும் இருப்பதன்றியில், இந்த அக்ஷரமானது ஜெபித்தற்கும் சிந்திப்பதற்கும் முடியாமல் அஜப இலக்ஷணத்தோடிருப்பதினால் ஜெபித்தல், சிந்தித்தல் எனும் இரண்டுவகை தொழிலும் இல்லாமலே மேலே குறிப்பித்த மூலத்தை ஞானயோகி சென்று அடைகின்றான். இப்படியில்லாமல் பிராணவாயுவை

பூரகம், கும்பகம், இரேசகம் எனும் இழுத்தல், நிறுத்தல் விடுதலாகிய முத்தொழில்களை அது இயற்கையாய் நடப்பதைவிட அதிகமாக வேண்டியிருப்பதால் தனது பிரயத்தினத்தினால் முத்தொழிலையும் நடத்தி மூலத்தைச் சென்று அடைபவன் எல்லாகர்மயோகிகளும் பக்தியோகியின் ஓர் பகுதியுமாயிருக்கின்றார்கள். இவர்களுக்கு, பூரக, கும்பக, ரேசகமாதிய முத்தொழில்களுக்கும் முறையே மூன்று மந்திராக்ஷரங்களிருக்கின்றன. இந்தமந்திரங்களிலும் சில பகுதிகளிருக்கின்றன. இப்படியுள்ள பகுதிகளில் பிரணவத்தின் மூன்று அக்ஷரங்களையும் இந்த முத்தொழிலுக்காக உபயோகிக்கிறவர்களை மஹா விசேஷப்பட்டவர்களென்று கருதப்படுகின்றது. முயற்சியால் பிராணவாயுவை தொழிற்படுத்த வேண்டியிருப்பதினால் அபிமானமும் முத்தொழிலுக்காக மூன்றுவகையான மந்திரங்களின் ஜெபமில்லாவிடின் மாத்திரையின் அளவைக் காலப்பிரகாரம் கிரமமாக முத்தொழில் நடவாது ஆகையினால், ஜெபமும், இடக்குறிப்பு உள்ளதினால் சிந்தனையும், இவர்களிடமிருக்கின்றன. இந்தவித்தியாசத்தோடு மூலத்தைச்சென்று அணுகுந்தனிலும் பொதுவாக எல்லா யோகியர்களுக்கும் சாதக காலத்தில் பதுமாசனமிட்டே இருக்கவேண்டியது என்று சொல்லியிருப்பதோடு மூலத்தையடைந்தவுடன் ஞானயோகியை யொழித்தவர்களுக்கு வேறே ஆசனம் மாற்றப்பட்டிருக்கின்றது. ஞானயோகிக்கு இருதயத்தின் கீழ்ப்பிரதேசத்தில் சந்திரனின் கதிதெரிந்தவுடன், நிராசனமென்று சொல்லும் சுகாசனத்தை விதித்துச்சொல்லியிருக்கின்றது. இந்த ஞானயோகி மூலத்தையடைந்தவுடனாவது சுகாசனத்தை மேற்கொள்ளுதல் மஹா முக்கியமானது. இப்படி இவர்கள் மூலத்தைச்சென்று அணுகின சிலநாட்களுக்குள்ளேயே அக்னிமண்டல ஜோதி தரிசனத்தை யடையப்பெறுகின்றார்கள். அப்படிப்பட்ட தரிசனத்தினால் லீனத்தையடையாமலும், ஜோதியினிடத்தில் நெருங்காமலும், பிராணநடையையும், அதனில் கலந்துள்ள அக்ஷரநாதங்களையும் கவனித்து சர்வஜாக்ரதத்தில் சாக்ஷிபூதனாய் கவனித்து நிற்கும் ஞானயோகிக்கு துரியமூர்த்தியென்று சொல்லும் ஸ்ரீசத்குரு தரிசனமும், ஞானபோதகமும், இந்திரியநீக்கமும், ஏற்பட்டு முன் மூன்று மடிப்பாய் மடிந்துள்ள குண்டலி சக்தியின் நாடியானது கீழ்ப்புறமாக சற்று நீக்ஷியையடைந்து கஸ்ணுணி யென்று சொல்லும் முதுகு முள்ளின் கீழ்ப்பிரதேசத்திலுள்ள குருநாடியோடு கலந்து அங்கிருந்தும் மேல்நோக்கிச்செல்லும் ஊர்துவமுக பிரயாணத்தை நடத்தி தனது யதார்த்தஸ்தானத்தையடைந்து உண்மையான சாந்தியைப்பெறுகின்றான். இப்படி பிரயாணஞ்செய்யும் மார்க்கத்தை வீணாத்தண்டியினூடே செல்லுதலென்று சொல்லப்படும். இதனது கிரமங்களை முன்னரே விளக்கியிருந்ததில் சாதககாலத்தில் கடின தர்மத்தோடுங்கூடியுள்ள முக்கியமானதாக இருபது எலும்புகளின் சந்திப்புகளை மாத்திரம் சொல்லியுள்ளதில் உங்கள் சாதககாலத்தில் நீங்கள் சந்தேகிக்கவேண்டாம். முதுகு எலும்பின் மேல்பாகத்தில் பதினேழாவது சந்தியாயுள்ளதும் கழுத்திற்கு கீழ்பாகமான

Koviloor Digital Library

முட்டியினிடத்து குருநாடி, புருஷநாடியோடு சந்திப்பதென்னும் இலக்ஷணத்தை சொல்லியிருக்கின்றேன். ஆனதினாலும், கழுத்தினடிபாகத்திலிருந்து பிராணனின் ஸ்தானமட்டிலுமுள்ள கழுத்தெலும்பின் ஏழு சந்திகளில் நாலு சந்திகள் வரையிலும் அந்தகாரஸ்தலமாயும் ம்ருத்யூஸ்தானமாயுள்ளதால் இந்த கடினஸ்தானத்தைமாத்திரம் குறிப்பிட்டு பிரயாணத்திற்கு கடினமில்லாத மற்றமூன்றையுஞ்சொல்லாமல் விட்டதேயன்றி வேறில்லையென்பதனை உங்கள் கவனத்தில் பதித்துவைத்தல் மிகுதியும் அவசியம். ஏனெனில் உங்களின் சாதககாலத்தில் இந்த இருபத்துநாலு சந்திகளும் உங்களுக்கு விளங்கும். அப்படி விளங்கும்போது சங்கையுண்டாகக்கூடுமானதினால் இதனைக்குறிப்பித்ததே யொழிய வேறில்லை.

இனி மூலத்தையடைந்துள்ள கர்மயோகி, பக்தியோகி யிவர்களின் அப்பியாசமுறைமைகளை சொல்லுகின்றேன். மூலத்தில் ஜோதிதர்சனமானவுடன் சில நாட்களுக்கு பின்னர் இரண்டு குதிகால்களாலும், பீஜத்தின் இரண்டுபக்கங்களிலும் அரையைச்சேர்ந்தாப்போல் நெருக்கியழுத்திக்கொண்டாவது முள்ளந்தண்டு கீழ்முனைக்கொடியாயுள்ள கண்ணுணியென்னும் எலும்போடு குதத்தையும் சேர்த்து ஓர் குதிக்காலினால் அழுத்திக்கொண்டும் குறியின் மேல்பாகமானது அடிவயிற்றோடு எங்கே சம்பந்தப் பட்டுள்ளதோ, அந்த மத்தியஸ்தானமாகிய மூலத்தை மற்றோர் குதிக்காலினால் ஊன்றியழுத்திக்கொண்டும் முன்னையமுத்தொழில் கிரமத்தை நடத்திவருங்கால் கும்பகத்தில் கிடந்த பிராணவாயுவானது வெளிப்படுநிமித்தம் மேல்முக நோக்கிவரும் அவசரத்தில் சந்திரகலைக்கு சேதமுறுமல் சார்த்துக்கொண்டு மூன்று மடிப்புகளோடு கூடியிருந்த கீழ் நோக்கியபத்து நாடிகளையும் இந்தமடிப்பாகிய கோணல்கள் நீங்கும்படி இதனது ஓர் முனையை குதிக்காலினால் அழுத்திக்கொண்டிருப்பதினாலும், சந்திரகலையின் வழியே பிராணவாயுவானது மேல் நோக்கிவரும் வேகத்தினாலும் முன் சொல்லியகோணல்கள் நிமிர்கின்றன. இப்படியிது நிமிரவே நாபியின் மூன்று அங்குலத்தின் கீழிருந்த இந்த நாடிகளின் முடியானது நாபிக்கு சற்று மேல்பாகத்தை வந்து அடைகின்றன. இப்படி யிது மேல்பாகத்தையடையவே இந்த முடியிலிருந்து மேல்நோக்கிச்சென்ற பத்து நாடிகளும்இருதய கமலத்தோடு தாக்குறுவதினால் அங்கேயிருக்கும் கமலமும் மலர்ச்சியடைய எதுவாகின்றது. பிராணவாயுவை முயற்சித்து ஊதுவதினின்றுமுண்டாகும் உஷ்ண மிகுதியாலும் மூலஸ்தானத்திலுள்ள அக்னியின்தேஜஸானது இந்த நாடிகளினூடே மேலேறிவந்து இந்த கமலத்தையும் பிரகாசிக்கச் செய்து உருகிய தங்கத்தைப் போன்ற நிறமுடையதாயிருக்கும். இந்த கமலத்தை யடுத்துள்ள ஹர்யமா வென்னும் மாமிசப்பகுதியானது கமலம் விரியும் அவசரம், அதனது மேல்பாகத்தையடைந்து அதுவும் ஜோதிர் இலட்சணத்தோடு விளங்குகின்றது. இதனை சங்கரதரிசனமென்றும், நாரா

Koviloor Digital Library

யண தரிசனமென்றும், தத்தரிசனமென்றுங் கருதி சிலயோகிகள் இந்த காக்ஷியிலேயே நிலைத்துப் போய் விடுகின்றார்கள். வேறுசிலர் இங்கிருந்தும் மேலேபிச்சென்று முன்சொன்னவிதமாய் சுழிமுனையை திறந்துகொண்டு செல்கின்றார்கள். இப்படிச்செல்வதனை யிவர்கள் ஊர்த்துவ முகப்பிரயாண மென்று சொல்லும் மேல்நோக்கு பிரயாணமென்று நினைக்கின்றார்கள். இப்படி குண்டலிசக்தியையடைந்த பின்னர் எந்த கிரமத்தின் பிரகாரம் ஊர்த்துவமுக யாத்திரையென்று சொல்லும் இராமேஸ்வர யாத்திரையை நடத்தி ஆத்மாராமனையடைந்து அனுபவித்து கிருதார்த்தர்களாகவேண்டுமோ அப்படியாவதற்கு ஞானயோகியை யொழித்த மற்றவர்கள் தவறிவிட்டபடியால் சுழிமுனையைத்திறந்தும் அதினால் அடையும் முக்கிய பிரயோசனத்தை யடையக்கூடாதவர்களாய் விட்டார்களென்று சொன்னதேதவிர வேறில்லை. நாம் இப்படிச் சொல்லியதில் நின்றும் அப்பியாசத்தை மேற்கொண்டொழுகும் எமது நண்பர்கள் கோபத்தையடையாமல் சொல்லியது கிரமமா அல்லவா வென்பதீனை யோசித்து அதன்பிரகாரம் நடந்து நன்மையை யடைந்துகொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

"இரண்டதொன்று மூலமாய் இரவிமண்டலத்துளே
கருண்டுமூன்றுவளையமாய சுணங்குபோல் கிடாததீ
முரண்டெழூர்தசங்கிேனுசை மூலநாடியூடுபோய்
அரக்கபட்டணத்துளே அமர்ந்ததேசிவாயமே."

எனவும்,

"சங்கிரண்டுதாரையொன்று சன்னல்பின்னலானதால்
மங்கிமாளுதேயுலகில் மானிடங்களெத்தனை
சங்கிரண்டையுந்திறந்து தாரையூதவல்லிரேல்
கொங்கைமங்கைபங்கனோடு கூடிவாழலாகுமே."

எனவும், ஆன்றோர்கள் சொல்லியிருப்பதில் முதலில் குறிப்பிட்ட பாடலானது ஞானயோகத்தை விளக்கியும், இரண்டாவது குறிப்பிட்ட பாடலானது கர்மயோகத்தை விளக்கியும், ஒரே ஆசிரியரால் சொல்லப்பட்டதென்பதையும் நீங்கள் கவனித்து நோக்கின் கர்மயோகத்தில் பற்றுதலுண்டென்பதனையும் ஞானயோகத்தில் எவ்விதமான பற்றுக்கள் இல்லையென்பதையும் எந்த விதமான பற்றுதலுமில்லாமலிருப்பதே சர்வசாந்தியென்றும் நிட்சயமாக நீங்கள் தெரிந்துக்கொள்ளலாகும். பக்தியோகிகளில் ஒர் பகுதியார்கள் மேலே குறிப்பித்த சாதனக்கிரமங்கள் எதுவுமில்லாமலே சுழிமுனையைத் திறந்துக்கொள்ளுதல் கூடும். இப்படியிவர்கள் திறந்து கொள்ளினுஞ்சரியே. இவர்கள் குண்டலியை யடைந்து அதனால் ஆச்

Koviloor Digital Library

வேண்டிய நன்மையைப்பெற்றுக்கொள்ளாமல் எப்படி தவறிப்போய்விட்டார்களோ அதைப்போலவே சுழிமுனையைத் திறந்துக்கொண்டபின்னரும் தவறிப்போய் விடுகின்றார்கள். இவ்வளவு உன்னத நிலைமையையடைந்தவர்களுக்கும் தவறுதல் உண்டாகுமோவெனின் பிரமநிஷ்டாபரராயிருந்த ஜடபரதரும் தவறி விட்டனர் என்பதை சாஸ்திரங்களில் சொல்லியிருப்பதை நீங்களே பார்த்துக்கொள்ளவும்.

இவ்வகையான யோகியர்களில் இருதய ஸ்தானத்தை இருக்கையாகக் கொண்டவர்களையொழித்த மற்ற சுழிமுனையைத்திறந்துசென்ற கர்மயோகி, பக்தி யோகிகளில் அநேகர்கள் கபாலவரையை யடையப்பெற்று சந்திரமண்டல ஜோதிர்தரிசனத்தோடு நிலைத்து இதுவே ஆத்மனின் ஸ்தானமென்று கருதி நின்று விட்டார்கள். சிற்சிலர் அபூர்வமாய் ஆத்ம சன்னிதானத்தை யடையப்பெற்றார்களாயினும், அங்கேயே நிலைத்து நிற்க தவறிப்போய் விட்டபடியால் மீகந்துரு வாசியினால் வெளியே வந்து விட்டார்கள். இவர்கள் பூரணத்தை பார்த்தது உண்டு என்பதில் சந்தேகமே கிடையாது. ஆனால் பூரணமானது இப்படிச் சென்ற இவர்களை தன்னில் சேர்த்துக்கொண்டதுங்கிடையாது. இவர்களும் தாங்கள் பூரணமானார்களென்பதுங் கிடையாது. ஏன் இவர்கள் பூரணமாகத்தடைநேரிட்டது என்னில் எந்த குருநாடியின் வழியாய் செல்லவேண்டியதோ அதன் பிரகாரம் சென்றால் இந்திரியஞானங்கள் முறையே விடுபட்டுப் போய்விடுகின்றன. ஓர் கிரணமும் இந்திரியக்கலப்பு இல்லாதமனதானது ஆத்மசன்னிதானத்தை யடைந்து அசைவற்றுநிற்கும் அவசரத்தில்சுழிமுனையின் வழியாய்க்கொண்டு வரப்பட்ட இந்திரிய உணர்ச்சிகளையடையப்பெற்று இந்திரியநீக்கம் இதற்கு முன்னாலேயே தனக்கு கைவந்துள்ளதானதினால் அந்த இலக்ஷியத்திலேயே நிலைத்து நின்றுகொண்டு இந்திரியவிஷயங்களோடு சம்பந்தமாய் எந்த விதமான பற்றுக்களும் இல்லாமல் எல்லாவிதமான விவகாரங்களையும் நடப்பித்திருத்தல் கூடும். இந்த இலக்ஷணத்தை நான் நித்திய பிரமசாரியென்று சொன்னவரின் சரிதத்தையும், நான் நித்தியஉபவாசியென்று சொன்னவரின் சரிதத்தையும் ஒவ்வொருவரும் ஆழ்ந்து கவனிக்கின் இதனது இலக்ஷணம் விளங்கு மென்பதில் தடையில்லை. இந்தத்திறமை ஞானயோகத்தை மேற்கொண்டு, செல்லும் ஒருவனாலேயே முடியுமல்லது மற்றயோகியர்களால் முடியாதென்பதனை நான் கட்டாயப்படுத்தி சொல்ல வேண்டியிருப்பதில் எத்தகையரேனும் நம்மீது ஆயாசங்கொள்வது தகுதியுடையதன்று என்பதனை நீங்கள் யோசித்து தெரிந்து கொள்ளவும். இதினிலக்ஷணமானது இவ்விதமிருப்பினும், மூலஸ்தானத்தை யடைந்திருக்கும் எல்லாவகையான யோகிகளையும் பொதுவாக இராஜயோகிகளென்றே சொல்லப்படும் எனெனில் இந்த ஸ்தானத்தை நிர்விகல்பசமாதி யென்றும் இங்கே அடைந்தார்களை நிர்விகல்பசமாதி பரர்களென்றும் பெரியோர்கள் சொல்லுவதால் இராஜயோகிகளெனும் பெயரால்

Koviloor Digital Library

அழைக்க வேண்டியிருப்பதே தவிர, கிரமமான இராஜயோகிகளாகின்ற தில்லை. ஏனெனில் சுகப்பிராப்தத்தை யடைவதற்கு யோக்கியதையாயுள்ள அர்தாரூட சமாதிகிரமத்தையும் பூரணாரூட சமாதி கிரமத்தையும் அநுஷ்டித்துத் தெரிந்துக்கொள்ள போக்கியதை யற்றவர்களாய் இருக்கிறார்களன்றோ? எப்படி மாற்றுகுறைவாயுள்ள பொன்னையும் தங்கமென்றுசொல்லுவது உலகத்தின் சாமான்யபழக்கமோ, அதைப்போன்று இவர்களையும் இராஜயோகியென்று சொல்லுவது பெரியோரின் வழக்சன்றி வேறில்லை.

" வட்டமிட்டொளிர் பிராணவாயுவெனு
நிகளமோடுக மனஞ்செயு
மனமெனும்பெரிய மத்தயானையையென்
வசமடக்கிடின் மமண்டலத்
திட்டமுற்றவள ராஜயோகமிவன்
யோகமென்றறிஞர் புகழவே
யேழையேனுலகி னீடுவாழ்வனினி
யிங்கிதற்குமனு மானமோ
பட்டவர்த்தனர் பராவுசக்ரதர
பாக்யமான சுகயோகமும்."

என ஆன்றோர்கள் குறிப்பித்துள்ளதை நீங்கள் கவனிக்கின் இந்தப் பட்டமானது இவர்களின் மீதேற்றிச் சொல்லியுள்ள உபசாரமாத்திரமே என்பது நன்கு விளங்கும். இதன்றியில்,

" பத்திநெறி நிலைநின்று நவகண்டபூமிப்
பரப்பை வலமாக வந்தும்
பரவையிடைமூழ்கியும் நதிகளிடைமூழ்கியும்
பசிதாகமின்றி எழுநா
மத்தியிடைநின்றுமுதிர் சருகுபுனல்வாயுவை
வன்பசிதனக் கடைத்தும்
மௌனத்திருந்துமுயர் மலைநுழைவுபுக்கியும்
மன்னுதச நாடிமுற்றும்
சுத்திசெய்தும் மூலப்பிராணனொடங்கியைச்
சோமவட்டத் தடைத்துஞ்
சொல்லரியவமுதுண்டு மற்பவுடல்கற்பங்கள்
தோறு நிலைநிற்கவீறு

Koviloor Digital Library

சித்திசெய்தும் ஞானமலது கதிகூடுமோ
சித்தாந்த முத்திமுதலே
சிரகிரிவிளக்கவரு தக்ஷிணாமூர்த்தியே
சின்மயானந்த குருவே.''

எனச் சொல்லியருளிய ஆன்றோர்களின் அபிப்பிராயங்களை நாம் ஆழ்ந்து கவனிக்கின் கர்மயோகத்தினாலாவது பக்தி யோகத்தினாலாவது கதியென்று சொல்லும் சாந்தியையடைய முடியாதென்பது ஸ்பஷ்டமாக விளங்குகின்றதல்லவா? ஆயினும் வேதோபநிஷத்துக்களும், சாஸ்திரங்களும் இந்தகர்ம பக்திகளைச் சொல்லும் அவசரத்தில் இதுகளை சிரேஷ்டப்படுத்தியும், இவைகளாலே மோக்ஷத்தையடையலாமென்று கட்டாயப்படுத்தி சொல்லியிருப்பது ஏனெனில், நான் நானென்று சொல்லும்வாக்கியத்தின் இலக்ஷியார்த்தமாயுள்ள சொரூபசித்தாந்தமாகிய அமூர்த்த இலக்ஷணமானதுமறந்து போகாதவண்ணம் அந்தப்பதத்தின் வாச்சியார்த்தமாயுள்ள பகிர்முகமூர்த்தி இலக்ஷணத்தில் ஒருவன் பழகிவருவதினால், ஆஸ்திக்யஞானம் பலப்பட்டு காலக்கிரமத்தில் உண்மையைத் தெரிந்துகொள்ளக்கூடுமானதாகின்றது. ஒருவன் சொரூப சித்தாந்தத்தை மேற்கொள்ளவேண்டுமாயின் ஜெகஜீவபரமென்று சொல்லும் திரிபதார்த்தங்களையும் நேதிசெய்து பரமநாஸ்திகம் கைவந்தபின்னரே, திரிபதார்த்தத்தையும் நிவர்த்திசெய்த நானே, என்றும் நித்தியமாயுள்ள சொரூபமென்று உணர்ந்து அதனைத்தெரிந்துகொள்ளுகிறதற்கு ஏற்றவழியினால் தன்னை சாக்ஷாத்கரித்துக்கொள்ளுதல் கூடும். இதற்காகவே பெரியோர்கள் கர்மபக்திகளை வெளிப்படையாக ஒப்புக்கொண்டது மாத்திரமே தவிர அவர்கள் மனப்பூர்வமாய் ஒப்புக்கொள்ளவில்லையென்பது சற்றே ஆழ்ந்துயோசிக்கின் உங்களுக்கே அது ஸ்பஷ்டமாக விளங்கும்.

எமது நண்பர்களே, எந்தச்சுழிமுனை நாடியின் சகாயத்தால் இந்திரிய உணர்ச்சிகள் ஆத்மசந்நிதானத்தில் கொண்டுசேர்க்கப்படுகின்றதோ அந்த வழியானது சாதகம் செய்தவர்களுக்கும், அப்படிச்செய்யாதவர்களுக்கும் நகரும்படியான செய்கையிலிருக்கின்ற மற்றைய எல்லாப்பிராணிகளுக்கும் எப்பொழுதும் திறக்கப்பட்டே இருக்கின்றது. அப்படித்திறக்கப்பட்டிருந்தும் இந்தச்சாதகத்திற்குப்பிறகே இந்த உணர்ச்சியை யோகிகள் தெரிந்துகொள்ளுகிறார்களாகையால் இந்தச்சாதகத்தின்பிறகே திறக்கப்பட்டதென்றுயோகியர்கள் கருதுகின்றார்கள். ஆனாலும் அதுஎன்றும் திறக்கப்பட்டே இருக்கின்றது. இப்படிச் சொல்வதில் சாஸ்திரங்களும், பெரியோர்களும் சுழிமுனையைத்திறந்துகொள்ள வேண்டுமென்றும், அப்படித்திறந்துக்கொள்ளுவதற்கு சக்தியில்லாத சாதகனுக்கு தானே தானாகின்ற ஞானத்தையடைய இலக்ஷணம் விளங்காதென்றும், அப்படி விளங்காமையினால் சமாதி இலக்ஷணத்தையடைந்து க்ருதார்த்தனாக யோக்கியதையற்றவனாகி விடுகின்

Koviloor Digital Library

றுனென்றும், இப்படிப்பட்டவனுல் சாதித்துக்கொண்டுவரும் அநேக வகையான பழக்கங்களினுல் மனது ஒற்றுமையடைந்து தேகமானது அசை வற்று நிற்கின்றதாக காணப்படினும் அது சமாதியன்றென்றும் கண்டித் திருப்பதை நாம் காணுந்தோறுந் ஒரு பலத்த சங்கையானது நம்மில் உண்டாகக்கூடும். சாஸ்திரங்களும், பெரியோர்களும் இப்படிச்சொல்லி யிருப்பதில் சம்சயமே கிடையாது. என்றும் திறந்துள்ளதாகச்சொன்ன சுழிமுனை நாடியின் இலக்ஷணமானது இந்த நாடியின் மேல்முனையாகின் றது. இதனது கீழ்முனையானது என்றும் திறந்துள்ளதல்ல. அதனை சாத கன் திறந்து தீரவேண்டியதே அவசியம். இப்படிச்சொல்வதினுல் இந்த திறத்தலென்னும் செய்கையின்மீது நீங்கள் மலைவுகொண்டு தவறிப்போய் விடவேண்டாம், எது குண்டலி நாடிகளின் முடிக்கு கீழ்பாகமாயுள்ள மடிந்தநாடியோ அதை கீழ்நோக்கியவண்ணம் நிகளச்செய்து முதுகெலும்பு களினூடே செல்லும் குருநாடியின் கீழ்முனையுடனும், முதுகு எலும்பின் கீழ்பக்கத்தில் அந்த எலும்புகளோடு சேர்ந்தாப்போல் ஓர் குழாய்ப்போன்று செல்லும் ஓர் சிறு நாடியினூடும், முன் சொல்லிய மடிந்தநாடியின் கீழ்முனை யானது இரண்டு பிரிவாகப்பிரிந்து கூடும்படிச்செய்வதைத்தான் சுழு முனையைத்திறத்தலென்று சொல்லப்படும். இந்த குருநாடி செல்லும் முள்ளந்தண்டு எலும்புகளின் கீழ்பாரிசத்திலுள்ள குழாய்போன்ற சிறு நாடியே சுழுமுனுநாடியின் கீழ்முனையாகின்றது. இப்படி மேலும் கீழு மாக செல்லும் குருநாடி, சுழுமுனுநாடி இரண்டும் கழுத்தினடி பாகத்தில் இரண்டு கொடிகளாக பிரிந்துள்ள புருஷநாடியுடன் கலந்து ஆத்ம சன்னிதானத்தையடையும் இலக்ஷணத்தைமுன்னரே சொல்லியிருக்கின் றேன். இந்தக் கிரமம் இவ்விதமிருப்பதினுல் இந்த நாடிகளின் சந்திப்புக ளுக்கு எவ்வித இடைஞ்சலும் நேரிடாதவண்ணம் காத்துக்கொள்ளும் திறமையையுடையவன் பிராணுயாமத்தை மேற்கொண்டு செல்லும் கர்ம யோகியேயாயினும் அவன் ஞானயோகியேயாகின்றுன். இந்த சந்திகளுக்கு தடைநேரிடும்படி செய்யும் ஞானயோகபழக்கமுடையவனும் கேவல கர்ம யோகியாகின்றுனே யொழிய, ஞானயோகியாகின்றதில்லை. ஆனுல் ஞான யோக பழக்கமுடையவனிடத்தில் சுவாசத்தை யிழுத்தல், நிறுத்தல் முதலா கிய செய்கைகள் கிடையாது. ஆனதினுல் நிற்பயமாக அப்பியாசித்துக்கொள் ளுகின்றுன். இப்படி அப்பியாசிக்கும் ஞானயோகிக்கு, பிராணவாயுவை யிழுத்தல், நிறுத்தல் முதலிய செய்கைகளால் தளர்ச்சியையடையவேண்டிய குண்டலியின் முடியானது சுவாசத்தைவலிந்து இழுத்தல், நிறுத்தல் என்னும் செய்கைகளில் பழக்கமில்லாத ஞானயோகிக்கு எப்படி முடியு மென்று உங்களுக்கு சங்கை உண்டாகக்கூடும். ஞானயோகி இந்த முடியை எப்படி தளர்த்திக்கொள்ளுகிறுனென்பதை முன்னரே உங்களு க்கு விளக்கியிருக்கின்றேன். ஞானயோகிக்கு (கும்பகம்) சுவாசத்தை நிறுத்தல் என்னும் செய்கைகிடையாதோ என்னில், உண்டு என்பதுதான்

Koviloor Digital Library

உண்மை. ஆனால் யோகிகள் கும்பிப்பதைப்போன்று கண்டஸ்தானத்தில் அண்ணாக்கினடிபாகத்தில் ஓங்காரத்தின் முதல்மாத்திரையாகிய அக்ஷரத்தின் சப்தம் சற்றே சிதையுறும்படியும் ஆய்தவெழுத்தைப்போன்று ஒலிக்கும்படியும் செய்து கும்பகத்தை விர்த்திப்படுத்துவதல்ல. இந்த ஞானயோகி கும்பகம் செய்வதற்கு எந்த வகையான அக்ஷரங்களையும் உபயோகப்படுத்தாமலே இருதயத்தின் கீழ் குண்டலிமுடி மட்டிலும் வயற்றிலுள்ள மடிப்புகளை சற்றே சுருங்கச்செய்வதினாலும், தளரச்செய்வதினாலும் நாபியின் கீழ்செல்லும் சுவாசமானது சாதாரணமாகதான் போவதைவிட சற்று வேகமாக செல்லும் சக்தியும் சற்று பளுவுமாகக்காணப்படும். அதனால் கும்பகத்தின் ஓர் அம்ஸமும் அடையப்பெறுகின்றான். இதனது சகாயமும் கூடியுள்ளதினால் குண்டலியின் முடியானது தளர்ச்சியடையும் சக்தியை ஞானயோகியடைகின்றான். கர்மயோகியோ சுவாசத்தை வலிந்து யிழுத்து கும்பிக்கின்றானாதலினால் பிராணனானது அபானத்தின் வழியே ஓர்கால் கீழ்நோக்கிச் சென்றுவிடலாமென்று கருதி அப்படிவெளியே போய்விடாதபடிக்கு அதை தடைசெய்கிறான். அப்படி பிராணபாதுகாப்பினிமித்தம் செய்யும் தடையானது குண்டலி நாடியினை குருநாடியோடும், சுழிமுனைநாடியோடும் கலக்கும் செய்கையிலிருந்து தடைசெய்தவனாகின்றான். அப்படிச் செய்வதினால் ஞானலட்சணத்தை உணர்ந்து கொள்ள சக்தியற்றவனாகிப் போகின்றான். கர்மயோகிபிராண பாதுகாப்பினிமித்தம் சுவாசத்தை யிழுத்து நிறுத்தும்சமயத்தில் நாம் முன்னே குறிப்பிட்டுள்ளபிரகாரம் தடைசெய்யவேண்டிய வனாகின்றான். ஆனாலும் எந்தக்கர்மயோகி பூரக, கும்பக, ரேசகத்தை ஓங்காரத்தின் மூன்றக்ஷரங்களினாலும் நிறைவேற்றுகின்றானோ அவன் நிர்ப்பயஸ்தனாய் எவ்விததடையும் செய்ய வேண்டிய அவசியமேயில்லை. இந்த யிலக்ஷணம் தெரியாதவன் தடைசெய்ய வேண்டியது அவசியமேயாகின்றது. இந்த யிலக்ஷணந்தெரிந்தவனை சுவாசமானது கிழித்துக்கொண்டு சென்றுவிடாதோ எனில் ஓங்காரத்தின் மௌன லக்ஷணமாயுள்ள மகா வாக்கியத்தை சுவாசத்தினாலேயே உச்சரித்துக்கொண்டே சுவாசத்தை யிழுத்து நிறுத்துகின்றானானதால் தேகத்தின் கீழ்பாகத்திலுள்ள யிரண்டு துவாரங்களும் மகாவாக்கிய லக்ஷணத்தினால் அடைபட்டுப்போகின்றன. மேல்பாகத்திலுள்ள எழுதுவாரங்களும் ஓங்காரத்தின் முதல் மாத்திரையினால் அடைபட்டுப்போகின்றன. இதனால் இந்த யோகியர்னவன் பிராணன் வெளியேறிவிடுமென்று பயப்பட எவ்வித நியாயமுமில்லை.

"ஒன்பதுவாயில் ஒருமந்திரத்தால்
ஐம்புலக்கதவை யடைப்பதுங்காட்டி."

எனவும்,

"இடைபிங்கலையின் எழுத்தறிவித்து."

எனவும்,

Koviloor Digital Library

" குண்டலியதனிற் கூடியவஜபா
விண்டெழுமந்திரம் வெளிப்படவுரைத்து."

எனவும்,

ஆன்றோர்கள் கூறியிருப்பதை, ஆழ்ந்து கவனிக்கின் இங்கே நாம் சொல்லியுள்ளது கிரமமென்பதனை நன்றாயுணர்ந்துகொள்ளுதல்கூடும். ஆகவே இந்தக்கிரமம் தெரிந்து அதன் பிரகாரம் நடத்தும் கர்மயோகியும் ஞானயோகியாகின்றானே யொழிய, வேறில்லை. இந்த பிரயாசங்கள் ஒன்றுமில்லாமலே ஞானயோக அப்பியாசம் செய்துகொள்ளக்கூடுமாயுள்ள தானதினாலும் கர்மயோகத்தின் பிரகாரம் பழக்கம் செய்துக்கொண்டு போகப்பட்டவனும் கீழ்நோக்கு நடையில் நின்றும், விலகி மேல் நோக்கு பிரயாணத்தை நடத்துவதற்கு ஆரம்பத்திலேயே கர்மயோகமானது விடுபட்டு, ஞானயோக லக்ஷணம் நிலைத்து, அங்கிருந்தே மேல்நோக்கு லக்ஷணத்தை யடையவேண்டியது அவசியமானதினால் கர்மயோகத்தில் பழகுவதைவிட ஆரம்பத்திலிருந்தே ஞானயோகத்தில் பழகுவது சர்வசிலாக்கியம். கர்மயோகிகளில் எத்தனையோ பேர்வழிகளில் ஒருவன்தான் இந்த லக்ஷணத்தை யடைந்துக்கொள்ள முடியும். மற்றவர்கள் அதை யடையத்தவறிப்போய் விடுவார்களென்பது நிச்சயமானதினாலும் கர்மயோகத்தினாலும், பக்தியோகத்தினாலும் தன்னை யடைய முடியாதென்று சொல்லியிருப்பதே தவிர, வேறில்லை. நாமிப்படி சொல்வதினால் கர்மயோகத்தை மேற்கொண்ட எத்தனையோ பேர்களில் ஒருவனாவது தன்னையடைந்து சர்வ சாந்தியைப் பெறுகின்றனுதலினால் கர்மயோகத்தினாலும் தன்னை யடையமுடியுமென்றும் ஆகவே அதனைப் பழக்கம் செய்யலாமென்றும் நீங்கள் சொல்லக்கூடும். எவன் பிராணாயாம துவக்கத்திலேயே ஓங்காரத்தின் மூன்று அக்ஷரயிலக்ஷணங்களையுந்தெரிந்து அதன் பிரகாரம் அப்பியசிக்கின்றானோ அவனும் எவனுக்கு ஓங்காரத்தின் மௌனயிலட்க்ஷணமும் அமாத்திரை என்று சொல்லும் நாதலட்க்ஷணமும் விளங்குகின்றதோ அவனும் ஞானயோகிகளேயல்லது கர்மயோகிகளாகின்றதில்லையென்னும் நியமமிருப்பதாலும் இப்படிப்பட்ட கர்மயோக அப்பியாசியும் ஞானயோகி யென்னும் பெயராலழைக்கப் படுகின்றானே யல்லதுகர்ம யோகியென்னும் பெயராலழைக்கப்படுகின்றதில்லை ஆகவே ஞானயோகி யொருவனாலேயே தன்னை யடையப்படுமே யல்லது மற்ற யோகிகளால் தன்னையடையப் படமாட்டாதென்பதில் உங்களில் ஓர் திரணமும் சந்தேகப்பட வேண்டாம். இந்த லக்ஷணமிருப்பதினாலேயே

" ஞான தேவதுகைவல்யம் "

என சுருதிகள் படித்திருக்கின்றது இதனை நீங்கள் ஆழ்ந்து கவனித்துத் தெரிந்துக்கொள்ளவும். எமது ஆப்தர்களே மானுஷ்ய உருவத்தை மேற்கொண்டு வந்த ஒவ்வொருவரும் எதார்த்தமனித னென்று சொல்லும் இந்த

Koviloor Digital Library

நிஜலட்சணத்தைத் தெரிந்துக்கொள்வதற்கு பிரயத்தினப்படுங்கள் அப்படித் தெரிந்துக் கொள்ளாதவரையில் ரூபத்தினால் மானுஷ்யத்தைப் பெற்றிருந்தும் மனிதப்போலிகளேயல்லது எதார்த்த மனுஷ்யர்களென்று உங்களை விவேகிகள் மதிக்கிறதில்லை. எடுத்த இந்த ஜென்மமானது நழுகுவதற்கு முன்னரே இதனை யடைந்துக்கொள்ளப் பிரயத்தினப்படுங்கள் அப்படி கூடாமல் போய் விடுமாயின் ரூபாந்த விரிவின் கோட்பாடுகளுக்கிணங்க மனுஷ்ய ரூபத்திற்கு மேலாகிய தேவதா சொரூபத்தின் பிராப்தத்தை யாவது இதனிலும் தாழ்ந்த தாவராந்த ஜென்மப் பிராப்தத்தையாவது அடையாமல் மறுபடியும் இதே மானுஷ்ய ஜென்மத்தையாவது அடைவதற்கு எற்ற பிரயத்தினங்களையாவது செய்யுங்கள். இந்த இரண்டிலேதாவதொன்றை செய்யத்தவறுவீர்களாயில் எதார்த்த மனிதனுமாகாமல் போலி மனிதனுமாகாமல் உபயப்பிரஷ்டத்துவத்தை யடைந்து இந்த ஜென்ம மெடுத்ததின் பிரயோசனத்தை வியர்த்தமாக்கி விடுவீர்களென்பதனை நீங்கள் ஒவ்வொருவரும் மறந்துவிடாமல் ஞாபகத்தில் பதித்து வைப்பது நன்மையைத்தருவதாகும். நாம் இப்படிச் சொல்வதினால் பிரமத்தையடையத்தவறினவர் அடுத்த ஜென்மமானது மானிடத்தையேனும் அடையப்பிரயத்தினப் படுங்களென்று சொல்வது பொருத்தமாகக் காணப்படவில்லையேயென்றும்,

" இப்பிரவிதப்பினா லெப்பிறவி வாய்க்குமோ
எதுவருமோ வறிகிலேன் "

என்றும் கூறியுள்ள ஆன்றோரின பிப்பிராயங்களுக்கு முற்றும்எதிரிடையாக காணப்படுகின்றதே என்றும் உங்களுக்கு ஓர் சங்கை யுண்டாகக் கூடும். ஆனாலும் தன்னையடையும் பிரயத்தினம் எந்த மனுஷ்யனால் செய்யப்படவில்லையோ அப்படிப்பட்டவனும் பிரயத்தினப்பட்டு பூரணமாக சாதித்துக் கொள்ள முடியாவிட்டாலும் இந்த தேக நீக்கத்தின் ஆதாரமான பிராண அசைவின் கடைசிமட்டிலும் எண்ணத்தினிடத்தில் தன்னையடையும் பிரயத்தினத்தை மறந்து மற்றைய விவகாரங்களில் எவனுடைய எண்ணமானது நிற்கின்றதோ அப்படிப்பட்டவனும் இந்த தேக நீக்கத்துக்குப் பிறகு எந்த ஜென்மத்தை யேனும் அடையலாம். பிராண அசைவின் கடைசி நேரத்தில் தன்னையடைய வேண்டு மென்னும் எண்ணம் எவனிடத்தில் நிலைத்து நிற்கின்றதோ அப்படிப்பட்டவன் அதற்கு அடுத்தபடியான மறு ஜெனமத்தில் மானிடஜென்மத்தையே யடைகின்றானென்பதில் அற்பமேனும் சந்தேகமே கிடையாது. ஆனால் எண்ணத்திற்கு அவ்வித சக்தி உண்டோ என்னில் உண்டென்பது தான் உண்மையுடையது,

" சங்கல்பமாத்திரமே ஜெகத்தோற்றம்."

Koviloor Digital Library

என் குறிப்பித்துள்ள வாக்கியத்தை கவனிப்பதோடு பிரதிதினமும் நாம் ஒவ்வொருவரும் நித்திரையை யடையும் சமயத்தின் கடைசி நேரத்தில் எந்த நினைவானது நிற்கின்றதோ எந்த நினைவோடு சென்று நித்திரையை யடைகின்றோமோ மறுபடியும் நாம் விழிப்பிற்கு வரும்போது அதே நினைவானது முதலில் எழுந்தபிறகே மற்றைய சலனங்கள் உண்டாகின்றதென்பதனை ஒவ்வொருவரும் அனுபவ பூர்வகமாய் மறுக்க முடியாமலிருப்பதினால் கட்டாயமாய் மேல் குறித்தவண்ணம் நிலைத்து நிற்பவன் மானுஷ்ய ரூபத்தை யடைகின்றானென்பதில் சந்தேகமே கிடையாது.

இதன்றியில் நாம் பிரதிதினமும் இரவு 9-மணிக்கு படுக்கைக்குச் சென்று விடியற்காலை 4 அல்லது 5-மணிக்கு எழுந்திருக்கும் பழக்கமுடையவர்கள் என்பதாகவைத்துக்கொள்ளுவோம். இவ்விதபழக்கத்திலிருக்கும்படியாகிய நாம் ஒருநாள் நாடகமோ, அல்லது எதேனுமொருவேடிக்கை பார்ப்பதற்காகவோ சென்றிருந்தோ மென்பதாகவும், பழக்கத்தைப்போன்று 9-மணிக்கு நித்திரைக்குச்செல்லாமல் 12-மணிவரையிலும் கண்விழித்திருந்ததாகவும் வைத்துக்கொள்ளுவோம். அப்படி விழித்திருந்த நமக்கு விடியற்காலை 3 அல்லது $3\frac{1}{2}$-மணிக்காவது, அல்லது நம்மால் குறிப்பிட்டுக் கொள்ளும் எந்த நேரத்திற்காவது விழிப்பிற்கு வந்து சிலகாரியங்கள் அவசியமாக பார்க்கவேண்டுமென்பதாகவும் ஒப்புக்கொள்ளுவோம். இவ்வண்ணம் முடிப்பிக்கவேண்டிய நாம் இரவு 12-மணிக்குமேல் படுக்கைக்குப்போயிருந்தால் எழுந்திருக்கவேண்டி குறிப்பித்துக்கொண்ட நேரத்திற்கு நம்மை எழுப்பிவிடும்படி வீட்டிலுள்ளவர்களிடத்தில் சொல்லிவிட்டு படுக்கைக்குப்போகின்றோம். அல்லது கடியாரத்திலுள்ள (அலாரம்) ஒலிக்கருவியின் சகாயத்தையாவது தேடிக்கொள்ளுகிறோம். இந்தப்பழக்கமானது ஸர்வத்ரசாதாரணமாக எல்லாரிடத்தும் உள்ளதேயல்லவா? இங்கே மேலே குறிப்பித்த எவ்வித சகாயமுமில்லாமலிருப்பதாக ஒருவனை வைத்துக்கொள்ளுவோம்; அவன் எழுந்திருக்கவேண்டியிருந்தால் செய்யவேண்டியது என்ன? தன்னை எழுப்புவாரின்மையால் குறிப்பிட்ட நேரத்திற்கு எழுந்திருக்கமுடியாமல் அப்படியே தூங்கிப்போய்விட வேண்டியதே, யல்லது குறித்த அந்த நேரத்திற்கு விழித்துக்கொள்ளமுடியுமா? என நம்மில் ஒரு சங்கையானது உதிக்கக்கூடும். இதற்கு சாமான்யமானவர்கள் தூங்கிவிடுவானென்பதையே சமாதானமாகச்சொல்லுவார்கள். சற்றே யூகமுடையவர்கள் பயமிருந்தால் அதெப்படி தூக்கம் வந்து விடுமென்று சொல்லுவார்கள். இந்த இருவகைச்சமாதானமும் உலக வழக்காயென்றுமுள்ளது. ஆனாலும் குறிப்பித்த அந்த நேரத்திற்கு அவன் எழுந்திருக்கமுடியுமாவென்றால் குறித்தநேரத்தில் எழுந்திருக்கவேண்டியதற்கு உரித்தாகிய சிலசெய்கைகள் இருக்கின்றன. அவைகளைச்செய்து நித்திரைக்குப்போவானாயின் எந்தமணியின் எத்தனையாவது நிமிஷத்தில், தான் விழிப்பிற்கு வரவேண்டியதென்னும் சங்கேதம் செய்துகொண்டானே,

Koviloor Digital Library

அதற்கு ஓர் திரணமும் முன்பின்னுகாமல் விழிப்பிற்கு வருவான் என்பது நிச்சயம். அப்படியவன் செய்யவேண்டிய செய்கையானது யாதெனில், தனது படுக்கையின்மீது அவன் படுத்தவுடனே எண்ணத்தின் அலைகளை சற்று ஓயச்செய்து நான் இந்த நேரத்திற்கு எழுந்திருக்க வேண்டுமென்னுங்காரியத்தை பலமாகபதியவைத்து அந்த சமஸ்காரத்தோடு நித்திரை செய்யவேண்டியதேயாகின்றது. இப்படியிவன் சங்கற்பஞ்செய்யுமிதனை துரியதரிசனஉன்னுதல் என்னும் பெயரால் சொல்லப்படும். இப்படி செய்து நித்திரைக்குச்சென்ற ஒருவன் குறித்த அந்த நேரத்திற்கு விழிப்பிற்கு வரத்தவறுனென்பதை எத்தகையோராலும் ஆட்சேபித்தற்குக்கூடாததும், யாவருக்கும் அனுபவமாருதவில்லாத விஷயமுமானதினுல் இந்ததேகயாத்திரையின் கடைசிநேரத்தில் எந்த எண்ணமானது நின்றதோ, அதனிடத்திலேயே மறுபடியும் ஜனனத்தையடைகின்ருனென்பது பிரத்யட்ச அனுபவம். இந்ததேகத்தின் நீக்கமானது நித்திரைக்குப்போவது போன்றும், மறுதேகத்தையடைதலானது விழிப்பிற்கு வருவதுபோன் றுமாகின்றது, இதனை

"உறங்குவதுபோலும் சாக்காடு, உறங்கி
விழிப்பதுபோலும் பிறப்பு"

எனக்கூறியுள்ள முன்னேர் வாக்கியத்தை ஆழ்ந்து கவனிக்கினிதனது சாராம்ஸமானது கிரமமாக விளங்குமென்பதில் தடைகிடையாது.

இதன்றியில். ஒருவன் நித்திரை காலத்திலாவது வியாதிப்படுக்கையில் ஜன்னியின் நிலைமையில் அதிகமான கஷ்டத்திலிருக்கும்போதாவது தான் பழகியிருந்ததேசத்திற்கும், கற்றுக்கொண்ட பாஷைக்கும் எவ்விதத்திலும் சம்பந்தமில்லாததும் இந்த தேகசஞ்சாரகாலத்தில் பார்த்துங்கேட்டுமில்லாததுமான தேச வளப்பங்களைப்பற்றி அந்த தேசத்தில் வழங்கும் பாஷையினுலேயே பேசுவதையும், சிற்சிலசமயம் தேசவளப்பங்களை ஒழித்து அநேகபாஷைகள் பேசுவதையும், நாம் பார்க்கின்ருேமல்லவா? இந்த விஷய சம்பவங்கள் நேரிடுங்காலம் கனவின் காலமாயிருந்தால், பிசாசின் சேஷ்டிதமென்றும் வாய் பினத்துதலென்றும், வியாதிப்படுக்கையின் காலமாயிருப்பின் ஜன்னியின் சேஷ்டிதத்தினுல் பித்தம் மீறுதலினுலுண்டாகும் பிதற்றுதலென்றும், அந்த பாஷைக்குரிய ஆவேசம் அல்லது பைசாசம் பிடித்துகொண்டிருப்பதினுல் உண்டாகும் சேஷ்டைகளென்றும் எமதூதரோடு வாதாடுதலென்று சொல்லும் உலகானுபவத்தைக்கேழ்ப்பதோடு பிரத்தியட்சமாகவும் பார்க்கின்ருேமல்லவா? எமது மித்திரர்களே இந்த சம்பவங்களையே ஆதரவாகவைத்து யோசித்தால் இவ்வித நிகழ்ச்சிகள் எண்ணத்தின் ஆழ்ந்தபிரதேசத்தில் பதிந்து கிடந்த இதற்குமுன்னைய ஜென்மாந்திரங்களின் உணர்ச்சிகளே யல்லது வேறல்ல வென்பதும். இச்சம்பவங்களை

Koviloor Digital Library

ஆழ்ந்துயோசிக்கும் திறனற்ற அறியாமை நிறைந்த சாமான்யர்களால் மேலே குறிப்பித்த வண்ணம் பலவிதமாகசொல்லிக்கொள்ள ஹேதுவாயிருக்கிறதென்பதும் ஸ்பஷ்டமாக விளங்குமென்பதில் தடைகிடையாது. இன்னமும் இதைப்போன்று அநேக திருஷ்டாந்தங்களுமிருக்கின்றதானதினால் ஒருவன் தனது மறுஜன்மத்திலும் மானுஷ்யனாய்வரக்கூடுமென்பது பெறப்படுகின்றது. மரணாந்தகாலத்தில் மனதின் கலக்க முறுதவர்களால் கோறினபிரகாரமேஜென்மம் வாய்க்குமென்பதே உருதியுடையது. நாம் இப்படிச்சொல்வதினால் ஒருவன் தனது மரணாந்தத்தில் தன்னை ஞானியென்று நினைப்பின் அவ்வண்ணமே அவன் ஞானியாகவும் தனக்கு பிறவியில்லாதவனாகவும் ஆய்விடக்கூடுமல்லவா? ஆகவே இவ்வித சுலபமான அனுஷ்டானமிருக்க இதனை விட்டு இராஜயோகமே முதலிய அனுஷ்டானக்கிரமங்களில் நாம் கஷ்டப்படுவானேனென்பதாக உங்களில் சிலருக்கு சங்கை யுண்டாகக்கூடும். ஆனாலும் வெளியண்டப்பகுதியின் பூததத்துவங்களின் சேர்க்கையிலிருந்துண்டாகிய பிண்டப்பகுதியின் பூத தத்துவாம்ஸங்கள் ஒன்றிலொன்று லீனமாகுந்தருவாயில் ஏற்படும் நெருக்கமுமதினாலேற்படுமுபாதியும் சகித்தற்குக்கூடாமையாயிருப்பதினால், நீடித்த காலபரியந்தம் சமாதி பழக்கஞ்செய்துள்ள மேலோர்களினெண்ணத்தையுமித்த வுபாதியானது கலைபச்செய்யும் சக்தியுடையதானது கொண்டு சாதகம் செய்தே தீரவேண்டுமென்பதனை

"வேறோர்சண்டன் வராமுன்னர்
செத்திருமோனி."

எனவும்,

"நீகேட்டேயிரு நீசெத்தேயிரு."

எனவும்,

"அறிவோடிருந்து இருவாதனையற்று
யிறந்தான்."

எனவும்,

குறிப்பித்துள்ள ஆன்றோர்களின் வாக்கியங்களானது மிகுதியும் கவனிக்கத்தக்கதாகின்றது. இப்படிக்கின்றி எத்தனையோ கோடிபேர்வழிகளில் ஒருவன் மரணாந்தத்தில் அவ்வித நிலைமையை கொள்ளுவானாயினும் அவன் மறுபிறவி இல்லாதானென்பதாக சொல்லக்கூடவில்லை. எப்படியெனில் ஒருவன் தனது ஜீவியகாலமாகிய தேகசஞ்சாரகாலத்திலேயே எதின் சம்பந்தமாயாவது கிஞ்சித்தேனும் பற்றென்பதில்லாமலிருக்குமிலக்ஷணத்தையே சர்வசாந்தியென்றும், முக்தி யென்றும், மறுபிறவி யில்லாத யிலட்சணமென்றும் சொல்லப்படுமேயொழிய ஓர்த்ரணமாத்திரமாகிய நினைவாவதினிற்கில் அப்படிப்பட்டவனை பவப்பிணியானது விடாது. மறப்பும் நினைப்புமே யல்லவா இறப்பும்பிறப்புமாய் இருக்கின்றன. (ஞானஞ்ஞானமென்னு

Koviloor Digital Library

மிரண்டிற்குமப்பாற் பட்டுள்ள தானே தனது சக்தியின் சங்கற்பத்தினால் தன்னை ப்ரஹ்மம் என்று நினைத்ததே சகல தோற்றங்களுக்குங் காரணமாயுள்ள தானதினாலும்) இங்கேயுமொருவன் மரணாந்தத்தை யடையுமவசரத்தில் ஞானஞ்ஞானங்களுக்கு அப்பாற்பட்டுள்ள தானென்று சொல்லு மிலட்சியார்த்தத்திற்கு பொருளாயுள்ள வுயிரானது, தனது சக்தியாகிய மனதினிடத்தில் தன்னை ஞானியென்று கொள்ளுமெண்ணத்தோடு கலந்துள்ளதால் இந்த எண்ணத்தையே யாதரவாக்கிக் கொண்டு ஞானத்தை யடைவதற்கேற்ற மறுபிறவியை யடைதலென்பது நிச்சயமே தவிர,பிறவியே யில்லாமற்போய் விடுவானென்பது நியாயமானதாகக் காணப்படவில்லை.

"இறப்பும் பிறப்பும் பொருந்த எனக்
கெவ்வண்ணம் வந்ததென் றெண்ணியான்பார்க்கில்
மறப்பு நினைப்புமாய் நின்ற வஞ்ச
மாயமனத்தால் வளர்ந்ததுதோழி"

எனக்குறிப்பித்துள்ள ஆன்றோர் வாக்கியங்களை ஆழ்ந்து நோக்கினிதனது கிரமம் விளங்குமென்பது நிச்சயம். இதன்றியில், இந்நிலைமை பாவமானதினாலும், பாவாதீதமே முடிவிடமானதினாலும், ஏகதேசத்திலொருவனிவ்வித நிலைமையையடையப் பெற்றானெனினும், பிறவியை யொழித்து விட்டதாகச் சொல்ல நியாயமில்லை. இத்தன்மையான சக்திகள் யாவும் ஒவ்வொருவருடைய எண்ணத்தினிடத்துமிருப்பதினால் பிரயத்தினப்படுவீர்களேல் உங்களின் யதார்த்தஸ்வரூபமாக நீங்கள் விளங்குதல் கூடும். அப்படிக்கல்லவெனின் இந்த இலக்ஷணத்தை விளக்கிக் கொள்வதற்கு ஆதாரமாயுள்ள மானிடப் பிறவியையேனும் கட்டாயமாய் பெறுதல் கூடும்.

இதன்றியில் சத்சங்கத்தை ஆசரியித்தும் இதில் சம்பந்தப்பட்டும் விசாரபரர்களாயு மதனோடு அப்பியாசபரர்களாயு முள்ளவுங்களைநோக்கி யெவரேனு மொருபெரியர் ஏ தோழர்களே! நீங்கள் விசாரபரர்களாயும் அனுஷ்டானபரர்களாயு மிருக்கின்றீர்களல்லவா? உம்போலிகள் சேர்ந்துள்ள கூட்டத்தை சத்சங்கமென்று சொல்வதிலியாதோர் தடையுங் கிடையாதென்பராயினவ்வாக்கியத்தைச் செவிப்புலனா யேற்ற ஒவ்வொருவருடைய மனது மெவ்வளவு சந்துஷ்டி யடையுமென்பதை நீங்களே யோசிக்கினுங்களுக்கு அது ஸ்பஷ்டமாக விளங்குமல்லவா? ஆயினுமப்பெரியரே யுங்களையு முங்களுக்கு உபன்னிபாச முகமாக விஷபதானஞ் செய்யுமென்னையும் மற்றுமுலகினரையு நோக்கி ஏ குழைந்தைகாள்! உமது காரியங்கள் சத்தைப் பெறு நிமித்தஞ் செய்யப்படும் விசாரவாயிலானதினால் நன்மையுடையதேயாயினும், உலகவியலில் தினமானம் ஒவ்வொருவருக்கு மனுபவசித்தமாயுள்ள ஜாக்கிரத, சுவப்பன், சுழுப்தி எனு மூன்று அவஸ்தைகளிலும், ஜாக்கிரத

Koviloor Digital Library

மாயுள்ள விழிப்பின் காலமட்டிலும் உங்களின் விசாரம் யாவற்றும் நிலைத்து நிற்குமே யொழிய, சற்றே யுரக்கம் வந்தபொழுது நீங்கள் எத்தன்மையா யிருக்கிறீர்களென்று வினவின், அங்கே ஒன்றுஞ்சொல்லத் தெரியாதவர் களாய் பசபசவென்று விழிப்பதைவிட வேறே யொரு சமாதானமுஞ் சொல்ல வகையற்றவர்களாய் நிற்போமென்பது உண்மையல்லவா? ஆ என துயிர்போன்ற ஆப்தர்களே இப்படிப்பட்ட கேள்வியை நம்மீதேற்றிய பெரியர் எவ்வளவு கிருபையுடையவரென்பதனை யோசிக்கினுங்களுக்கே நன்ருக விளங்கும். எப்படியெனில் ஜாக்கிரதம், சுவப்பனம், சுழுப்தி, துரியம் துரியாதீதமென பிரதிதினமும் நாம் அடையு மவஸ்த்தைகள் ஐந்தனுள், சர்வத்ரஸாதாரணமாக ஜாக்கிரத, சுவப்பன மிரண்டுமே அநுபவமாயிருப் பதன்றியில், சற்றே கவனிப்பவர்களுக்கு நன்ருக நித்திரை செய்தேன் என் னுஞ் சுழுப்தியவஸ்த்தையின் ஞானமானது விழிப்பிற்கு வந்தவுடன் காணப்படுகின்றதே யன்றி, அந்த நேரத்திலேயே (சுழுப்தி) பேருரக்க மென்று சொல்லும் நிலைமையிற் காணப்படாமையாலும், கேவலமிந்த சுழுப்தியையே முழு இலட்சணத்தோடு தெரிந்து கொள்வதற்கு சக்கியமில் லாத நாம் அவஸ்தை ஐந்தினிற்குமப்பாற்பட்டு சர்வாதீதமாயுள்ள நாம் நாமாயிருத்தல் அல்லது தான் தானுயிருத்தலென்னும் நனைவிற் சுழுத்தி யென்று சொல்லும் ஜாக்கிறத காலத்திலேயே ஜெகம், ஜீவம், பரம் என்று சொல்லும் மூவகைப் பாகுபாட்டினை யுடைய பேத யிலட்சணங்களையும், ஓர் த்ரணமும் நில்லாது கழித்து சுகாதீதமாகிய நிலையில் சஞ்சார சமா தியை மேற்கொண்டு யெப்படி விவகரித்தல் கூடும். திருஷ்டாந்தமாக இங்கே யோர்வீதியில் ஐந்துவீடுக ளிருக்கின்றதாக வைத்துக்கொள்ளு வோம். இப்படி யிந்த ஐந்து வீடுகளுமடங்கி யிருக்கும் வீதியினோர் கோடியிலிருந்து மற்றோர் கோடிக்கு போகவேண்டியதாயிருந்தால் இந்த ஐந்து வீட்டையும் நாம் தாண்டிப் போகவேண்டிய தவசியமல்லவா? இதைப்போன்று முதல்வீடாகிய ஜாக்கிரதாவஸ்தையையும், இரண்டாவது வீடாகிய சுவப்பனு வஸ்தையையுங் கடந்து மூன்ருவது வீடாகிய சுழுப் தியை யடையுந் துவக்கத்திலேயே நாம் ஒன்றுந் தெரியாதவர்களாய் நம்மை யுமறந்து அயலையுமறந்து அந்தகாரத்திலயித்து மறுபடியும் முதல் வீடாகிய ஜாக்கிரதாஸ்தானத்தில் விழிப்பிற்கு வருகின்ற தினசரி யனுபவமானது விசாரஞ் செய்தவர்களிடத்தும், அஃதின்றியசாமன்யர்களிடத்தும் ஒரே படி த்தாயிருக்கின்றதே தவிர, வேறே யென்ன விருக்கின்றது. நாமிப்படிச் சொன்னதினுல் விசார இலட்சணமும் அனுஷ்டான யிலட்சணமும் மேற் கொண்டுள்ள எமது நண்பர்கள் தங்களை யிழிவுபடுத்தி கூறியதாக நினைத்து நம்மீது யெவருமாயாசப்பட நியாயமில்லை. ஏனெனில், இது உள்ளவனு பவமே யல்லவா? இதனை நீங்களொவ்வொருவரு மாழ்ந்து சிந்திக்கின் இது கிரமமே யென்பதும் இங்கிருந்து மேலே நாம் செய்ய வேண்டிய காரியமே தென்பதைப் பற்றியும் விசாரமுண்டாகாமற் போகாது. ஆனுலுஞ் சிலர்

Koviloor Digital Library

விழிப்பின் காலத்திலெப்படி தங்களை யின்னாரென்று மின்னபேருடையவர்களென்றும் இன்ன ஊரிலின்ன வீதியில் வசிப்பவர்களென்றுஞ் சந்தேகமின்றிய தெளிவோடுங் கூடியிருக்கின்றார்களோ, அப்படியே சுவப்பனமென்று சொல்லும் மனோராஜ்ஜிய விகார விவகார காலத்து மெவ்வகையான சொப்பன வழித்தாயு மயக்கத்தை யடையாமல், ஜாக்கிரத ஞானந்தவறாதற்படிக்கிருக்கு நிலைமையானது விசாரபரர்களாயும் அனுஷ்டான பரர்களாயுமுள்ள அநேகர்களில் யாரோ சிற்சில திடவான்களுக்கு இவ்வித வனுபவமாயிருத்தல்கூடும். ஆயினுமிவ்வித நிலைமையை மேற்கொண்ட பேர்வழிகளும் சுழுப்தியை யடையுந் தருவாயில் அந்தகாரத்தினிடத்தில் லீனத்தை யடைகின்றார்களென்பதில் ஓர் திரணமும் சந்தேகங் கிடையாது. இப்படி இந்த சுழுப்தியின் நிஜ லட்சணமானது எவனால் தெரிந்து கொள்ளுதற்கு சக்கியமில்லையோ அவனால் ஞானத்தை யடைய முடியாதென்பதாக ஸ்ருதிகள் விளக்கிச் சொல்லியுள்ளதை கவனிக்கின் நன்குவிளங்கும். இப்படிச் சொல்லுமிடத்து நாம் நித்திரைக்குச் சென்றால் நம்மை மறக்கின்றோமே யன்றி, அப்படி நித்திரைக்குச் செல்லாவிடின் நம்மை மறக்க ஹேதுவில்லை யல்லவா என்றும் மிதற்கிணங்க

"தஸ்மாத் ஜாக்ரதா ஜாக்ருதஹ."

என ஆசாரிய ஸ்வாமிகள் சொல்லியுள்ளதையுங் கவனிக்கின் சாதகன் துவக்கத்திலிருந்து விவேகனாகுந்தனிலும் (அகோராத்ரம்) இரவு பகலென்று சொல்லும்படியான எல்லாக் காலங்களிலும் நிஷ்டா பரனாயிருந்து தேக நீக்கத்தைப் பெறவேண்டியதாகக் காணப்படுகின்றதென்று சிலர் சங்கிக்கக்கூடும். இதற்கிணங்க ஆசாரிய ஸ்வாமிகளாலருளியுள்ள

"தஸ்மாத் ஜாக்ரதா ஜாக்ருதஹ."

என்னும் வாக்கியப் பிரயோகத்தின் மீதுள்ள நிஜ லட்சணத்தைத் தெரிந்து கொள்ளத் திறனற்ற அநேகர் அகோராத்ரம் நித்திரை யில்லாமல் விழித்துக் கொண்டிருக்கும்படி யானதை தற்காலத்துங் காணக்கூடுமா யுள்ளதினால் நீங்கள் இவ்விதஞ் சந்தேகப்படுவதற்கிடந்தருவதாயிருக்கின்றதாயினும் உங்களுக்கு நித்திரையினிலட்சணமித்தனை வகையாக பிளவுபட்டிருக்கின்றதென்பது தெரிந்திருக்குமாயினிவ்வித சந்தேகத்திற்கிடந்தராது. சாதகன் சதாவிழிப்பிலேயே யிருக்கவேண்டுவது கிரமமென்னு மபிப்பிராயமே ஸ்ரீ ஆசாரிய ஸ்வாமிகளுக்கு உள்ளதென்பது கோட்பாடாயின் அதேஆசிரிய ஸ்வாமிகள் எழுதியுள்ள உடலறிவிளக்கத்தில்

"நித்திரையுற் பனமறியார் நிர்மூடராமே."

எனவும்,

Koviloor Digital Library

"பாங்கான பனிரெண்டும் பதினாறுக்கும்
பதியான முதல்நான்கும் தெரிந்தபோது
நீங்காத நித்திரைவந் துற்றவாறு
நிலையறிந்து பயனுரைப்பார்."

எனவும்,

அருளிச்செய்திருக்க ஹேதுவில்லை. இதனால் ஆசாரிய ஸ்வாமிகளுக்கு சாதகன் சதா ஜாக்கிரதத்திலேயே யிருக்கவேண்டுமென்பது அபிப்பிராய மல்லவென்பதும் எல்லா அவஸ்த்தைகளிலும் அஞ்ஞானமென்னும் நித்திரையானது நீங்கி சுக்ஞானமென்னும் விழிப்பிலிருக்க வேண்டுமென்பது பெறப்படுகின்றதே யல்லது வேறல்ல. அப்படி யல்லவாயின்

"வேர்த்தால் குளித்து பசித்தால் புசித்து விழிதுயின்று
பார்த்தால் உலகத் தவர்போல் இருப்பர் பற்றற்றவரே."

எனவும்,

"தீதிலாச் சமாதி துயிலல்."

எனவும்,

அருளிச்செய்துள்ள மஹரிஷியர்களின் வாக்கியங்களானது வியர்த்தமாகுமென்பது திண்ணம். ஆதலால் நித்திராவஸ்தையானது உண்டென்பதனையும் அப்படி யிருப்பினும் அஞ்ஞானத்தின் ஓர் லேசமும் கலப்பில்லாமல் இருக்கவேண்டியது அவசியமென பெறப்படுகின்றதல்லவா? ஆனாலிப்படிச் சொல்லுமிடத்து விசாரத்தின் திடபுருஷனாயுள்ள ஒருவன் (பாஹ்யேந்திரிய) வெளியிந்திரிய உணர்ச்சிகளுக்கு இலட்சியமாகிய உலக சம்பந்தமின்றி தனது சொரூபத்தை மறவாமல் அந்த நினைவிலேயே நித்திரை செய்து பேருறக்கத்தை யடைந்து திரும்ப விழிப்பிற்கு வரும்போது தனது சொரூப லட்சண மறவாமலேயிருக்கக் கூடுமானதினால், அப்படிப்பட்டவனை அந்தகாரத்தில் லீனமடைந்தவனென்று எப்படிச் சொல்லலாமென்று சிலர் ஆட்சேபிக்கக்கூடும். இப்படி சிலர் இருக்கின்றார்களென்பது உண்மையேயாயினு மிவர்களையு மந்தகாரத்திலீன மடைந்தவர்களாகச் சொல்லவேண்டி யிருக்கின்றதே யல்லது சாட்சாத்காரத்தை மேற்கொண்டவர்களாகச் சொல்ல ஹேதுவில்லை. எப்படியெனி லிவர்கள் விழிப்பிற்கு வந்தவுடனிந்திரியங்களுக் கோசரமாயுள்ள உலகெனுமசத்திலட்சணமானது எண்ணத்தினிடத்தில் வந்து தாக்குறுவதினாலும், அப்படி தாக்குந்தோறுஞ்செய்துள்ள விசாரதிடத்தினால் யிப்படி தாக்கிய அசத்தி லட்சணத்தை நிவர்த்திசெய்து தன்னை சத்தாமாத்திரமாக இலட்சியப்படுத்திக் கொண்டிருப்பதைவிட வேறே காரியமில்லாமையாலும் சத்தாயு மசத்தாயுமுள்ள இரண்டுந் தானாகியு மப்பாலாகியு மிருக்கவேண்டியதே வஸ்துவினி லட்ச

Koviloor Digital Library

ணமானதினுலுந் தன்னை சத்தாகக்கண்டது பிரத்தியட்சானுபவமாயின் தன்னை யொழித்த வேறே அயல் விளங்குகிறதற்கு ஹேது வில்லை யானதினுலும், அப்படிக்கின்றி அசத்திலட்சணமும் விளங்குகின்றபடியால் தன்னைச் சத்தாமாத்திரமாகக் கண்டதென்பது பாவனுமுதிர்வாகிய திடத்தை யொழித்து வேறல்லாமையாலும், பாவனையானது தானல்ல வென்பதும் பாவனுதீதமே தானென்பதையு முன்னரே விளக்கியுள்ளோமானதினுலும், இப்படிப்பட்டவர்களை சுழுப்தியை யுணராதவர்களென்றும் அந்தகாரத்திலேயே லீனத்தை யடைந்தவர்ளென்றுங் கட்டாயப்படுத்திச் சொல்லவேண்டியிருக்கின்றதே தவிற வேறில்லை. ஆனுலும், தினமானஞ் சுழுப்தியைச் சென்றடையுஞ் சாமான்யர்களுக்கு மிவர்களுக்கு மெத்தனையோ தாரதம்ய மிருக்கின்றதாக மிகுந்த பூஜ்யதையோடு நம்போலிகளால் சொல்லிக்கொண்டாடிக் கொள்வதற்கு ஹேதுவாக விருக்கின்றதெனினும், நல்ல விவேகிகளிதனையுஞ் சாமான்யமாக யிழிவுபடுத்திச் சொல்லுகின்றுர்களே யொழிய, சிறப்பித்துச் சொல்வது கிடையாது.

ஏனெனில், எந்த விஷயத்தைமேற்கொண்டாயினுஞ் சரியே, விஷயம் வெவ்வேருயிருப்பினும் பந்தமெனும் பதமும் அதன் கருத்தும் ஒன்றேயாதலால், இவ்வளவு வுன்னத நிலைமையையடைந்தவர்களையும் மஹநீயர்கள் பழித்துச்சொல்வது நியாயமே தவிற, வேறில்லை. அப்படிப்பழித்துச் சொன்னவார்தையானதை நாம் காணுவிடின் இன்னமுமேலாகிய நிலைமையை பெற்றுக்கொள்ளுகிறதற்குயோக்கியதையில்லை யானதினுலுமவர்கள் நம்மை யிழிவுபடுத்திக்கூறியதினின்றும் நமது யதார்த்த நிலைமையைத்தெரிந்து கொள்ளுகிறதற்கு ஓராசையான தெழுகின்றபடியால், அவர்களாற்சொல்லப்பட்டுள்ள பழிப்புகளானது நாம் சொரூப சாட்சாத்காரத்தைப்பெற்றுக் கொள்ளுகிறதற்காகவேண்டி, நிரம்பிய காருண்யத்தோடுங்கூடிய கிருபா நோக்கத்தின் வாக்கியங்களே யல்லது கார்ப்பண்யத்தோடுங்கூடிய த்வேஷ வாக்கியங்களென்று கொள்ளாமல் ஆழ்ந்து யோசிக்கினுண்மையானது புலப்படும். இதன்றியில், சுழுப்தியினிலட்சணத்தைப்பற்றி விசாரிப்பதற்காக ஆரம்பித்தால் ஜாக்கிரத, சுவப்பன விவகாரங்களுக்கு ஆதரவாயுள்ள யிந்திரியஞானங்களை மனது தன்னுளடக்கிக்கொண்டு புரீதத்தி யென்னும் நாடியோடு சம்மந்தப்பட்டு ஹிதா என்னும் ஸ்தானத்தில் மனது சென்றடையுமவசரம் சுழுப்தியென்று வேதோப நிஷத்துகளில் சொல்லியிருக்குமிலட்சணத்தையே சொல்லப்படுகின்றது. இப்படிச் சொல்லுமவசரத்தில் உணர்ச்சியுண்டோவெனில் அந்த நேரத்திற்கிடையாதென்றும், மறுபடியும் ஜாக்கிரதத்திற்கு வந்த பிறகே அந்த உணர்ச்சி யிங்கே காணப்படுகின்றதென்றும், விசாரபரர்களால் ஒப்புக்கொள்ளப்படுகின்றது. எமது மித்திரர்களே! நீங்கள்செய்துள்ள விசாரத்தின் சூக்ஷ்மமே சூக்ஷ்மம். இந்திரியங்களை கிரஹித்துக்கொண்டு அந்தக்கரணமானது இருதய கமலத்

Koviloor Digital Library

தில் லயிக்கிறதென்று ஸ்ருதிகள் படித்த இலட்சணத்தையே குருட்டு பாடஞ்செய்துகொண்டு ஒப்புவிக்கும் உங்கள் திறமையே மிகுந்த அழகுடையது. முதலில் ஜாக்கிரதத்திலிருக்கும்படியான ஓர் புருஷன் சுவப்பனஸ்தானத்தைச்சென்றடையுமவசரம் எந்தெந்தயிந்திரியங்கள் எதினிடத்து லீனத்தையடைகின்றன வென்பதாகிய நித்திரையின் துவக்க இலட்சணத்தையே தெரிந்து கொள்ளசக்தியில்லாத நம்போலிகளால் சில சாஸ்திரங்களைப்பார்த்துள்ளதனையே யாதரவாகவைத்துக்கொண்டு சுழுப்தியின் ஞானத்தைவிவரித்துச்சொல்லுதலென்பது எவ்வளவு தூரத்திற்கு உசிதமாயிருக்கிறதென்பதனை, நீங்களொவ்வொருவருஞ் சீர்தூக்கி யோசிப்பீர்களாயின் உண்மை விளங்காமலிராது.

"புத்தகங்களைச்சுமந்து பொய்களைப்பிதற்றுறீர்
செத்திடும்பிறந்திட மதெங்ஙனென்றறிகிலீர்
அத்தனையசித்தனை யறிந்துநோக்கவல்லிரேல்
உத்தமத்துளாயஜோதி யுணர்வுகண்டொடுங்குமே."

எனக்கூறியுள்ள ஆன்றோர்வாக்கியத்தை யாழ்ந்து கவனிக்கினிதனது சாராம்சம் நன்குபுலப்படும். கல்வி கேள்விகளிலாழ்ந்த திறமையைப்பெற்று விசாரவாயிலாக செல்லுமவர்களுங் கல்வியின் வாசனையேயில்லாது நிரட்சர குட்சிகளாயுள்ளவர்களுந் துவக்கத்தில் நாம் நித்திரைக்குப்போகுமிலட்சண மீதெனக்கண்டுபிடிக்குஞ் சக்தியைப்பெறுவார்களேல், மிகுந்தசுலபமாக சுழுப்தியினிலட்சணத்தைக்கண்டு பிடித்து அந்தச்சுழுப்தியில்லீனத்தைப்பெறாமல் துரியம் தூரியாதீதமென்னுமிலட்சணங்களைத் தெரிந்துகொண்டு சர்வாதீதனுகவிளங்கக்கூடுமென்பதனை ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகள், "ஹே சிஷ்யர்களே" சுழுப்தியிற்சென்றடையுமனதைத்தட்டியெழுப்புங்கோள். அதினின்றும் நிஜலட்சணத்தைத் தெரிந்துகொள்ளும் பாக்கியத்தை பெறுவீர்கள் என்பதாக போதித்திருக்கின்றூரானதினால் நீங்களும் பெரிதும் முயன்றுவது நித்திரையின் துவக்கத்தைக்கண்டு பிடிப்பீர்களாயின் உங்களது நிஜஸ்வரூபத்தைத்தெரிந்து கொள்வதி லெவ்வித ஆட்சேபனையுங்கிடையாதென்பதனை யுங்கள் கவனத்திர்பதியவைத்துக் கொள்ளவும். இப்படி சொல்வதினின்றும் பொய்யாயுள்ளயிதுகளைப்பற்றி நாம் விசாரம்செய்யவேண்டிய அவசியமென்ன? ஜாக்கிரதத்தை நோக்கின் ஸ்வப்பனம் பொய்யாயும் ஸ்வப்பனத்தை நோக்கின் ஜாக்கிரதம் பொய்யாயும் போய்விடுகின்றபடியாலும் பிறப்பு இருப்பு இறப்பு இவைகளும் பொய்யானதினாலும், இதைப்போன்று குரு சிஷ்யனும் வேதங்களும் பொய்யாய்விடுகின்றமையாலு, மிதுகளைப்பற்றி விசாரிப்பதில் நமக்காகவேண்டிய தென்னவென்பதாக சிலர் ஆட்சேபிக்கக்கூடும். இவை யாவும் பொய்யென்பதாக வேதாந்தத்தினிஜலட்சணமாகிய அனுபவ

Koviloor Digital Library

சாட்சாத்காரத்தை ஒருவன் அடைந்தபின்னர் அஜாதவாதத்தின் பூரணயிலட்சணமானது அவன் கருத்தில் விளங்குகின்றபடியால் கௌடபாதரைப்போன்ற அன்னோன் சொல்லுவதற்குக் கூடுமானதேயாயினும் அந்த இலட்சணம் விளங்காதவர்களுக்கு இவையாவும் மெய்யேயென்பதில் தடைகிடையாது. ஆனாலுமிப்படி சர்வமும் பொய்யேயென்றயிவர்கள்மீது ஓர் ப்ரஸ்னை செய்யலாம். அதென்னெனில், யாவுமித்தையெனில் ப்ரஹ்மம் நித்தியமேயாம். இப்படிச்செய்த தீர்மானத்துடன் வஸ்து இரண்டாகுமேயல்லது ஒன்றாகாதல்லவா? "ஏகம், நித்யம், அசலம், பூரணம்" எனும் பிரமத்திற்குரிய இலட்சணங்களில் ஏகத்தினாலனேகமும் நித்யத்தினாலநித்யமும், அசலத்தினாற் சலமும், பூரணத்தினாலோரிடத்திருக்கையும் வாய்க்கப்பெறுகின்றபடியால் யாவும் பொய்யென்று சொல்வது யெப்படியொக்குமெனின் தக்கவாறு சமாதானஞ் சொல்வதற்குக் கஷ்டமாகவே முடியுமென்பதனை அஜாதவாதங் கைதேர்ந்த எமது நண்பர்கள் ஒவ்வொருவரும் கவனிப்பார்களாகவும். நாமரூபங்களுக்கு சம்பந்தமாயுள்ள யாவுமித்தையே! யெனசிலவித்யார்த்திகள் சொல்லக்கூடுமாயினும் நாமரூபத்தையொழித்து வஸ்த்து நிரூபகஞ்செய்யவேண்டும். அப்படிக்கின்றி ப்ரஹ்மம் எனும் நாமமும் ஞானமெனும் ரூபமுமுரியதாயுள்ளது வஸ்து நிர்ணயமானதினால், நாம ரூபாத்மகமாயுள்ள பிரபஞ்சம் மித்தையேயெனில் நாம ரூபாத்மகமாயுள்ள ப்ரஹ்மமுமித்தையேயென விவேகிகள் சங்கைசெய்யக்கூடும். ஆனதினால் மித்தையெது வென்றும் நித்திய மெது வென்று மோதியுணர்ந்து அதன்படி நிற்றலே வித்யார்த்திகளின் கடமையாயுள்ளதினால் அனாவசியமான சங்கையென்று எதனையுங் கைவிடாமலுங் குதர்க்கமென்று எதன்மீதுமாசூயைகொள்ளாமலுந் தக்கவாறு சமாதானந் தேடி அவ்வழிநிற்றல் அத்தியாவஸ்யமாகின்றது. ஆனதினால் நியாயயிலட்சணத்திற்கு மாறுபடாமல் வஸ்து நிர்ணயஞ்செய்தல் வித்யார்த்திகளின் யூகத்திற்கு எவ்வளவு அவஸ்யமாகவுள்ளதோ, அதைப்போன்று சுழுப்தியின் ஞானத்தைப்பற்றி கிரமத்தோடு தெரிந்துகொள்ளவேண்டியதானது அனுபவ இலட்சணத்திற்கு அவசியமாயுள்ளதானதினாற் பெரிதும் முயன்றாவது தெரிந்துகொள்ளுதல் நன்மையைத்தருமென்று நினைக்கின்றேன். இப்படிச் சொல்லுமிடத்து சுழுப்தியின் ஞானத்தைத்தெரிந்து கொள்வதினால் முறையேதுரியமுதல்யாவற்றையுந்தெரிந்து கொள்ளக்கூடுமென்று குறிப்பிட்டிருக்கின்றபடியால் ப்ரஹ்மமுமொன்றே, அதையடைவதற்கேற்றமார்க்கமும் ஒன்றேயெனவும் அம்மார்க்கமீதென விவரித்திருந்த சாதனங்களுக்கு மிப்பொழுது சொல்லிய சுழுப்தியினிலட்சணத்திற்கும் வித்தியாமுள்ளதானதினால் மார்க்கமிரண்டென்பதாக பெறப்படுகின்றபடியால் மார்க்கமனேகமென்று சொல்வதே சரியென்று சிலர் சங்கிக்கக்கூடும். வித்யாபிவிர்த்தியில்லாத எமது தோழர்களில் பிரஹ்ம வித்தையைக்கோறினவர்களுக்கு மாவாக்கியயிலட்சணமு நாதானு சந்தானமும் விளங்குகிறதற்காக

Koviloor Digital Library

வேண்டி சாமான்ய நித்திரையை முன்னிட்டு பெரியோர்களால் சொல்லியிருக்கிறதானதினால் மார்க்கம் ஒன்றேயல்லது. பலவன்றென்பது பெறப்படுகின்றது. இதனை நீங்கள் ஒவ்வொருவரும் யூகித்துணர்ந்துகொள்ளவும்.

இதன்றியில் ஞானத்தைப்பெறுவதற்கு யாவருமதிகாரிகளே யென்று சொன்னதில் ஸ்திரீகளுமிவ்வித சாதகத்திற்கு யோக்கியதையுள்ளவர்களோ? அப்படியுள்ளவர்களாயினவர்களுக்கு பதிவிரதத்தைமேற்கொண்டொழுகுதலைத்தவிற வேறெவ்விதகாரியங்களுங்கூடாதென்றும் அவர்கள் ஞானத்திற்கதிகாரிகளல்லவென்று மிதற்கிணங்க,

> "தெய்வந்தொழாஅள் கொழுநற்றொழுதெழுவாள்
> பெய்யெனப் பெய்யுமழை."

என குறித்திருப்பதன்றியில், ஈஷணாத்திரியங்களி லொன்றாக்கியநேக பெரியோர்களுடைய சாஸ்திரங்களிலு நிந்தைசெய்திருப்பதை நாம் காணுகின்றோமானதிலும், ஸ்திரீகள் ஞானத்திற்கு அதிகாரிகளென்பது ஒப்புக்கொள்ளக்கூடுமோனதாயிருக்கின் அவ்விதம் நிந்தை செய்திருக்கஹேது வில்லையல்லவா? எனவுமுங்களிலெத்தனையோ பேர்வழிகளுக்குசங்கையுண்டாயிருக்கக்கூடும். எமது மித்திரர்களே! அந்தோ! இந்த வபிப்பிராயத்திலு மறிவீனமான செய்கைவேறேயுமுளதோ, நீங்கள் குறிப்பிட்டவண்ணமெல்லாம் பெரியோர்கள் சொல்லியிருக்கின்றார்ளென்பதுண்மையே, ஆயினுமவர்களேனப்படி சொல்லியிருக்கின்றார்க ளென்பதினபிப்பிராயத்தைக்கண்டுபிடிப்பது தான் மிகுதியுங்கஷ்டமாயிருக்கிறது. துன்மார்க்க கிருத்யங்களானது உலகத்தில் மகளிரிடத்து மாத்திரமுள்ளதென்பதாகக் கருதியவர்கள் நிந்தைசெய்திருக்கவில்லை. இருபாலரிடத்தும் துன்மார்க்கம் நிரம்பியுள்ள தென்பது யிவ்விதம் நிந்தை செய்தபெரியோர்களொவ்வொருவருக்குந்தெரியும். உலகவியலை நோக்கினதிகமாகிய துன்மார்க்கசேட்டைகளானது ஆடவரிடத்து நிரம்பியுள்ளதே தவிற, மகளிரிடத்தல்லவென்பது மவர்களுக்குத்தெரியும். அப்படித்தெரிந்திருந்துமந்தப்பகுதியாரையே நிந்தித்துச்சொல்லியிருப்பதின் முகாந்திரமென்னவெனில் தேகதத்துவத்தின் கூட்டுறவில் மகளிர் தேகத்தினுக்கலானது சற்றே நெகிழ்ச்சியின் தர்மத்தையுடையதானதினால் பொதுவாகமகளிரை (அபலைகள்) பலமில்லாதவர்களென்று சொல்லப்படும். இதனாலுமியற்கையாகவே அவர்களை ஞானவதிகளென்று சொல்லியிருப்பதற்கிணங்க ஞானத்திற்கிருபையானது விசேஷித்திருக்குமானதினால் மகளிரின் மனோதத்துவமும் கிருபைக்கு இடமாய் மிகுந்த இளக்கமுடையதாய், பிறரின் பசப்பாகியயேய்ப்பு வார்த்தைகளினால் மிகுந்த சீக்கிரத்திலேமார்ந்துபோய்விடுங் குணமுமுள்ளதினாலிப்படிய பலைகளாயுஞ் சீக்கிரத்திலேமாருமிலட்சணம் வாய்ந்தவர்களாயுமுள்ள மகளிர் கூட்டத்தை ஆடவர்களதிக்கிரமித்து மிகுந்த துன்மார்க்கங்களை மேற்கொண்டு நடவாவண்ணமனேக நீதி சாஸ்திரங்களிற் சொல்லியிருப்பதோடு ஞானசாஸ்த்திரங்களிலும் பலவழித்தாயு நிந்தைசெய்து சொல்லின்

Koviloor Digital Library

இதினாலேனுஞ்சற்றே விரக்தியையடைந்து, ஆடவர்கள் மகளிரிடத்து நடத்துங்கொடுமையைச்சற்றே நிவர்த்தித்து நடந்து கொள்ளக்கூடுமென்றும், ஸ்திரீகளின் மீதுள்ள தயையினாலவர்களை நிந்தித்திருக்கின்றார்களே தவிற, வேறல்ல. இங்கே நீங்கள் சற்றே தயவு செய்து நடுநிலைமையான புத்தியின் தீக்ஷண்யத்தைச் சகாயமாகக்கொண்டு யோசிக்கினக்கிரமச்செய்கைகள் ஆடவரிடத்து மிகுந்துள்ளதா? மகளிரிடத்து மிகுந்துள்ளதா? வென்பது உள்ளங்கைக்கனிபோன்று உங்களொவ்வொருவருக்கும் ஸ்பஷ்டமாக விளங்கும். இவைநிற்க பதிவிரதத்தைத்தவிற வேறேயொரு செய்கையுங் கூடாதென்று பெரியோர்கள் தர்ம சாஸ்திரங்களில் விதித்திருப்பதை நோக்கிசில விவேகிகள் ஸ்திரீகளுக்கு அடிமைத்தனத்தை விதித்திருக்கின்றதே யொழிய ஸ்வதந்திரத்தைத்தரவில்லையென்றும், ஆழ்ந்த கல்விகேள்விகளைப்பெற்றுக்கொள்ளும்படியாகிய வசதிகளையேற்படுத்தி யிருக்கயில்லையென்றும் பழிச்சொல்லுகின்றார்கள். மகளிர்கள் பதிவிரதத்தையே மேற்கொண்டொழுக வேண்டியதென்றால், ஸ்வதந்திர ஹீனர்களாயுங் கல்வி கேள்வி யில்லாதவர்களாயுமிருக்கவேண்டியதென்னு நியமமல்ல. எத்தனையோசாஸ்திரங்களில் ஈஸ்வர யிலட்சணங்களைப்பற்றி சம்பூரணமாகத்தெரிந்து கொண்ட ஒருவனும், அந்தப்பதியாயுள்ள சர்வேஸ்வரனின் பக்கல் விரதமெனச்சொல்லுந் தனது பக்தியைச்செலுத்துவதினின்றுஞ் சற்றே தவறுதலடையக்கூடுமெனின், பதிபக்தியாயுள்ள பதிவிரதத்தை யொரு ஸ்திரீமேற்கொண்டொழுக வேண்டுமாயின், அவள் தர்மசாஸ்திர நீதிசாஸ்திரத்தோடின்னமுஞ்சத்சாஸ்திரங்களிலும் பழகியதற்கிணங்கியசேள்விகளிலும் பழகியபின்னரே பதிவிரதத்தை மேற்கொண்டனுஷ்டிக்க முடியுமேயல்லாமல் மற்றெவ்விதத்தினாலுங்கூடாமையாயிருக்கின்றமையால், பதிவிரதத்தை மேற்கொண்டு ஒழுகவேண்டுமென்றதினாலேயேஸ்வதந்திரத்தையுங் கல்வி கேள்விகளையுமொழித்து விடவேண்டுமென்பதாகக்காணப்படவில்லையல்லவா? இப்படி யிதுகளையொழித்து விடவேண்டியதவசியமாயின் பெண்களினழகைப்பற்றிச் சொல்லிக்கொண்டு வருமவசரத்திலெல்லாவிதத்தாலுந்தன்னைக் காத்துக்கொள்ளுந்திறமையைப் பெற்றிருப்பதேயவர்களுக்குரிய வழியென்றும் மற்றும்,

"அன்னை தயையு மடியாள்பணியுமலர்
பொன்னினழகும் புவிப்பொறையும்—வன்னவுடை
வேசித்துயிலும் விறன்மந்திரிமதியும்
பேசிலிவையுடையாள் பெண்"

எனவு மான்றோர்கள் குறிப்பித்திருப்பதினால் பெண்ணீர்மை யித்தன்மைத்தெனவிளங்குகின்றதல்லவா? இந்தஆறுலட்சணங்களு நிரம்பியிருக்கவேண்டுமாயின் ஆழ்ந்த கல்வி கேள்வியோடு தக்க சகவாசமும் வேண்டுமென்பது பெறப்படுகின்றது. ஆயினும், பெரியோர்கள் பதிவிரதத்தை யவ்வளவு சட்டியப்படுத்திச் சொல்லியிருப்பதின் முகாந்திரமென்னவெனின் மகளி

Koyiloor Digital Library

ரின் தேகதத்துவ யிலட்சணமானது நாபிபிரதேசத்திற்குக்கீழ்புறத்தில் மூலஸ்த்தான மட்டிலும் புருஷதேகவமைப்பைவிட சற்றே வித்தியாசப் பட்டிருக்கின்றதானதினால், முன்சொன்ன ஞானயோக யிலட்சணத்தைப் பெறுவதற்கு யோக்கியதையான குண்டலி சக்தியினுடியினை சுழும்னு நாடியோடுங் குருநாடியோடுஞ் சேர்ப்பிக்கிரதற்கு சிற்சில ஸ்திரீகளுக்குக்கூடுமானதாயு மற்றவர்களுக்குக் கூடாமையாயுமிருக்கின்றபடியால், புருஷபக்தி யென்று சொல்லும் பதிவிரதத்தை யிவர்களுக்குக்கட்டாயப்படுத்தினலதில் பழகிவரும் ஸ்திரீகளிந்தஜென்ம நீக்க நேரத்தில் பதி அல்லது புருஷன் என்னுமெண்ணத்தோடே நீங்கப்பெற்றால்அதற்கு அடுத்தபடியாக

"யத்பாவம் தத்பவதி"

எனும் வாக்கியத்திற்கிணங்க புருஷ ஜன்மத்தையடையப் பெறுவாளானதினாலங்கே யிருந்து மவள் ஞானயோகத்தை மேற்கொள்ள வசதியேற்படுகின்றபடியால் பதிவிரதத்தைக் கட்டாயப்படுத்தி யிருக்கின்றதே யொழிய வேறில்லை யென்பதனை யூகித்துணர்ந்து கொள்ளவும். ஸ்திரீகளில் சிலருக்கு ஞானயோகத்தை மேற்கொள்ள ஹேதுவானசுழும்னுவைத்திறந்து கொள்ளக்கூடுமென்றும், சிலருக்குக் கூடாதென்றுஞ் சொன்னதின் முகாந்திரமியாதெனில் முன்னே குறிப்பித்துள்ள குண்டலி நாடியின் முடியானது புருஷர்களுக்கிருப்பதைவிட சற்றே மேல் பாரிசத்திலேயே ஸ்திரீகளுக்கு நின்றுவிடுகின்றபடியாலிந்த முடியின் கீழ்மடிந்துள்ள குண்டலி சக்தி யென்னும் நாடியானது கீழ்நோக்கியவண்ணம் நீட்சியை யடைந்தபொழுது; புருஷரூபத்தில் குருநாடியோடும் சுழும்னு நாடியோடும் சம்பந்தமாகிய சந்திப்படைவதைப்போன்று அடைவதற்கு ஹேதுவில்லாமல் ஸ்திரீரூபத்தில் சற்று மேல்பாரிசத்திலேயே தங்கிவிடுகின்றது. அப்படித் தங்காமல் சந்தியடைய வேண்டுமேயாயின் ஸ்திரீகள் மேற்கொள்ள வேண்டிய ஓர் அப்பியாசமிருக்கின்றது. அதனைக் குழந்தைப் பருவமுதலே விடாது அப்பியசித்துக் கொண்டுவருபவர்களாயின் அப்படிப்பட்ட சிற்சிலருக்கே இந்த யிலட்சணமடையப் படுகின்றதே தவிற, மற்றையர்களாலாகின்றதில்லை. அந்த அப்பியாசமியாதெனிலிடையைச் சுருங்கச் செய்தலேயாம். இப்படி யிடை சுருங்க வேண்டுமாயின் குழந்தைப் பிராயமுதலிலிருந்தே பெண்களுக்கு கொப்பூழென்று சொல்லும் நாபியானது வெளியில் தெரியாத வண்ணம் வஸ்திரம் உடுத்தும்பொழுது நெருக்கிப் பிடித்திழுத்துக் கட்டுவதினாலிதின் சகாயத்தால் முன்னே சொல்லியுள்ள குண்டலி முடியானது முன்னிருந்த ஸ்தானத்திலிருந்துஞ்சற்றே கீழிரங்குகின்றது. இதிப்படியிரங்குவதினால் குண்டலி சக்தியென்று சொல்லும் நாடியின் மடிப்புகளானது நீட்சியை யடைந்தவுடன் முன் சொன்ன விதம் சந்திசெய்து கொள்ளத்தக்க வசதியேற்பட்டு விடுகின்றது. இப்படி நெருக்கிக்கட்டு மப்பியாசத்தினலிடையானது நெருங்கி துவட்சியடைந்து நிற்குமிலட்சணத்தையு மடைகின்றது.

Koviloor Digital Library

" உண்டிசுருங்குதற் பெண்டிற்கழகு "

எனக்குறிப்பித்துள்ள ஆன்ரோர் வாக்கியத்தை யாழ்ந்து கவனிக்கினிதனதி னிலட்சணம் செவ்வனே புலப்படுவதன்றியிலொவ்வோர் குடும்பத்திலுள்ள பெரியோர்கள் பெண்குழந்தைகளாயுள்ளதுகளை யிடையில் வஸ்திரத்தை வலிந்துகட்டும்படி செய்தலையும், ஸ்திரீகளுக்கு மேல்வயிரடி வயிறென்னும் பிரிவினையோடிருக்கவேண்டு மென்பதனைக் கற்பித்துத்தருவதையு முலகவ ழக்கில் நாம் நாளைவரை காணக்கூடும். அன்றியில், ஸ்திரீகளின் மற்றைய அவயவ யிலட்சணங்களைவிட யிடையினிலட்சணத்தைப் பற்றி விசேஷப் படுத்திச் சொல்லியிருப்பதனை நீங்கள் சாமுத்திரிகா சாஸ்திரத்தை நோக்கி யென்தகிரமத்திற்காக யிவ்விதஞ் சொல்லியிருக்கிறதென்பதனை யோசிக்கி னுணரலாகும். ஆகவே பதிவிரதத்தை யவ்வளவு கட்டாயப்படுத்திச் சொல்லி யிருக்கிறதை நீங்கள் யோசிக்கினுண்மை புலப்படும். ஆண், பெண் ணென்னு மிருபாலர்களுள் ஞானயோகத்திற்குரிய யிவ்வித்தியாசத்தை யொழித்து மற்றைய கர்ம, பக்தி தியானங்களில் யாதொரு வித்தியாசமுமி ன்றென்பதும், சமானஸ்தர்களே யென்பதும், கவனித்தற்குரியதாம்.

இதன்றியில் இங்கே குறிப்பித்துள்ள சாதனங்களை யொழித்து இதனி லும் தாழ்ந்தபடியான அநேக சாதனங்களும், அவைகளையே இதுதான் ஞானமென்று கருதி சாதித்துக்கொண்டு போகும் எத்தனையோ ஆயிரம் பேர்களும் இருக்கிறார்கள். அவைகளையும் விளக்கிச்சொல்லவேண்டுமாயின் மிகவும் விரிவுபடும், ஆதலாலும் சாவகாசத்தைப் போன்று அவைகளை நீங் களே தெரிந்துக் கொள்ளுதல் மிகுந்த சுலபமாயிருக்குமாதலாலும், மானு ஷ்ய ஜன்மத்தில் வந்த நாம் எதனைத்தெரிந்துக்கொள்ளுதல் மிகவும் அவசிய மானதோ, அதனை சவிஸ்தாரமாயும் மற்றை யவைகளில் சிலவற்றை சுருக்க மாயும் விளக்கியிருக்கின்றேன். இதில் நின்றும் சாந்தியை யடைவதற்கு எது முக்கியமாகக் காணப்படுகின்றதோ, அதனை மேற்கொண்டொழுகி சாந் தியைப் பெற்றுக்கொள்ளுதலே சத்சங்கத்தை ஆஸ்ரயித்த ஒவ்வொருவருக் கும் முக்கிய கடமையாயுள்ளது. எமது நேயர்களே! மேலே குறிப்பிட்ட பலவிதச் சாதனங்களிலும் பழகிக்கொண்டிருப்போருக்கு மனநிச்சலமும் ஆனந்த இலக்ஷணமும் விளங்குகின்றதென்பதில் தடையேகிடையாது. ஆயினும், இந்த நிச்சலபதத்திற்கும், ஆனந்த பதத்திற்கும் எது உண்மையான அர்த்தமோ, அந்த இலக்ஷணமானது அமனஸ்கத்தை யடைந்த பின்பு அன்றி சதோதயமாக நிற்றல் கூடாமையால் அந்த நிரதிசயதிருப்தியை யாவரும் அடைவதற்கு ஏற்ற உபாயத்தை கண்டுபிடித்தொழுகுமாறு வேண்டுகின் றேன். இதனை யடைவதற்கு இன்னார்தான் தகுதியுடையவர்கள், இன் னார்தான் தகுதியற்றவர்கள் என்னும் பாகுபாடானது அநேகம்பெரியோர் கள் கையாடியதேயாயினும் இதைச்சொல்லி வந்துள்ள இவனின் சம்மதி மாத்திரம் அப்படிக்கில்லை யென்பதனையும், உலகத்தில் எல்லா வருணத்தா ராலும் எல்லா ஆஸ்ரமத்தாராலும், ஆண், பெண் என்னும் இருவகை பேத

Koviloor Digital Library

மின்றியே அநுஷ்டித்தல் கூடுமென்பதுதான் துணிபு. தகுதியை நோக்கி போதனுக்கிரம மாத்திரம் பேதப்பட்டிருக்கின்றதே யொழிய, அனதிகாரிக ளென்று சொல்லுவதற்கு எந்த வகையினாலும் நியாயமானது இடந்தரவில்லை. நாம் இப்படிச் சொல்வதினால்,

> "இயற்கைகுணம்சோதித்து முன்னேபின்னே
> யாவையுமாம்பிரமம்நீயென்னல்வேண்டும்."

என, ஆன்றோர்கள் கூறியுள்ளதற்கு நேர்முரணாக இருக்கின்றதென்று அநேகர் ஆட்சேபிக்கக்கூடும். ஆயினும் இவர்கள் குறிப்பிட்டுக் கொண்டபிரகாரம் பரிபாகி, அபரிபாகி யென்னும் இரண்டு பகுதியான சீடர்களிலும் நீ பிரமம் என்னும் வாக்கியத்தை ஆசிரியர் சொல்லக் கேட்டவுடனே, எவனும் பிரமமாய் விடுகின்றதில்லை. இதில் ஓர் திரணமாத்திரமாவது சந்தேகமே கிடையாது. ஆனால் எப்பொழுது பிரமமாகின்றான் என்னில் அதற்கேற்ற சாதனுக்கிரமத்தை மேற்கொண்டபொழுது அவ்வண்ணமாதல் கூடும். பரிபாகியென்று சொல்பவன் புத்தி தீக்ஷணியத்தோடுங் கூடியுள்ளவனாகையால் சுருக்கமான காலவளவிலும் மற்றையன் (புத்தியின் மந்த கெதியுள்ளவன்) சற்று நீடித்த காலஅளவிலும் மேற்கொள்ளல் கூடும். இதனை யொழித்து வேறே வித்தியாசம் என்னை யுள்ளது! நீ பிரம மென்றதினாலேயே ஒன்றும் ஆய்விடுகின்றதில்லை யல்லவா? இதனையே ஆதாரமாகக் கொண்டு யோசிக்கின் நீ பிரமமென்று சொல்ல வேண்டிய அவசியமில்லை என்பது பெறப்படுகின்றதல்லவா? பிரமமாவதற்குறிய வழியை மாத்திரம் சொல்வதினால் அதைமேற்கொண்டு செல்லுபவன் முடிவில் நீ பிரமமென்று தன்னையாரும் சொல்லுவதற்கில்லாமலே தானே பிரமமாய் விளங்குகின்றான் என்பதில் எவ்வித சந்தேகங்களுமே கிடையாது. பக்குவமில்லாதானுக்கு ஞானபோதனையைச் செய்த ஆசிரியனும், அதனைப்பெற்ற சீடனுமாகிய இருவரும் மீளாநரகத்தை எய்துவர்களென்று சொல்லியுள்ள சிலபூர்வபக்ஷவாக்கியங்களைக்கண்டு மிரக்ஷியடையும் அநேகர் உண்டு. ஒரு வித்தியார்த்தி தானே பக்குவமடைய வேண்டுமா? அல்லது போதகரின் சகாயத்தால் பக்குவமடைய வேண்டுமாவென்பதனை, தற்காலத்தும் வித்தியாசாலைகளை கவனிக்கின் இந்த கருத்தானது நாம் ஒன்றும் சொல்லாமலே நன்கு விளங்கும். போதகம் செய்த இவர் நரகத்தை யடைவரெனில் அந்த வாக்கியமானது விந்தையினும் விந்தையே. இரண்டு, ஒன்று என்று சொல்லும் இரண்டம்சங்களையும் பேதவாதமெனக் கழித்து அபேத வாதத்தில் நிலைத்து; யாவும் தானாகியும் அல்லவாகியும் நின்ற நிறைந்த அனுபவானந்தத்தை யடைந்தவனாயினுஞ்சரியே, அதற்கதீதனாயினுஞ்சரியே. இத்தகைய புருஷோத்மர்களான ஆசிரிய சிரேஷ்டர்கள் எந்த நரகத்தைக்கண்டு அஞ்சினர்கள் என்பதும் ஜகஜீவபரமாகச் சொல்லும் எந்த நரகத்தில் தான் இல்லாதிருக்கக்கண்டு பயந்து உண்மையை போதிக்க அஞ்சினார்களென்பதும்

Koviloor Digital Library

நமக்கு விளங்கவில்லை. ஹே வித்தியாத்திகளே ! இதின் முடிவை நீங்களே சுலபமாக முடித்துக் கொள்ளுங்கள்.

" காகமுறவு கலந்துண்ணக் கண்டீரகண்டாகாரசிவ
போகமெனும்பேரின்பவெள்ளம் பொங்கித்ததும்பிப்பூரணமா
யேகவுருவாய்க்கிடக்குதையோ வின்புற்றிடநாமினியெடுத்த
தேகம்விழுமுன்புசிப்பதற்குச் சேரவாருஞ்செகத்தீரே."

என குறிப்பித்த முதியோர், எந்தத்தக்கார் தகவிலரெனும் பாகுபாட்டை மேற்கொண்டு சொல்லினரென்பதை சற்றே கவனிக்கின் விளங்கும். ஆன தினால் ஒவ்வொருவருக்கும் ஞானத்தையடையும் அதிகாரம் உண்டென் பதை மறந்துவிடாமல் இந்தயாக்கையானது நழுகுவதற்கு முன்னரே முயற் சிப்பதில் தளர்வையடையவேண்டாம். தளர்வடையாது செல்வீரேல் அப்படிச் செல்லுபவர்கள் எல்லாம் இந்த உன்னத நிலைமையையடைவீர்க ளென்பது என்னுணையாக நிச்சயம். இதில் சம்சயமே கிடையாது.

எமது தோழர்களே, இன்னமும் நான் உங்களுக்குச் சொல்ல வேண் டிய விஷயங்களில் முக்கியமான ஒருகருத்தை சொல்லிவிட்டு சத்சங்க போதினியெனும் உபனியாசத்தின் ஞானயோக இலக்ஷணத்தின்பகுதியை முடித்து நிறுத்துகின்றேன். அந்த முக்கியமான விஷயம் யாதெனில் மந்திரயோகமுதல் அமனஸ்கம்வரையில் உங்களில் சிலர் அடைதல்கூடும். இப்படி நீங்கள் அடைந்த பின்னர் இதே அமனஸ்க இலக்ஷணத்தை யடையப்பெற்று கிரகஸ்தாச்சிரமத்திலுள்ளவர்களாயும், சந்நியாஸாஸ்ரமத் திலுள்ளவர்களாயும், உலக விவகார மற்றவர்களாயும், உலக விவகார முள்ளவர்களாயுமுள்ள அநேக மஹநீயர்களை நீங்கள் சேவித்தல் கூடும். அப்பொழுது உங்கள் இருபாலரின் சித்விலாசமான அனுபவ நுட்பங்களைக் குறித்து வார்த்தையாட நேரிடுங்கால் சிலர்கள் இந்த பஞ்சயோக இலக்ஷ ணபிரகாரமும், சிலர்கள் அடயோகமுதல் நான்கு இலக்ஷணப் பிரகார மும், சிலர்கள் லயயோகமுதல் மூன்றின் இலக்ஷணப்பிரகாரமும், சிலர்கள் இராஜயோகமுதல் இரண்டின் இலக்ஷணப்பிரகாரமும் முடித்தவர்களா யிருப்பார்கள். இதனிலும் இராஜயோகத்தில் சிலர்கள் இருதயமுதலும் சிலர்கள் மூலஸ்தானத்தில் குரு சேவைமுதல் கொண்டும், சிலர்குருசேவை யில்லாமல் மூலஸ்தானத்திலிருந்தும். சிலர் அர்த்தாரூட நிலைமையில் இருந் தும், சிலர் பிரமநிஷ்டையே முதலும் தங்கள் துவக்கமாகச் சொல்லுவார்கள். அப்படி அவர்கள் சொல்லும்போது உங்களுக்கு மிதமற்ற சங்கையானது உண்டாதல் கூடும். அதையே ஆதரவாகக்கொண்டு நீங்கள் ஒருவரோ டொருவர் மனஸ்தாபமடைதலுங் கூடும். இந்த இலக்ஷணத்தை யொருவன் அடைவதற்கு பஞ்சதீக்ஷாக்கிரமும் மறுக்கக்கூடாத உண்மையேயாயினும் ஜென்மாந்திரங்களில் எங்கே, எங்கே அப்பியாசத்தில் நிற்குங்காலத்தில் தேகயாத்திரையானது முடிந்து விட்டதோ; அவன் அங்கேயிருந்தே ஆரம்பிக்கின்றான். எதேனும் ஓர் புஸ்தகத்தை வாசிக்கிறதற்காக ஆரம்பித்த

Koviloor Digital Library

ஒருவன் அன்றையதினம் சில பக்கங்களை முடித்து விடுகிறான். மறுநாள் வாசிக்க ஆரம்பிக்கும் பொழுது நேற்றையதினம் விட்ட இடத்திலிருந்தாவது சில வரிகளின் முன்னிருந்தாவது வாசிக்க ஆரம்பிக்கின்றதானது உலகபிரசித்தமேயன்றோ? இதைப்போன்றே இந்த சாதகத்திற்குரிய ஒவ்வொருவரும் இவ்வண்ணமேயென்பதனை நீங்கள் கவனிக்கவும். இப்படி பிரமநிஷ்டையின் அனுபவ இலக்ஷணங்களில் ஒருவன் நிலைத்து நின்றும் அமனஸ்கத்தையடையத்தவறின் பிரவியானது ஒழியாது. ஒருவன் எத்தனையோ ஜென்மங்கள் பிரமநிஷ்டையிலேயேவந்து போய்விடுதல் கூடும். இதற்குமுன் ஒருவன் அப்பியாசித்திருந்தவரையில் மிகுந்த சுலபமாகவே விளங்கி மேலேயடையவேண்டிய கிரமத்திற்காக கஷ்டப்படவேண்டியவனாகவிருக்கின்றான். துவக்கத்திலிருந்து போகவேண்டிய ஒருவன் அதிக ஊக்கத்தோடும் கஷ்டத்தோடும் போகவேண்டியவனாயிருக்கின்றான். பிரமவேத்தாக்களில் மஹாதீரபுருஷனாலேயே அமனஸ்கமானது அடையப்படுமேயொழிய மற்றையர்களால் அடைதல் கூடாமை. பிரமநிஷ்டையிலேயே எத்தனையோ ஜென்மங்கள் வந்து போயும், அமனஸ்கத்தையடைவது துர்லபமாய்விடும். ஆகவே இந்த அபிப்பிராயத்தை ஆயிரம் பேர்களிலொருவன் குருவைத்தேடுவானென்றும் அப்படிக்குருவைத்தேடிய ஆயிரம்பேர்களில் ஒருவன் சிரவணத்தில் நிலைப்பானென்றும், இப்படி நிலைத்த ஆயிரத்தில் ஒருவன் மனனத்திற்கு வருவானென்றும் இப்படிப்பட்டவர்கள் பதினாயிரத்திலொருவன் சூட்சுமவிசார இலக்ஷணம் உணர்ந்து பிரமநிஷ்டாபரனாயிருப்பானென்றும், அப்படிப்பட்டவர்களில் கோடியில் ஒருவன் சாக்ஷாத்காரத்தை மேற்கொள்ளுவனென்றும், அப்படிப்பட்ட அநேகர்களில் எவனோ ஒருவன் தனது அபிப்பிராயங்களை பிறனுக்கு வெளிப்படுத்துவனென்றும், வித்தையின் அருமையானது விளங்க

"த்ரைலோக்யே க்ஞானி துர்லபம்"

என பகவன் கிருஷ்ண பரமாத்மாவினால் இந்த பிரமவித்தையை பூஜித்துச் சொல்லியிருப்பதை நீங்கள் கவனிக்கவும். உலகத்தில் ஒரு கிருஷிகன் தானியங்களை விதைக்கட்டி தெளிக்கும்போது கரம்பிலும், வெளிமேட்டிலும் பாறைகளிலும் மற்றும் சில பகுதிகளிலும் சில விதைகளானது தெளித்துப் போய்விட அதுகள் ஒன்றும் பலிதத்தைத்தராமல், பண்படுத்திய நிலத்தில் விழுந்த விதைகள் மாத்திரமே பலிதத்தைதருவது உலகானுபவசித்தமாயிருப்பதைப்போன்று, மாவாக்கிய இலக்ஷணமாகிய பிரமோபதேசமென்னும் விதையுஞ் சில இடங்களில் பயன்படாமல் போய்விடுமென்று நீங்கள் கருத வேண்டாம். இந்த பிரமோபதேசமானது உத்தமஸ்தானத்தில் உடனே பலிதப்பட்டும் மற்றையஸ்தானங்களில் உள்ள குற்றங்களை நீக்குவதற்கு நிலத்திலுள்ள குற்றங்களை நீக்கும் எருப்போல்நின்று இங்குள்ள குற்றங்களையும் நீக்கி மேல் விதையாயிருந்து முளைத்துப்பயன்தரும். இந்த அற்புத சக்தியானது பிரமோபதேசமென்னும் விதையினிடத்தில், பொருந்தியிருப்பதால்

Koviloor Digital Library

அதனை யெங்கே தெளித்தாலும் பயனைத்தருமேயல்லது, எந்த விதத்தினு லும் நாசத்தையடையுமியல்பையுடையதல்ல வென்பதனை நீங்கள் மதித் துக்கொள்ளவும். அன்றியில் உலகத்தில் பெரியோரென்று சொல்லின் அவ ரிடத்தே என்ன மகத்துவமுடையதென்று கேட்கும் சாமான்ய திருஷ்டி களைப்போன்று உங்களில்யாரும் ஆய்விடாதீர்கள் முதலில் உங்களிடத்துள்ள மகத்துவத்தை நோக்குங்கள். அதில் தெளிவையடைவீரேல் பெரியோ ரிடத்து மகத்துவமிருக்கவேண்டியது அவசியமா? இருக்கவேண்டியது இல் லையா? என்னும் இந்த சங்கையானது உங்களிடம் நில்லாமலேயொழிந்து போய்விடும். மகத்துவத்தை விரும்புவதிலும் நீச்சத்துவமான காரியம் உலகத்தில் வேறே கிடையாது. குருத்வம் தனக்கு வேண்டுமென்று கருதிய ஆசிரியனும் மனதில் குருபக்தி நிரம்பியில்லாத சிஷ்யனுமாகிய இந்த இருதிறத்தாரும் எவ்வளவு விசேஷப்பட்டவர்களாயினும் அவர்கள் நீச்சத்துவமுடையவர்களே! என்பதுடன், பிரமவேத்தாக்களால் மிகுந்த தாழ்ந்தவர்களாகவே கருதப்படுவார்களென்பதும், மறவாமற்கொள்ளவும். இதுவரையிலும் சொல்லிவந்ததில் நாம் எந்த மார்க்கத்தையேனும் எவர் அப்பியாசத்தையேனும் பழித்துக் கூறியதாகக்கொள்ளவேண்டாம். இவ் வகை மார்க்கப்பழக்கமும் அப்பியாசகிரமமும் என் செய்யவேண்டியது என் பதின் முகாந்திரமும் ஞானத்தையடைவதற்கு சககாரிகளாய் எவ்வகைக்கிர மங்கள் ஜென்மாந்திரஸ்மிருதியில் ஒட்டிக்கிடந்து முளைத்து பயன்தருகின் றன என்பதும் எனக்குத்தெரியும். அவித்தையை நீக்கம் செய்து வித்தை யின் சம்பூர்ண இலக்ஷணத்தை ஒவ்வொருவரும் பெறவேண்டியது அவசிய மாயிருப்பதைப்பற்றி இதுதான் வித்தை, இதுதான்வித்தையென்று மயங்கிக் கிடப்போரின் மயக்கமானது நீங்கி மேலுள்ள இலக்ஷணத்தைத்தெரிந்துக் கொள்ளவேண்டிய உச்சாகமுண்டாகும்படி தூண்டியதே தவிர, வேறின் றும். வித்தியார்த்திகள் இதனைக்கண்ணுறும்போது தாங்கள் செய்துள்ள பழக்கங்களுக்கும் மேற்கொண்டுள்ள மதங்களுக்கும் விரோதமாக இருக்கிற தென்று கருதி, அதினுல் மனதிலெழும்பும் குரோதம், துவேஷமாதிய உணர்ச்சிகளினுல் திகைத்து நின்று போய்விடாமல் சற்று சாந்தத்தோடு முழுவதும் வாசித்து ஆழ்ந்துயோசித்து கிரமத்தை மேற்கொண்டு உய்யுமாறு சத்சங்கத்தையடைந்த சத்துக்களின் ஸ்ரீ பாதங்களை நமஸ்கரித்தும் ஸ்ரீ குரு நாதனின் ஸ்ரீ பாதகமலங்களை எனது இருதயத்திருத்தியும், சிதாத்ம சொரு பமாகிய திருவருளை முன்னிட்டு ஆரம்பித்தசத்சங்க போதினியெனும் உபன் நியாசத்தின் ஞானயோக அத்தியாயத்தை இத்துடன்முடிவு செய்கின்றேன்.

(இன்னும் வரும்.)

சிவலிங்கதேசிகன் திருவடிவாழ்க.

இந்தப்படிக்கு

☞ சிவலிங்கனடிமை நிரதிசயானந்தா.

குற்றம் உலகம் பொருக்க.